# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

1987 மே 5, செவ்வாய்க்கிழமை

சித்திரை 22, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம் படைக்கு".

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள்

587—(*வினா எண் 7861) **திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன.

வெளியீடு 16-5-1988 Issued 16-5-1988

2486

524/AC/88

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 5, 1987-தொகுதி 42-எண் 3

Tuesday, the 5th May 1987 Volume 42-No 3.

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George, Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3.00 paise

D
V211_31 N87
N87.42.3

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்
136531
சென்னை-600 008.

## உள்ளடக்கம்.

—5—

பக்கங்கள்

1 வினாக்கள்—விடைகள்—
உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. .. 579—618

2 அறிவிப்புகள்—
(அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை—உறுப்பினர்கள் தேர்தல் .. 618—619
(ஆ) அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் நியமனம் .. .. .. .. 621—622
(இ) மதுரை-காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையின் உறுப்பினர்கள் தேர்தல் .. 622
(ஈ) திருமதி இந்திரா காந்தி கொலை முயற்சி வழக்கில் இரண்டு உறுப்பினர்களுக்கு தண்டனையளிக்கப் பெற்றது குறித்த நீதிமன்றத் தகவல் .. .. .. 721—722

3 தகவல் கோரல்—
வினாக்களுக்கு விடைகள் அனுப்புவதில் துறைகளில் ஏற்படும் தாமதம் .. .. 619—621

4 அறிக்கை அளித்தல்—
சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. .. 623

5 அரசினர் சட்ட முன்வடிவு—
தொழுநோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவு, 1987 .. .. 623

6 வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு தொடர்ச்சி
(அ) கோரிக்கை எண் 15 — காவல்துறை—தொடர்ச்சி. 623—721
(ஆ) கோரிக்கை எண் 16 — நீதிநிர்வாகப் பணிகள்—தொடர்ச்சி.
* திரு. கு. ரமணி 623—642
திரு. என். எஸ். வி. சித்தன் 642—670
மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் 670—718

7 பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 723

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

---

1987 மே 5, செவ்வாய்க்கிழமை

**சித்திரை 22, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"மறம்மானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
என நான்கே ஏமம்படைக்கு".

வீரம், மானம், சிறந்த வழியில் நடக்கும் நடக்கை, தலைவரால் நம்பித் தெளியப்படுதல் ஆகிய நான்கு பண்புகளும் படைக்குச் சிறந்தவையாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள்

587—(*வினா எண் 7861) **திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம், திருத்தங்கல் நகரில் நின்ற நாராயணப் பெருமாள் கோவிலைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு விட்டன.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நின்ற நாராயணப் பெருமாள் கோவில் ஒரு பாடல் பெற்ற ஸ்தலமாகும். அங்கு ஒரு தனி நபர் பன்றிகளை வளர்த்துக் கொண்டு, அந்தக் கோவிலினுடைய புனிதத்தைக் கெடுக்கின்ற அளவிலே, ஆக்கிரமித்துக் கொண்டு—அவை அகற்றப்படாத நிலையில்—கடைகளைக் கட்டி, வாடகைக்கு விட்டிருக்கிறார். அதனை உடனடியாக அகற்றுவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நின்ற நாராயணப் பெருமாள் கோவிலுக்குத் தெற்கே 1982 ஆம் ஆண்டு முதல் உள்ள 7 ஆக்கிரமிப்புகளுக்கு பி.எம். நோட்டீஸ் வழங்கப்பட்டு தண்டத் தீர்வையும் வசூலிக்கப்பட்டு வரப்படுகிறது. வடக்கே உள்ள 15 வீடுகள் மற்றும் கூரை ஷெட்டுகளுக்கு திருத்தங்கல் பேரூராட்சியிலிருந்து வரி விதிக்கப்பட்டுள்ளது. எனவே, அவற்றால் பிரச்சினை எதுவும் இல்லையென்று குறிப்பு தந்திருக்கிறார்கள். தனிப்பட்ட ஒருவர் ஆக்கிரமித்து கடைகள் கட்டி வாடகை வசூலித்து வருகிறார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடிதம் மூலம் எனக்குத் தெரிவிப்பாரானால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. வை. பாலச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வியிலே குறிப்பிட்டுள்ள திருக்கோவில் மட்டுமல்ல, தமிழகத்திலே மிக முக்கியமான திருக்கோவில்களின் அருகில் உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான நிலங்களைப் பல பேர்கள் ஆக்கிரமிப்பு செய்து கடைகள் கட்டி விட்டுள்ளதால், அங்கு அந்தக் கோவிலினுடைய புனிதத்தைக் கெடுக்கிற வகையில் பல்வேறு வேலைகள் நடக்கின்றன. உதாரணமாக, சில ஆலயங்களுக்கு அருகில் இந்த ஆக்கிரமிப்பாளர்களது கடைகளில் இறைச்சி மற்றும் கறி வியாபாரம் செய்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, தமிழகத்திலே ஆலயங்களுக்கு அருகிலே இருக்கிற உள்ளாட்சி அமைப்புகளுக்குச் சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்து அந்த ஆக்கிரமிப்பால் கோவிலின் புனிதத்தைக் கெடுக்கிற வகையில் வேலைகள் நடைபெறுவதைத் தடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, என்ன வியாபாரம் செய்கிறார்கள் என்பது கூட அல்ல, ஆக்கிரமிப்பாளர்கள் அகற்றப்பட வேண்டும். அதில் அரசு உறுதியாக இருக்கிறது.

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட பகுதியைப் பேரூராட்சிகளுக்குக் கொடுத்தால் அங்கே அங்காடிகள் கட்டி அந்தப் பேரூராட்சியினுடைய வருமானத்தைப் பெருக்குவதற்கு வசதியாக இருக்கும். எனவே, அந்த இடங்களைப் பேரூராட்சிகளுக்குக் கொடுப்பதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, நல்ல யோசனை.

## இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிய அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி.

588—(*வினா எண் 9283) **திரு. கா. சொர்ணலிங்கம்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் புதிதாக அரசு தொழிற் பயிற்சிப் பள்ளி திறவும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

(இ) எங்கு அமைக்கப்பட இருக்கிறது?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) 1—7—1986 நாளிட்ட வேலைவாய்ப்பு பணித் துறை அரசு ஆணை எண் 175-ல் இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரத்தில் ஒரு புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவங்க ஆணை பிறப்பிக்கப்பட்டு அந்த இடத்தில் பயிற்சி நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது.

[1987 மே 5

**கொடைக்கானல் மலையில் இலங்கை அகதிகளுக்கு ரேஷன் கார்டு வழங்கல்.**

589—(*வினா எண் 10601) **திரு. கு. ரமணி :** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் மலையில் கூப்புகளில் காண்டிராக்டர்களின் கொத்தடிமைகளாகப் பணி செய்து வருகிற இலங்கை அகதிகள் சுமார் 500 குடும்பங்களுக்கு ரேஷன் கார்டே இல்லாமல் இருந்தது என்ற செய்தி அரசின் கவனத்திற்கு வந்ததா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) அப்பகுதிகளில் குடும்ப அட்டை வழங்கப்படாமல் இருந்த 157 இலங்கை அகதிகள் குடும்பங்களுக்கு 1986 ஜூன் மாதத்தில் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன.

**திரு. கு. ரமணி : தலைவர்** அவர்களே, இந்தக் கேள்வி போட்டு நீண்ட நாட்களாகிவிட்டது. பிரச்சினை கிட்டத்தட்ட முடிந்த பிறகுதான் இந்தக் கேள்விற்குப் பதில் வருகிறது. இந்த 500 குடும்பங்களுக்கு அங்கே ரேஷன் கார்டு கிடைக்கவில்லையென்ற செய்தி அப்பொழுது வந்தது. ஆனால், உண்மையாக எவ்வளவு இலங்கை அகதிகள் அந்த வட்டாரத்திலே அந்த காண்ட்ராக்டரின் கீழ் இருக்கிறார்கள்? அதில் 157 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்கள். அது போக இன்னும் பல குடும்பங்களுக்கு அட்டைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, மொத்தம் 303 குடும்பங்களுக்குத் தரப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் 157 ; மற்ற பகுதிகளில் 146 ; யாரும் விடுபடவில்லை.

**திரு. கு. ரமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காண்ட்ராக்டர்களின் பிடியில் அகப்பட்டுக்கொள்கிற அந்தக் குடும்பங்களுக்கு முதலாவதாக எந்தவிதமான இடமோ, குடிசைகளோ, வீடுகளோ இல்லாமல் இருப்பதால் அவர்கள் திண்டாடுகிறார்கள். குடும்ப அட்டைகள் வாங்குவது என்பது அவர்



1987 மே 5]

களுக்கு ஒரு பெரிய சிரமமான வேலையாக இருக்கிறது. காண்ட்ராக்டர்களின் கீழ் அவர்கள் கிட்டத்தட்ட கொத்தடிமைகளைப் போல் வாழ்ந்துகொண்டிருக்கிற அந்தப் பகுதிகளில் யாருக்காவது குடும்ப அட்டைகள் கொடுக்கப்படாமல் இருக்கிறதா என்பதைக் கண்டறிய அதிகாரிகளை விட்டு ஒரு Check-up பரிசோதனை செய்து விவரத்தைச் சொல்வார்களா?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த நடைமுறை, அந்தக் கூப்புகளிலே வசிப்பவர்கள் ஒரே இடத்திலே நிரந்தரமாக வசிப்பதில்லையாதலால் காண்ட்ராக்டர்கள் மூலமாக வழங்கி வந்தார்கள். இன்று நேரடியாக நாமே அவர்களுக்கு வழங்கி வருகிறோம். ஆகவே அப்படிப்பட்ட பிரச்சினை எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் இந்தக் கேள்வியை 30—6—1986 அன்று கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பதில் துறையிடமிருந்து 20—4—1987 அன்றுதான் வந்து இருக்கிறது. இன்று அவையில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில்கள்**

590—(*வினா எண் 3046) **திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்நிய நாட்டு முதலீடுகள் மூலம் தமிழகத்தில் தொழில் துவங்க ஏதேனும் விண்ணப்பங்கள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில், என்ன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சென்னை ஏற்றுமதி வர்த்தக மண்டலத்தில் தொழில்கள் அமைக்க 104 விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அவற்றுள் 31 விண்ணப்பங்களில் அந்நிய நாட்டு முதலீட்டுடன் தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் வழங்கப்

[1987 மே 5

பட்டுள்ளன. சிப்காட் உதவியுடன் அயல் நாட்டில் வாழும் இந்தியர்கள் பங்கு பெற்றுள்ள 16 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்கியுள்ளன. மற்றும் இதர 26 தொழிற்சாலைகள் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாடுகளின் முதலீடுகள் மூலமாக தமிழகத்திலே தொழில்கள் துவங்குவதற்கு அரசினுடைய பங்கு உண்டா? அரசின் பங்கையும் சேர்த்துத்தான் அந்தத் தொழில்கள் துவங்கப்படுகின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏற்றுமதி வளாகத்தைப் பொறுத்த வரையில் அவர்களே சொந்த மூலதனத்தைக் கொண்டுவருகிறார்கள். ஐ.டி.பி.ஐ.-யினுடைய பங்கு அதிலே இருக்கிறது.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம் நாட்டில் பெரும் தொழிலதிபர்கள் எல்லாம் தங்கள் மாவட்டங்களிலேயுள்ள தங்கள் பகுதிகளிலேயே பெருந் தொழில்களைத் துவக்குகிறார்கள். அந்நிய நாடுகளினுடைய முதலீடுகள் மூலமாகத் துவக்கப்படுகிற அந்தத் தொழில்களை, தொழில் மையங்களே இல்லாத பகுதிகளிலே, தொழிற்சாலைகளே இல்லாத பகுதிகளிலே ஏற்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து அரசாங்கம் அனுமதித்து அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொழில்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான தொழில்கள் ஆகும். மத்திய அரசு இந்தியாவிலேயே நான்கே நான்கு இடங்களிலேதான் அந்தத் தொழில்களை அனுமதித்து துவங்கப்பட்டிருக்கிறது. 100 சதவீதம் சாமான்களை உற்பத்தி செய்கிற தொழில்களை எங்கே வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். அதற்கான முன் அனுமதியை அரசிடமிருந்து பெற்றாக வேண்டும்.



1987 மே 5]

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு முதலீடுகள் என்பது இந்தியாவிலேயிருந்து வெளியேறிய வெளிநாட்டிலே குடியிருக்கிற இந்தியர்களாலா அல்லது தமிழர்களால் மட்டுமா அல்லது மற்றவர்களையும் அனுமதிக்கிறார்களா? அது ஒன்று. அடுத்தபடியாக அவர்கள் இங்கே வந்து தொழில் துவங்குகிறபோது அவர்கள் எவ்வளவு மூலதனம் போடுகிறார்கள், தமிழ்நாடு அரசின் மூலதனம் எவ்வளவு? அரசு எவ்வளவு மூலதனம் ஒதுக்கியிருக்கிறது? அரசுக்கு இதனால் கிடைத்திருக்கிற இலாபம் என்ன? அதைப் பற்றிய நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாட்டிலே இருக்கிற இந்தியர்கள் யாராக இருந்தாலும் தொழில்கள் துவங்குவதற்கு—மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்திருக்கிற குழு ஒன்று டெல்லியிலே பணியாற்றுகிறது—அவர்கள் அனுமதி அளிக்கிறார்கள். ஆகவே இந்தியர்களாக இருந்தால் போதும். இன்றைக்கு இருக்கிற நியதி அதுதான். அதோடு அவர்கள் பொருளாதாரம் கொண்டு வந்து விடுகிறார்கள். தொழில் நுட்ப அறிவும் அவர்களே கொண்டு வந்துவிடுகிறார்கள். எல்லாவகையிலும் இது பாராட்டுக் குரிய திட்டமாக இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் செய்யப்பட்ட பொருள்களை அப்படியே அவர்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று விடுகிறார்கள். நமக்கு வேலை வாய்ப்பு நிறையக் கிடைக்கிறது. நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி பெறுவதற்கு அது வசதியாக இருக்கிறது.

(முற்பகல் 10-10)

**திரு. க. இரா. சின்னராசு:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்நிய நாட்டு மூலதனத்திலே துவங்கப்படுகிற தொழிலை, தொழிலிலே பின்தங்கியிருக்கிற தர்மபுரி மாவட்டத்திலே—இது போன்ற தொழிலை—துவங்குவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்களா? அப்படிக் கேட்டிருந்தால் என்ன பகுதியிலே என்ன கேட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட விண்ணப்பங்கள் ஏதும் தற்போது தமிழக அரசினுடைய கையிலே இல்லை.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகருக்குள்ளே அந்நிய நாட்டு முதலாளிகளி னுடைய தொழிலகத்தை உண்டாக்குகிறபொழுது, 100 சதவீதம் உற்பத்தித் திறனை வைத்து வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிற பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவற்றிலே என்ன, என்ன பொருள்களை உற்பத்தி செய்கிறார்கள் என்ற ஒரு பட்டியலைத் தமிழக அரசினுடைய அமைச்சர் தருவாரா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தற்போது என்னிடத்திலே பட்டியல் இல்லை. ஆனால் 16 தொழில்கூடங்கள் இன்றைக்கு ஏற்றுமதி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ரூ. 10 கோடியே 39 இலட்சம் மூலதனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது, வெற்றிகரமாக இருக்கிறது. ஏராளமான பொருள்களை உற்பத்தி செய்து வருகிறார்கள். நான் சென்று பார்த்த வகையில், அங்கே 'ரெடிமேட் கிளாத்' உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள்; ஜெம் கட்டிங் என்ற ஒரு பகுதி இருக்கிறது. இன்னொரு பகுதியில், விஞ்ஞான இரசாயனப் பொருளை உற்பத்தி செய்து அனுப்புகிறார்கள், பிளாஸ்டிக் பொருளைச் செய்து அனுப்புகிறார்கள். அதோடு எலெக்டிரானிக் பொருள்களைச் செய்ய, பி. சி. ரெட்டி என்ற ஒருவர் ரூ. 5, 10 கோடி மூலதனம் போட்டு தொழில் ஆரம்பித்திருக்கிறார். ஆகவே, இந்த ஆண்டு ரூ. 100 கோடி ஏற்றுமதி செய்ய முடியும் என்று கணக்கிட்டு இருக்கிறார்கள்.

### அண்ணாநகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றின் வடிகால் நீர்

591—(* வினா எண் 3832) திரு. சோ. மா. இராமச்சந்திரன் : மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாநகர் தொகுதி அரும்பாக்கம் அருகில் கூவம் ஆற்றில் வடிகால் நீரை விடுவதால் அரும்பாக்கத்தில் அருகிலுள்ள கிணறுகளில் நீர் உபயோகமற்றதாகி வருவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அப்பகுதிக்கு வடிகால் வசதி செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?





மாண்புமிகு திரு. க. இராசாராம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் உயிரியல் முறையில் சுத்தம் செய்யப்பட்ட கழிவுநீர், புல் பண்ணைக்கு உபயோகப்படுத்தப்பட்டு எஞ்சியுள்ள சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் மட்டுமே கூவம் ஆற்றில் விடப்படுவதால் இப்பகுதியில் உள்ள கிணற்று நீர் மாசு படவோ, அதனால் உபயோகமற்றதாக மாறிவிடவோ வழியில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### சென்னையில் "டிட்கோ" மூலம் அனல் மின் நிலையம் அமைத்தல்

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு தொழில் மற்றும்
592—(* வினா எண் 6796) திரு. இரா. தாமரைக்கனி மற்றும்
வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசின் "டிட்கோ" மூலம் சென்னையில் அனல் மின் நிலையம் நிறுவ அரசு முடிவு செய்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அனல் மின் நிலையம் ஒன்றை சென்னையருகே உள்ள மணலியில் டிட்கோ மூலம் கூட்டுத் துறையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. மைய அரசின் ஒப்புதல் கிடைத்தவுடன் மின் நிலையம் அமைக்கும் பணி தொடங்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் செலவில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட இருக்கிறது? மேலும் தமிழ்நாட்டில் பல மாவட்டங்களில் தொழில்பேட்டைகள், தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. மின்சாரம் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால் டிட்கோ மூலம் மாவட்டங்களில் இப்படி அனல் மின் நிலையம் அமைக்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, அனல் மின் நிலையத்தைப் பொறுத்தவரையில் 1 மெகாவாட் உற்பத்திக்கு ரூ. 1 கோடி செலவு என்பது சாதாரண கணக்கு. இப்பொழுதிருக்கிற விலைவாசி ஏற்றத்தின் காரணமாக அது

அதிகரிக்கவும் கூடும். ஆனால் தற்போதுள்ள திட்டப்படி ரூ. 220 கோடி அளவில் இந்தத் திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது. மேற்கொண்டு பல மின் நிலையங்களையும் அரசு நிறுவ எண்ணியுள்ளது.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வருகிற தமிழ்நாட்டின் மின்சாரத் தேவை பூர்த்தி ஆவதற்கு டிட்கோ மூலம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் மின் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை இருக்கிற இன்றைய நிலையில், குறிப்பாக, கோவை மாவட்டத்தில், நீண்ட காலமாக ஒரு அனல் மின் நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை இருந்து வருகிறது. ஆகவே, கோவையின் தேவையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஒரு அனல் மின் நிலையத்தை டிட்கோ மூலம் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே கோவை மாவட்டத்தில் இருக்கிற தொழில் அதிபர்கள் எல்லாம் சேர்ந்து ஜி. கே. தேவராஜ் தலைமையிலே கூடி ஒரு மின் நிலையத்தை உருவாக்குவதற்கு முன்னுரிமை தருவதற்கு முன் வந்தார்கள். அது நீண்ட காலம் ஆய்விலேயே இருந்து வந்திருக்கிறது. அவர்களும் பிறகு முன் வரவில்லை; நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால், டிட்கோ போன்ற நம்முடைய நிறுவனங்கள் பல மின் நிலையங்களை உருவாக்குவதிலே அக்கறை கொண்டிருக்கிறது. அதற்கு மைய அரசு அனுமதி அளித்த பிறகு, அவற்றிலே கவனம் செலுத்தப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் கூடங்குளத்தில் அணு மின் நிலையம் ஆரம்பிக்க வேண்டுமென மத்திய அரசிடம் மாநில அரசு வற்புறுத்துகிறது. ஆனால், காலதாமதம் ஆவதால் மாநில அரசே அந்த அணு மின் நிலையத்தை ஆரம்பிப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் என்னிடத்திலே இல்லை, தனிக் கேள்வி போடவும். அதோடு, மின்சாரத் துறையைச் சேர்ந்த கேள்விகள் இல்லை; என்னுடையது தொழில் துறையைப் பற்றியது மட்டும் தான்.





**திரு. துரை கோவிந்தராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், டிட்கோ மூலம் அனல் மின் நிலையம் அமைப்பதற்கு மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பியிருக்கிறோம் என்று அறிவித்தார்கள். இன்று காலை பத்திரிகையில் மாநிலங்களில், குறிப்பாக, தமிழகத்திலே துவங்குகிற அனல் மின் நிலையங்களுக்கு மற்ற இடங்களிலேயிருந்து நிலக்கரி வாங்குவதற்கு அனுமதி இல்லையென்று மத்திய அரசு அறிவித்திருக்கிறதே, அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, நிலக்கரியைப் பொறுத்தவரையில் நான் நேற்று முன்தினம் பிரதமரிடம் போய், பேசும்போது, அங்கே திரு. வசந்த் சாத்தே வந்திருந்தார்கள். அவர்களிடம் பேசும்போது, சிலவற்றைக் கேட்கும்போது, நிலக்கரி ஏற்கனவே இந்தியாவிலே இருக்கிறது. ஆகவே, எதற்காக நிலக்கரி என்ற செய்தியை என்னிடத்தில் சொன்னார்கள். அதுதான் தெரியுமே தவிர, முழு விவரத்தையும் மின்சாரத்துறை அமைச்சரிடம் கேட்டுப் பெறலாம்.

### நெல்லை மாவட்டம், வல்லநாடு தாமிரபரணி ஆற்றிலிருந்து குடிநீர்

593—(* வினா எண் 9240) **திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் வல்லநாடு தாமிரபரணி ஆற்றில் இருந்து அந்த பகுதியை சுற்றியுள்ள கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் அமுல்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. எஸ். டேனியல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லநாட்டிற்கு அருகேயுள்ள தாமிரபரணி ஆற்று நீரைக் குழாய்களின் மூலமாகத் தூத்துக்குடி நகருக்குக் கொண்டு செல்கிறார்கள். ஆனால் வல்லநாட்டைச் சுற்றியுள்ள வல்லநாடு கஸ்பா, கீழவல்லநாடு, களியாவூர், வடவல்லநாடு, ஆலந்தா, பூவாணி, சிங்கத்தாகுறிச்சி, வடக்குகாரசேரி, எல்லைநாயக்கர்

பட்டி, செக்காரகுடி ஆகிய பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த கிராம மக்கள் குடிதண்ணீர் இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே அந்தக் கிராம மக்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கு, வல்லநாட்டிற்கு அருகேயுள்ள தாமிரபரணி ஆற்றுப் படுகையிலே ஒரு கூட்டுக் குடிநீர் திட்டத்தை அமைத்து, அதன் மூலமாக அந்தக் கிராம மக்களுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைப் போக்குவதற்கும் தாமிரபரணி ஆற்று நீரை இந்த மக்களுக்குக் கொடுப்பதற்குமான வழிவகைகளை இந்த அரசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, இந்த அரசுதான் முதன் முதலாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்ற ஒரு புதிய திட்டத்தை உருவாக்கி, பல்வேறு கிராமங் களையும் இணைத்து, எங்கெங்கே நீர் ஆதாரம் இருக்கிறதோ, அங்கேயிருந்து நீரை எடுத்து மக்களுக்குத் தந்துவருகிற அற்புத மான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்த வகையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் யோசனையை ஏற்கலாம் என்றாலும், வறட்சி மிகுந்திருக்கின்ற காலத்தில், குறிப்பிட்டி ருக்கிற ஆலந்தா, சிங்கத்தாகுறிச்சி, பூவாணி, எல்லைநாயக்கன் பட்டி, செக்காரக்குடி, வடக்குகார்சேரி, வடவல்லநாடு, கீழவல்ல நாடு, கஸ்பா இப்படி எல்லா ஊர்களிலேயும் கைப்பம்புகள் போடப்பட்டு, இயங்கி வருகின்றன. சில இடங்களில், கைப் பம்புகள் கெட்டுப்போய் இருக்கின்ற காரணத்தினால், அதைப் பழுது பார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி அதிகமாக ஏற்பட்டிருக்கின்ற இந்தக் காலத்திலே, பல ஊர்களிலே போர் போடுகிறோம். அப்படிப் போட்டால்கூட, தண்ணீர் இல்லாமல் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமையை மாற்றுவதற்கு, சற்றுக் காலதாமத மானாலும்கூட எங்கெல்லாம் ஆற்றுப் படுகை இருக்கிறதோ, அதை ஒட்டியுள்ள கிராமங்களுக்கு, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டத்தை அமல் நடத்த நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கனவே சொன்னதுபோல், வறட்சியைப் பொறுத்தவரையில், உடனடியாக எங்கெங்கே நீர் ஆதாரம் இருக்கிறதோ, அங்கெல்லாம் குடிநீர் வடிகால் வாரியம் வெடிவைத்து, கண்டுபிடித்து, அதற்குப் பிறகு தான் துளை போடுகிறார்கள். துளை போட்டால் தண்ணீர் இல்லை என்ற நிலைமை இருக்காது. துளை போட ஆரம்பிப்பதற்கு முன்னாலே ஆராய்ச்சி செய்கிறார்கள். இடத்தைப் பார்க்கிறார்கள். வெடி வைக்கிறார்கள். தண்ணீர் இருக்கிறதா என்று கண்டுபிடிக்கிறார்கள். எத்தனை அடியிலே தண்ணீர் இருக்கிறது என்று பார்க்கிறார்கள். அப்படிப் பார்த்த பிறகு தான், துளையே போட ஆரம்பிக்கிறார்கள். ஆகவே துளை போடுவதில், ஆதாரம் இல்லாமல் துளை போட மாட்டார் கள். அந்த வகையில், இப்போது உடனடியாக, கூட்டுக் குடி நீர்த் திட்டத்தை எல்லா இடங்களுக்கும் விஸ்தரிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. இப்போது அரசுக்கு இருக்கிற பிரச்சினை, எல்லோருக்கும் குடிதண்ணீர் வழங்க வேண்டு மென்பதுதான்.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த கிராமங்களுக்கு அடி பம்ப் போடப்பட்டு வருகிறது என்று கூறினார்கள். இந்த கிராமங்களைப் பொறுத்தவரையில். கோடைக் காலங்களில் நிலத்தடி நீர் மிகவும் அடியில், கீழே சென்று விடுகின்ற காரணத்தால், கிணறுகளிலேயும் அடி பம்பு களிலேயும் தண்ணீர் சரியான முறையிலே கிடைப்பதில்லை. ஆகவே, சீவலப்பேரி கூட்டுக்குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்பட் டுள்ள ஒட்டப்பிடாரம் யூனியன் அருகிலுள்ள ஆலந்தா, பூவாணி. உமறிக்கோட்டை, மேல் தட்டாம்பாறை, கீழத்தட்டாம்பாறை. வடக்கு சிலுக்கன்பட்டி ஆகிய பஞ்சாயத்துக்களை இத்திட்டத் தோடு இணைத்து, சீவலப்பேரி ஆற்று நீர் இந்தக் கிராமங் களுக்குக் கிடைப்பதற்கு, அரசு நடவடிக்கை எடுக்கமுன்வருமா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட எல்லாக் கிராமங்களிலேயும் தற்போது கைப் பம்புகள் இயங்கிக்கொண்டு வருகின்றன. சில இடங்களில் மட்டும் கைப் பம்புகள் பழுதடைந்து, அவற்றை உட னடியாகப் பழுதுபார்க்கும்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. எங்காவது பிரச்சினை இருக் குமேயானால், அதைக் கவனிப்பதற்கு இந்த அரசு தயாராகயி

ருக்கிறது. உடனடியாக இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக எல்லோருக்கும் தண்ணீர் கொடுப்பது என்பது இயலாத காரியம். தாமிரபரணியில் தண்ணீர் இருந்தால், அதை எடுத்துச் செல்வதற்குள்ள நீண்டகாலத் திட்டமொன்றை அரசு பரிசீலிக்கும்.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் அவர்களின் அருளால் ஒட்டப்பிடாரம் பகுதியிலே கிடைத்திருக்கிற அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் இந்த ஆண்டிற்குள்ளாவது முடியுமா? அதற்குரிய சகல ஏற்பாடுகளும் நடைபெற்றிருக்கின்றன. இப்போது ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப் பற்றியும் அறிந்து கொள்ள நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, ஏற்கனவே எடுத்துக்கொண்டிருக்கிற கூட்டுக் குடிநீர்த் திட்டம் திட்டமிட்டபடி, அந்தக் காலத்திலே முடியும் என்பதை நான் உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களும் அதை உடனடியாக முடித்துத் தரும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். ஆகவே அது நிறைவேற்றப்படும்.

(முற்பகல் 10-20)

திரு. எஸ். சிவராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழக முதல்வர் அவர்கள் வறட்சி நிலைமையை அனுசரித்து, குடிநீர்ப் பிரச்சினை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்று அத்தனை அதிகாரிகளுக்கும் உத்திரவு இட்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கென்று வந்த அதிகாரிகள் நிலைமைகளைப் பார்த்து, குடிநீர்ப் பிரச்சினையைப் பார்த்து, புதிதாகப்போட வேண்டியவற்றிற்கும் கிணறுகள் தோண்டுவதற்கும் உத்திரவு இட்டிருக்கிறார்கள். ஆனால் கைபம்புகள் போடுவதற்கு உத்தரவு இட்டிருந்தாலும் அதைக் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச் செய்ய வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுகின்றபோது அதற்கென்று நிதி ஒதுக்கப்படவில்லை, நாங்கள் என்ன செய்வது என்று குடிநீர் வடிகால் வாரியத்தில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இது ஒருபுறம் இருக்க, இந்த கை பம்புகள் போடுகின்றபோது 600 அடி டிஸ்பரன்ஸ் இடம் இருக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ஒரு போர் வெல்லுக்கும் அடுத்த போர் வெல்லுக்கும் ஒரு கிலோ





மீட்டர் தூரம் இருக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். சில இடங்களில் தண்ணீர் நல்ல முறையில் இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஒரு சில இடங்களில் தண்ணீர் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. எனவே இந்த இடப்பிரச்சினை ஒரு கிலோமீட்டர் என்பதை மாற்றி தண்ணீர் எங்கு இருக்கிறதோ அங்கே போடுவதற்கு அரசாங்கம் உத்தரவு இடுவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். இந்தக் குடிநீர்ப் பிரச்சினையை உடனடியாகத் தீர்ப்பதற்கு முதல்வர் அவர்கள் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டி, அந்தச் செயல்முறைகளையும் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவர் அவர்களே, இப்போது புதிய உத்தரவு ஒன்றை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். பத்திரிகைகள் வாயிலாக நீங்கள் எல்லாம் அறிந்திருப்பீர்கள் என்று நான் நம்புகிறேன். தனியார் கிணறுகளில் தண்ணீர் இருந்தால்கூட அவசியத் தேவையைக் கருதி அந்தக் கிணறுகளை எடுத்துக்கொண்டு பொது மக்களுக்கு நீர் வழங்கலாம் என்ற புதிய உத்தரவினை அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள். (பலத்த மேசையைத் தட்டும் ஒலி) எந்த இடத்தில் பிரச்சினை வந்தாலும் அவைகள் உடனடியாகக் கவனிக்கப்படும்; தீர்க்கப்படும்.

## உமறுப்புலவர் நினைவு நூலகம்

594—(*வினா எண் 3536-ஏ) திரு. வி. எஸ். டி. சம்சுல் ஆலம் : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உமறுப்புலவர் நினைவு நூலகம் ஒன்று ஏற்படுத்தி உமறுப் புலவர் அவர்களது நூல்களை ஆராய்ந்து டாக்டரேட் செய்வதற்கு வகை செய்யும் திட்டம் ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உமறுப்புலவர் கிளை நூலகம் ஒன்று திருநெல்வேலி மாவட்டம் எட்டையபுரத்தில் ஏற்படுத்த திட்டம் உள்ளது. அரசாணை எண் 199, கல்வி, நாள் 1985 மார்ச் மாதம் 7 ஆம் நாளில் உமறுப்புலவர் கிளை நூலகக் கட்டிடம் ரூ. 3.5 இலட்சம் செலவில் திருநெல்வேலி மாவட்ட நூலக ஆணைக் குழுவினால் எட்டையபுரத்தில் கட்டிக் கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

[1987 மே 5

**திரு. ஆர். ரெங்கசாமி :** தலைவர் அவர்களே, எட்டையபுரத்தில் உமறுப்புலவர் கிளை நூலகம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் அங்கு விஜயம் செய்யும்போது அறிவித்தார்கள். ஆனால் இதுவரையில் நூல் நிலையம் கட்டப்பட வில்லை. மேற்கொண்டு காலதாமதம் இன்றி நூல் நிலையம் ஆரம்பிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் சொன்னதைப்போல உமறுப்புலவருடைய நினைவாக 3½ இலட்சம் ரூபாய் செலவில் ஒரு நூலகம் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த ஆணை இட்டு அது நடைமுறையில் இருந்து வருகிறது. கட்டிட வேலை முடிந்துவிட்டது. வெள்ளை அடிக்கின்ற வேலை இருக்கிறது. இன்னும் ஒரு மாத காலத்திற்குள் முடிந்துவிடும் என்று அரசுக்குத் தகவல் வந்திருக்கிறது.

**ஆசிரியர்கள் அரசு ஊழியர்களான பின் அவர்களது பணியினை கண்காணித்தல்.**

(பேரவைத் துணைத் தலைவர்)

595—(*வினா எண் 4578) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தில் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கிய பிறகு அவர்களின் பணியினைக் கண்காணிக்க அரசு செய்துள்ள ஏற்பாடுகள் என்ன ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்கண்ட வினா தொடர்பாக ஓர் அறிக்கை* இப்பேரவையின் முன்பு வைக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்) : பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர்களுடைய கோரிக்கையை ஏற்று அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கியபிறகு, அவர்கள் பணிகளைக் கண்காணிப்பதில் இருக்கின்ற கட்டுப்பாடு கொஞ்சம் தளர்ந்திருக்கிறது. விவர அறிக்கையில் 366 உதவி கல்வி அலுவலர்கள்

---

ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.



1987 மே 5]

நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னாலும்கூட, தவறு செய்கின்ற ஆசிரியர்கள் மீது, நடவடிக்கை எடுப்பதற்கு மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்குத்தான் அதிகாரம் இருக்கிறது என்ற நிலை இருக்கிறது. இதனால் பல்வேறு இடங்களில் ஆசிரியர்கள் விடுமுறை விண்ணப்பங்களை வைத்துவிட்டு பள்ளிக்கு வராத நிலையில் கிராமங்களில் அதை மக்கள் கேட்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே திடீர் ஆய்வுகள் நடத்துவதிலே கூட பல பிரச்சனைகள் இருக்கின்றன. எனவே இவைகளைத் தவிர்ப்பதற்காகக் கிராமங்களில் இருக்கின்ற பள்ளிகளைப் பற்றி ஆய்வு செய்வதற்கு மாவட்ட அளவிலே ஒரு விஜிலென்ஸ் செல் இல்லை. ஆசிரியர்களைப் பற்றி புகார் இருக்குமானால் அவைகளை விசாரித்து அரசாங்கம் தண்டிக்க வந்தால் ஆசிரியர் சங்கங்கள் அவைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். வழக்கறிஞர்கள் தவறு செய்தால் அவர்களைத் தண்டிக்க வழக்கறிஞர்கள் சங்கம் பார் கௌன்சில் இருப்பதைப் போல டாக்டர்கள் தவறு செய்தால் அவர்களை விசாரித்து தண்டிக்க மெடிக்கல் கௌன்சில் இருப்பதைப் போல மாநில அளவிலே தவறு செய்கின்ற ஆசிரியர்களை விசாரித்து தண்டிக்க டீச்சர்ஸ் கௌன்சில் ஏற்படுத்த அல்லது மாவட்ட அளவிலே விஜிலென்ஸ் செல் ஏற்படுத்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசிற்கு இதுபற்றிய புகார்கள் பல வந்திருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய நல்ல ஆலோசனையையும் அரசு ஆயும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் **(பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள், அந்தந்த சொந்த கிராமங்களிலே பணியாற்றுகிறார்கள். பல கோடி ரூபாயைச் செலவு செய்து, இலவசக் கல்வியை நம் அரசாங்கம் வழங்கியும், அதை ஊக்குவிக்க ரூ. 200 கோடி செலவு செய்து, சத்துணவுத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியும்கூட, இன்றைக்குக் கிராமங்களில் இருக்கிற நிலைமை —சாதாரண கிராமங்களிலே கூட, அப்பல்லோ நர்சரி, ஆக்ஸ்போர்டு நர்சரி என்ற பள்ளிக்கூடங்கள் உருவாவதையும், சாதாரணக் கூலி வேலை செய்கிறவன்கூட, அந்தப் பள்ளிக்கு அனுப்பு

வோம் என்று 10 ரூபாய் கொடுத்து அனுப்புகிற சூழ்நிலை இருக்கிறது. இதற்கு அந்த ஆரம்பக கல்வியினுடைய தரத்தை ஆய்வு செய்வதற்கும், அந்தக் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு அரசிற்கு ஆலோசனை கூறுவதற்கும் நிபுணர் குழு ஒன்றை மாநில அரசு அமைப்பது பற்றி பரிசீலிக்குமா? அல்லது சொந்த ஊரில் அவர்கள் பணியாற்றுவதால்தான் விவசாயம் செய்கிறார்கள், வியாபாரம் செய்கிறார்கள்—இந்தச் சூழ்நிலை இருக்கிறது. இந்தக் கடுமையான சூழ்நிலை ஆரம்பக் கல்வியைப் பாதிக்கிறது என்பதை அறிந்துதான் சமீபத்திலே கர்நாடக மாநிலத்திலே ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சொந்தத் தாலுகாவில் பணியாற்றக்கூடாது என்ற முடிவினை அங்கே இருக்கிற அரசு எடுத்திருக்கிறது. அந்த வகையிலே சொந்த தாலுகாவிலே ஆசிரியர்கள் பணியாற்றக் கூடாது என்கிற முடிவை அரசு எடுக்குமா, ஆரம்பக் கல்வியினுடைய தரத்தை ஆய்ந்து அதை மேம்படுத்துவதற்கு ஆலோசனை சொல்ல ஒரு நிபுணர் குழுவை மாநில அரசு அமைக்குமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பக் கல்வியினுடைய தரத்தை மேம்படுத்துவதற்காகவும், பலனுள்ள கல்வி முறையைக் கீழ் மட்டத்திலிருந்தே நடைமுறைக்குக் கொண்டு வருவதற்காகவும், மாண்புமிகு முதல்வர் அவர்கள், டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் 17 பேர் உள்ள ஒரு குழுவை அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு அந்தப் பணியைத் தற்போது மேற்கொண்டு இருக்கிறது. அந்தக் குழுவினுடைய அறிக்கை அரசிற்கு வந்தவுடன், 1988-89-லிருந்து இந்தப் புதிய பாடத் திட்டம், மற்றும் ஆசிரியர்கள் சம்பந்தப்பட்ட, அவர்களது தரத்தை உயர்த்தக்கூடிய, அவர்கள் கூறுகிற ஆலோசனைகளை எல்லாம் நடைமுறைப்படுத்துகிறபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய எண்ணம் கட்டாயம் ஈடேறும் என்று அரசிற்கு நம்பிக்கை இருக்கிறது. அதேபோல், ஆரம்பப் பள்ளியிலே பணியாற்றுகிற ஆசிரியர்களைப் பொறுத்தவரை, சொந்த ஊரிலேயே பணியாற்றுகிறபோது அவர்கள் இதுபோன்று பிற தொழில்களில் ஈடுபடுகிற காரணத்தால் பாடத்தை அதிகம் கவனிப்பதேயில்லை என்ற குற்றச்சாட்டு பல மட்டங்களிலிருந்து



வந்திருக்கிறது. டாக்டர் மால்கம் ஆதிசேஷையா அவர்கள் குழுவை இந்தக் குறைபாட்டைக் குறித்தும் ஆய்ந்து, அரசிற்கு அறிக்கை தர அரசு பணித்திருக்கிறது.

**திரு. எம். அண்ணாதாசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றியப் பள்ளிகளின் ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கவேண்டும் என்று நீண்ட நாள் கோரிக்கையை இந்த அரசு நிறைவேற்றித் தந்த பிறகு, அந்தந்தப் பள்ளிகளில், கிராமங்களில் ஆசிரியர்கள் அவர்கள் இஷ்டம் போல் பள்ளி நடக்கிறதோ, நடக்கவில்லையோ, அதைப்பற்றிக் கவலைப் படாமல் அவர்கள் நினைத்த நேரம் எல்லாம் லீவ் போட்டு விட்டு, பள்ளிப் பாடங்கள் பாதிக்கக்கூடிய அளவிற்கு அதிக மோசமான நிலையில் நடத்தப்படுகிறதே, அதற்கு அரசு உடனடியாக ஒரு மாற்றுத் திட்டத்தை உருவாக்க ஆணை பிறப்பிக்குமா என்பதை அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய கல்விக் கொள்கையினை 1988—89-ல் நடைமுறைப்படுத்துகிறபோது, 'அக்கவுண்டபிலிட்டி ஆஃப் தி டீச்சர்ஸ்' என்ற முறையில் ஆசிரியர்கள் அவர்கள் பெறுகிற ஊதியத்திற்கேற்ப கடமையும் ஆற்றவேண்டும் என்ற முறையில் கட்டாயம் சில நடவடிக்கைகள் எடுக்க அரசிற்கு பரிந்துரை வந்திருக்கிறது. அதை அரசு நடைமுறைப்படுத்த இருக்கிறது.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களாக ஆக்கப்பட்டுள்ள ஊராட்சி ஒன்றிய நகராட்சி ஆசிரியர்களின் பணி வரன்முறைப்படுத்தப் படவில்லை இதுவரை என தெரிய வருகிறது. உடனடியாக அரசு அதைச் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஒரு குழு அமைத்து, அந்தக் குழு பரிசீலித்து அரசிற்கு அனுப்பியிருக்கிறது. ஆனால் தற்போது 'நியூ எஜுகேஷனல் பாலிசி' என்று சொல்லக்கூடிய புதிய கல்விக் கொள்கைத் திட்டத்தை எல்லா மாநிலங்களும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மைய அரசு தாக்கீது அனுப்பியிருக்கிறது. அந்த அடிப்படையில் அவர்கள் பல ஆலோசனைகளைத் தந்திருக்கிறார்கள்—பணி வரன்முறை உட்படக் கூட, அதையும் ஆய்ந்து அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குகின்ற முறை—ஏ.இ.ஓ. அவர்கள் மூலமாக அனுப்பப்படுகிறது. அதை மாற்றி, ஆசிரியர்களே நேரடியாகப் பணத்தைப் பெறுகின்ற அளவுக்கு செக்-ஐ நேரடியாக அவர்களுக்கு அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிவதோடு, ஒன்றிய அளவில் உதவிக் கல்வி அலுவலர்கள், ஆசிரியர்களைக் கண்காணிக்கச் செல்கின்றபோது, அவர்களுக்கு வாகன வசதி குறைவாக இருப்பதால், முழுமையாகக் கண்காணிக்க முடியவில்லை. அப்படிப்பட்டவர்களுக்கு வாகன வசதி ஏற்பாடு செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊதியத்தை நேரடியாக அனுப்புவது பற்றிய செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை. ஆனால் கண்காணிப்புக் குழுவைப் பொறுத்தவரை, மேல் அதிகாரிகளுக்கு வாகன வசதி போதவில்லை என்பது உண்மைதான். நிதி நிலைமைக்கேற்ப, நடப்பாண்டிலேயே ஓரளவுக்கு பல பகுதிகளுக்கும் வாகனங்களைத் தர அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(முற்பகல் 10-30)

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக இந்த அரசு ஆக்கியிருப்பது வரவேற்க வேண்டிய ஒன்று, அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றியது சரியே. இன்றைக்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு நல்ல ஊதியமும் கொடுக்கப்படுகிறது. ஆனால் பணியாற்றுகிற ஆசிரியர்கள் பள்ளிகளுடைய நடைமுறைகளுக்கு ஏற்பவும் அரசு நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டும் பள்ளிகளில் நடந்து கொள்கிறார்களா என்பதை அரசு அறியுமா? அரசாங்கத்தில் எப்படி நீதி நிர்வாகம் என்று தனித்தனியாகப் பிரிக்கப்பட்டிருக்கிறதோ அதைப் போலவே கல்வி இலாக்காவும் இரண்டாகப் பிரிக்கப்பட்டு நடைமுறையில் நிர்வாகத்தைச் சீர்திருத்தம் செய்து, ஆசிரியர்கள் ஒழுங்காகப் பணியாற்றி ஆரம்பப் பள்ளி நிலையில் மாணவர்களுக்கு நல்ல கல்வி அறிவைப் புகட்டுவதற்கான முறையில் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா? கல்வி இலாக்காவை இரண்டாகப் பிரிப்பதற்கும் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் குழந்தைகளுக்கு ஆரம்பப்பள்ளிக் கல்வியைக் கற்றுக் கொடுக்கிற கட்டம் அவர்களின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற ஒன்றாக இருக்கிற காரணத்தால் தரமான கல்வியைப் போதிக்க வேண்டிய கட்டாயம் இருக்கிறது. அதிலே இருக்கிற குறைபாடுகள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டு அதை மாற்றுவதற்காகத்தான் திரு. மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையில் குழு அமைத்து அதற்குரிய பரிகாரத்தைத் தர வேண்டுமென்று அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது. Accountability of the teachers என்று சொல்கிற அளவுக்கு மாணவர்களுக்கும் மக்கள் சமுதாயத்திற்கும் ஆசிரியர்களின் கடப்பாடு என்ன என்பதைக் கருத்தில் கொண்டு செயலாற்ற வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே 1988-89-ஆம் ஆண்டிலிருந்து இம்முறையை நடைமுறைக்குக் கொண்டு வர இருக்கிறோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## தமிழ்நாட்டில் பஞ்சாயத்து கோர்ட்டுகள்

596—(* வினா எண் 5013) **திரு. செ. செம்மலை :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் மீண்டும் பஞ்சாயத்து கோர்ட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. செ. செம்மலை :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிடைக்கின்ற நீதி விரைவாகவும், எளிதாகவும் குறிப்பாக அலைச்சல் இல்லாமல் அருகிலேயே கிடைக்கின்ற வகையில் இருக்க வேண்டுமென்றுதான் இதுவரை மாவட்ட அளவில் இருந்த நீதிமன்றங்களையெல்லாம்கூட நமது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசு வட்டார அளவுக்குக் கொண்டு வந்து அதன் காரணமாக ஏழை எளிய மக்களுக்கு நீதி எளிதாகக் கிடைக்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கிறது. இருந்தாலும், சிறிய சிறிய பிரச்சினைகளுக்காக இப்படிப்பட்ட நீதிமன்றங்களுக்குப் போய் வருகிற சூழ்நிலை

இருக்கிற காரணத்தால், அந்தச் சிறிய சிறிய பிரச்சினைகளையேகூட by way of conciliation or consensus என்கிற வகையில் தீர்க்கப்படுவதற்கு கிராம அளவில் சிறிய அமைப்புகளை அதாவது legal binding உள்ள அமைப்புகளை ஏற்படுத்த அரசு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல் அப்படிப்பட்ட திட்டம் இப்போது பரிசீலனையில் இல்லை என்றாலும் இனிமேலாவது சட்டத் துறை அப்படிப்பட்ட அமைப்புகளை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நீதிமன்றங்கள் 1888-ஆம் ஆண்டு சட்டப்படி தமிழகத்தில் இருந்து வந்தன. 1950-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பஞ்சாயத்துச் சட்டத்திற்குட்பட்டு கிராம நீதிமன்றங்கள் மாற்றப்பட்டு அவை பஞ்சாயத்து நீதிமன்றங்களாக ஆக்கப்பட்டன. 1958-ஆம் ஆண்டு பஞ்சாயத்து நீதிமன்றங்களும் தமிழகத்தில் கலைக்கப்பட்டு விட்டன. அதற்கான சட்டம் திருத்தப்பட்டுவிட்டது. தற்போது மத்திய அரசு நீதிமன்றங்களில் பல்வேறு நிலைகளில் வழக்குகள் அதிகமாக நிலுவையில் நிற்கிற காரணத்தால் அதன் காரணமாகப் பொது மக்கள் சொல்லொணா இன்னல்களும் இடர்ப்பாடுகளும் அடைகிறார்கள் என்பதன் அடிப்படையில் 1888 ஆம் ஆண்டு சட்டப்படியான கிராம நீதிமன்றங்களை எல்லா மாநிலங்களிலும் எல்லா மட்டங்களிலும் கொண்டு வரலாம் என்று எண்ணி மாநில அரசுகளின் கருத்தைக் கேட்டிருக்கிறது. நாமும் அதற்கு நம்முடைய இசைவைத் தந்திருக்கிறோம். மத்திய அரசு ஒட்டு மொத்தமாக முடிவெடுக்கிறபோது இந்தப் பிரச்சினை தீருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. மைய அரசு விரைவில் தக்க நடவடிக்கை எடுக்கும் என்று மாநில அரசு எதிர்பார்க்கிறது.

**டாக்டர் கே. சமரசம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் மாநில உயர்நீதிமன்றங்கள் ஆகியவற்றில் மிகச் சாதாரணமான வழக்குகள் தேங்கிக் கிடந்து பல ஆண்டுகளாக மக்களுக்கு நீதி வழங்க முடியாத யதார்த்தமான சூழ்நிலை இருக்கிறது. மாவட்ட நீதிமன்றங்களிலும் மாநில உயர்நீதி மன்றத்திலும் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் வழக்காடி விட்டு கடைசியாக அந்த



வழக்கில் பஞ்சாயத்து செய்து கொள்கிற நிலைகூட வருகிறது. அப்படி பஞ்சாயத்து செய்து வழக்கைத் திரும்பப் பெறுகிற நிலை எத்தனையோ வழக்குகளில் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட சாதாரண வழக்குகளை—ஓரளவுக்கு சமரசம் மூலம் தீர்த்துக் கொள்ளக்கூடிய வழக்குகளை—விசாரித்து முடித்துக் கொள்ள வசதியான பஞ்சாயத்துக் கோர்ட்டுகள் இருப்பது அவசியம். எனவே இதைப்பற்றி வேகமாக உடனடியாகப் பரிசீலனை செய்து தமிழகத்தில் இந்த முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, it has some legal sanction. சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரத்தை உடைய கிராம நீதிமன்றங்கள் அமைப்பது என்பது பல்வேறு பிரச்சினைகளைப் போக்கும். வழக்குகளின் நிலுவையைப் போக்குவது, பொது மக்களுக்குப் பலன் தருவது, வழக்குகள் விரைவில் தீர வழி ஏற்படுவது போன்ற நன்மைகள் ஏற்படும். சாதாரண வழக்குகளுக்குக் கூட பல்லாண்டுக் காலம் காத்திருக்கக்கூடிய ஏழைகளைக் காப்பதாக இருப்பதால் பல பிரச்சினைகளுக்குப் பரிகாரம் கட்டாயம் கிட்டும். ஆகவே கிராம நீதி மன்றம் என்பது இன்றியமையாத ஒன்று என்பதால் அது குறித்து மைய அரசோடு தொடர்பு கொண்டு தீவிரமாக நடவடிக்கை எடுத்து விரைவிலே கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும்.

## புதுக்கோட்டை மாவட்டத்தில் சில உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துதல்.

597—(*வினா எண் 9803) **திரு. த. புஷ்பராஜ்** : மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் சடையம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி, ராயவரம் காந்தி உயர்நிலைப்பள்ளி, கடியாபட்டி அருள்மிகு பூமிநாதர் இலவச உயர்நிலைப்பள்ளி ஆகிய மூன்று பள்ளிகளையும் மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம் சடையம்பட்டி அரசினர் உயர்நிலைப் பள்ளி மற்றும் கடியாபட்டி அருள்மிகு பூமிநாதர் இலவச உயர்நிலைப் பள்ளி ஆகிய இரு உயர்நிலைப் பள்ளிகளும் 1986-87-ல் இருந்து மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளன. ராயவரம் காந்தி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த கருத்துருக்கள் ஏதும் பெறப்படவில்லை.

**திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்தக் கேள்வியைக் கேட்டபோது அந்தப் பகுதியில் உள்ள உயர்நிலைப்பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்தப்படவில்லை. ஆனால் சென்ற ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்திலே, என்து தொகுதியில்மட்டும் சடையம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியையும் மற்றும் கடியாபட்டி அருள்மிகு பூமிநாதர் உயர்நிலைப் பள்ளியையும் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தந்த தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதே மாதிரி ராயவரம் காந்தி உயர்நிலைப் பள்ளி பல ஆண்டு காலமாக நல்ல முறையில் நடந்து வருகிறது. அந்தப் பள்ளியை இவ்வாண்டே மேல்நிலைப் பள்ளியாக உயர்த்தித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளையெல்லாம் மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்க வேண்டும் என்ற கோரிக்கை பல்வேறு பகுதிகளில் இருந்து அரசுக்கு வந்திருக்கிறது. நிதிநிலைமைக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலையிலே இருக்கிறோம். அதற்கும் மேலாக எந்த ஒரு பகுதியில் உயர்நிலைப் பள்ளியை முடித்து மாணவ, மாணவியர்கள் கிராமப்புறங்களில் நெடுந்தூரம் நடந்து செல்லக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறதோ அந்த மாணவ, மாணவியர்களின் துயரைத் துடைக்கும் முகத்தான் கிராமப்புறங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடப்பாண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.



**திரு. த. புஷ்பராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், எனது தொகுதியில் இருக்கின்ற ஒரே ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி,—ஒப்பனை பட்டி கலைமகள் பெண்கள் உயர்நிலைப் பள்ளி. புதுக்கோட்டை மாவட்டத்திலே பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கு இந்த ஒரே ஒரு பள்ளியிலிருந்து தான் கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போலவே கிராமப்புறத்தில் உள்ள இந்த பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். அப்படி உயர்த்திக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாவது வகுப்பு படிப்பை முடித்துவிட்டு குறிப்பாக பெண்கள் 11-வது, 12-வது படிக்க நெடுந்தூரம் செல்ல வேண்டிய நிலை எங்கெங்கு இருக்கிறதோ அங்காங்கே பெண்கள் நலனைக் கருதி மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்த மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையும் கவனிக்கப்படும்.

**திரு. ச. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும், உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கும் ரூபாய் 25 ஆயிரம் செலுத்த வேண்டும், ஐந்து ஏக்கர் நிலம் கண்டிப்பாக கொடுக்க வேண்டும் என்று விதிமுறை இருக்கிறது. பல பிற்பட்ட பகுதிகளில் 25 ஆயிரம் ரூபாய் கட்ட சிரமப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பகுதிகளில் 25 ஆயிரம் ரூபாய் இல்லாமல் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகவும் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் உயர்த்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 25 ஆயிரம் ரூபாய் பணம் கட்டிய பள்ளிகள் ஏராளமாக இருக்கின்றன. அதோடு அரசின் பணி முடிந்து விடவில்லை. நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும்

ஆக்குகிறபோது அரசுக்கு ரெக்கரிங் எக்ஸ்பென்டிச்சர் ஆண்டுக்காண்டு—ஊதியம் தர வேண்டும் என்ற அடிப்படையில்—அதிகமாக ஏற்படுகிறது. எனவே நிதிநிலைமைக்கேற்ப இந்தப் பிரச்சினைகளை ஆய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. கிராமப்புறங்களில் இருக்கின்ற பெண்கள் நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் உயர்த்தி பெண்கள் பட்டு வருகிற இடர்பாடுகளுக்கு பரிகாரம் காணப்பட வேண்டும் என்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**லால்குடி தொகுதியிலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கங்கள்.**

598—(*வினா எண் 850) **திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) லால்குடி தொகுதியில் உள்ள பூவாளூர் மற்றும் பு. சங்கேந்தி, பத்மசால கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம், பூவாளூர் வேலாயுதம் பேட்டை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனை சங்கம் ஆகியவைகளில் சுமார் ரூ. 10 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகள் தேங்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவற்றை கொள்முதல் செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

(முற்பகல் 10-40)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, (அ) மற்றும் (ஆ) மேற்கண்ட 3 நெசவாளர் சங்கங்களிலும் 1985 ஆம் ஆண்டு மார்ச் வரை ஏறக்குறைய 6,97,469 ரூபாய் மதிப்புக்கு கைத்தறித் துணிகள் தேங்கியிருந்தன. சமீபத்திலே கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல் செய்த காரணத்தால் சுமார் 3¼ இலட்சம் ரூபாய்க்கு இப்போது தேக்கம் இருக்கிறது.



**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் இந்தக் கேள்வியை 1985 ஆம் ஆண்டு கேட்டிருக்கிறேன். அதற்கு 1987 ஆம் ஆண்டிலே பதில் சொல்லுகிறார்கள். அப்படி பதில் சொல்லும்போது கூட தேங்கியிருக்கிற துணிகளைக் கொள்முதல் செய்வதிலேயும் பிரச்சினைகள் இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே இவற்றை எல்லாம் கருத்திலே கொண்டு, மிக விரைவாக தயாரித்திருக்கிற கைத்தறித் துணிகளை அரசு கொள்முதல் செய்யவும், கூடுமான வரையில் கேட்கிற கேள்விகளுக்கு மிக விரைவில் பதில் சொல்லவும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 12—3—1985-ல் கேள்வி கேட்டிருக்கிறீர்கள். 10—4—87-ல் பதில் வந்திருக்கிறது. இதிலே என்னுடைய அலுவலகத்திலே தாமதம் கிடையாது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவு சங்கங்களிலே, பிரைமரி சங்கங்களிலே துணி தேக்கம் ஏற்படுகிறபோது, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் அப்போதைக்கப்போது கொள்முதல் செய்கிறது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன 3 சங்கங்களிலே பாதி அளவுக்கு கொள்முதல் செய்திருக்கிறது. மீதி இருப்பதையும் கொள்முதல் செய்ய கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**திரு. கி. வெங்கடாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பாதித் துணிகளைக் கொள்முதல் செய்ததற்காக அரசுக்கு நன்றி சொல்லிக்கொள்கிறேன். பேரவைத் துறையைப் பொறுத்தவரையில், பதில் வந்தவுடனே இங்கே போட்டிருந்தாலும், கேள்வி கேட்டு, பதில் தராத அந்தத் துறையின்மீது எந்த வகையில் நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதையும், கேள்விகளுக்கு விரைவாக எப்படி பதில் தர இருக்கிறார்கள் என்பதையும் அறிய விரும்புகிறேன். (பதில் இல்லை)

[1987 மே 5

## ஆடுதுறை நகர வீடு கட்டும் சங்கம்

599—(* வினா எண் 8357) **திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆடுதுறையில் இயங்கி வந்த நகர வீடு கட்டும் சங்கம் தற்சமயம் செயல்படாமல் உள்ளதா?

(ஆ) அதை செயல்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சங்கத்தை மீண்டும் செயல்படுத்த வீட்டுவசதி கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலிலே சங்கத்தை மீண்டும் செயற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்கள். சங்கம் இயங்கிக் கொண்டிருந்தபோது கடன் பெற்ற 4 பேர்கள் இன்னும் அதனைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கிறார்கள். அவர்கள் கடனைத் திருப்பிச் செலுத்தவும், மீண்டும் அந்தச் சங்கம் இயங்கவும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, தென் ஆற்காடு மண்டல வீட்டு வசதி துணைப் பதிவாளர் அலுவலகத்திலுள்ள கூட்டுறவு சார் பதிவாளர் அதன் நிர்வாக அதிகாரியாக 20—2—1987 முதல் நியமிக்கப்பட்டிருக்கிறார். எனவே இதுவரை இயங்காமல் உள்ள அந்தச் சங்கம் இயங்கும். அந்தச் சங்கத்திற்கு மனுச் செய்தால், வீடு கட்ட கடன் வழங்கப்படும்.

**திரு. மு. இராசாங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வீட்டு வசதி சங்கத்திலே மனுக்களை அளித்து கடன் பெறுவதற்கு பல மாதங்களாகிறது. அப்படியில்லாமல் குறித்த மாதங்களில் கடன் வழங்கவும், அதே நேரத்தில் ஒவ்வொரு சங்கத்தினுடைய ஏரியாவை, நிர்வகிக்கும் பரப்பளவை அதிகப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?



1987 மே 5]

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சங்கங்களிலே ஓவர்டியூ இல்லாமல் இருந்தால் அந்தச் சங்கங்களிலே மனுச் செய்பவர்களுக்கு உடனடியாக கடன் வழங்கப்படுகிறது.

## சைதையில் ஆற்று நகர், திடீர் நகர் மற்றும் கோதாமேடு ஆகிய பகுதிகளில் குடிசை வீடுகளுக்குப் பதிலாக மாடி வீடுகள்

600—(* வினா எண் 8699) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சைதை ஆற்று நகர், திடீர் நகர், கோதா மேடு ஆகிய பகுதிகளில் "தீ பிடித்த குடிசை வீடுகளுக்கு பதிலாக" மாடி வீடுகள் கட்டித்தரும் என்று அறிவித்த திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) இத்திட்டத்திற்கு "ஹட்கோ" அனுமதி வழங்கியுள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதே கேள்வி நேற்று கவன ஈர்ப்புத் தீர்மானமாகக் கொண்டுவரப்பட்டு, பதில் சொல்லியிருக்கிறேன். அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்தக் குடியிருப்புகளைக் கட்டித் தர நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னதுபோல நேற்றே விரிவான விளக்கத்தை கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மூலமாகச் சொல்லிவிட்டார்கள். ஹட்கோ மூலம் கடன் பெறும் குடிசை மாற்று வாரியம், அப்படி வாங்கும் தொகையை எப்படி திருப்பிச் செலுத்துகிறது என்பதையும், இந்தத் திட்டத்தின்கீழ் அரசினுடைய உதவி எவ்வளவு, ஹட்கோ மூலம் பெற்றது எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சரவர்கள் விளக்குவார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திட்டத்திற்கு ஹட்கோ கடனுதவி ஏறத்தாழ ரூ. 157 லட்சம் ஆகும். இதிலே அரசு மானியம் தருகிறது. மீதம் வீடு கட்டியதற்குப் பின்னாலே வசூல் செய்து அந்த கடன் திருப்பி அடைக்கப்படுகிறது.

[1987 மே 5

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கித் திட்டத்தின்கீழ் மேம்பாடு மனை திட்டம் வழங்கப்படுகிறது. இந்த உலக வங்கி திட்டத்தின் மூலம் செயல்படுத்துகின்றபோது அந்த தொகை எவ்வாறு பெறப்பட்டு திருப்பிச் செலுத்தப்படுகிறது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. அதிலே பேசுகிறபோது விரிவாகப் பேசி பதில் கூறுவோம்.

## தர்மபுரி மாவட்டத்தில் கிராம கூட்டுறவு வீடுகட்டும் திட்டம்

601—(*வினா எண் 9586) **திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டத்தில் பல வட்டங்களில் கிராம கூட்டுறவு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டு வீடுகட்டும் பணி நிதி வழங்காமையின் காரணமாக பூர்த்தி ஆகாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தர்மபுரி மாவட்டத்தில் உள்ள கிராம கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள் மூலம் வீடு கட்டுவதற்குக் கடன் அனுமதிக்கப்பட்டவர்களில் 1,271 உறுப்பினர்கள் முதல் அல்லது இரண்டாவது தவணையைப் பெற்றுக்கொண்டு கட்டிடப்பணியையே தொடங்காமலும், கட்டிடப்பணியை தொடங்கிய இனங்களில் கடனாகப் பெற்ற தொகையை அப்பணியில் முழுமையாகப் பயன்படுத்தாமலும் இருந்து வருவதனால் இவர்களுடைய வீடுகள் முழுமையாகக் கட்டி முடிக்கப்படாமல் உள்ளன.



1987 மே 5]

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே குறிப்பிட்டதுபோல தர்மபுரி மாவட்டத்திலே குறிப்பாக மொரப்பூர் தொகுதியிலே நான் சார்ந்த அரூர் தாலுக்காவில் நான் அறிந்து ஏறத்தாழ 500-க்கு மேற்பட்ட கிராமங்களில் வீடு கட்டக் கடன் வழங்கப்பட்டு முதல் தவணை கடன் கொடுக்கப்பட்டது. அந்த மொத்த கடன் தொகை ரூ. 5,000 என்று அனுமதிக்கப்பட்டு முதல் தவணை கொடுக்கப் பட்டு, அந்த தவணையில் கட்டடங்கள் கட்டிப் பூர்த்தி அடையாமல் இருக்கிறது. அதற்குக் காரணம் சம்பந்தப்பட்ட கூட்டுறவு இலாகா அதிகாரிகளைக் கேட்டதற்கு நிதி எங்களுக்குக் கிடைக்கப்படாமையால் அடுத்த தவணை கொடுத்து வேலை பூர்த்தி செய்யமுடியாத நிலை இருக்கிறது என்று காரணம் கூறியிருக்கிறார்கள். அதற்கு மொத்த தொகை ரூ. 5,000 என்று இருக்கின்ற நிலைமையை மாற்றி விலைவாசிகள் இன்றைக்கு ஏற்றம் அடைந்திருப்பதால், வீடு கட்டுவதற்கான உபகரணங்கள் சாமான்கள் விலை கூடுதலாக இருப்பதால், ரூ. 5,000 என்பதை ரூ. 10,000 ஆக மாற்றி இப்போது நிலுவையாக பூர்த்தி அடையாமல் இருக்கக்கூடிய வீடுகளை கட்டி பூர்த்தி செய்து கொடுப்பதற்கு இந்த ஆண்டு நிதியுதவி வழங்கி பூர்த்தி செய்ய அரசு முயலுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கிராமப்புறங்களிலே சங்கங்களின் மூலமாக ரூ. 5,000 அல்லது 6,000 அனுமதிக்கப்பட்டு அதிலே ரூ. 4,500 கடனாக வழங்கப்படுகிறது. சுமார் ரூ. 1,500 அளவிற்கு அந்தந்த சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த முயற்சியிலே அதை சேர்த்துக்கொண்டு வீடு கட்டவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த சங்கங்களிலே முதல் தவணையாக அடித்தளம் கட்டுவதற்கு 30 சதவிகிதம் முதலிலே வழங்கப்படுகிறது. கூரை மட்டம் வரை கட்டுவதற்கு 40 சதவிகிதம். அதற்குப் பின்னாலே மீதம் இருக்கின்ற 30 சதவிகிதம் வீடு முழுவதுமாக கட்டப்படுவதற்கு தரப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த பகுதியிலே 1024 உறுப்பினர்கள் கடன் பெற்றிருக்கிறார்கள். இதிலே பிரச்சினை என்னவென்றால் முதல் தவணை கொடுக்கப்பட்டு,

அவர்கள் வாங்கிய பணத்தில் இருந்து அவர்கள் சொன்ன பிரகாரம் வீடு கட்டாமல் இருக்கிறது. அடித்தளத்திற்கு மேல் மட்டத்தில் இருந்து இரண்டாவது கட்டம் முடிக்காமல் இருக்கின்ற காரணத்தினாலே, மூன்றாவது கட்டத்திற்கான தவணை கொடுக்கப்பட முடியாமல் இருக்கின்றது. அந்தப் பணியை முழுமையாகச் செய்வார்களானால் தவணைக்குரிய பணம் பெறுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**வாலாஜாபாத் யூனியன் காமாட்சி அம்மன் நூற்பாலை**

602—(*வினா எண் 9845) திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறதா அல்லது லாபத்தில் இயங்குகிறதா?

(ஆ) இந்த நூற்பாலைக்கு பஞ்சு எங்கிருந்து கொள்முதல் செய்யப்படுகிறது?

(இ) உற்பத்தியாகும் நூல்கள் எம்முறையில் விற்கப்படுகிறது?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) வாலாஜாபாத் யூனியனில் உள்ள காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை நஷ்டத்தில் இயங்குகிறது. நூற்பாலைக்குத் தேவையான பஞ்சு தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன் மூலமாக வாங்கப்படுகிறது. உற்பத்தி செய்யப்படுகிற நூல் கூட்டுறவு நெசவாலை சங்கங்களுக்கு வழங்கப்படுகிறது. வழங்கப்பட்டது போக மீதம் இருக்கிற நூல் வெளிச் சந்தையிலே விற்கப்படுகிறது.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு நூற்பாலைக்கு அரசு மூலம் ஏதாவது நிதி வழங்கப்பட்டுள்ளதா? மேலும் கூட்டுறவு நூற்பாலைகள் சிறந்த முறையில் இயங்க அதனுடைய வளர்ச்சியைக் கருதி நிர்வாகக் குழு அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-50).

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு தரப்பிலே ஏற்கெனவே அங்கே நிர்வாக இயக்குநர் இருக்கிறார். அரசு சார்பிலே சமீப காலத்தில் நிதி ஒன்றும் கூட்டுறவு ஆலைக்கு வழங்கப்படவில்லை. நஷ்டத்தில் இயங்குகின்றதை லாபத்தில் இயங்க வைக்க நிர்வாக இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு இதில் சம்பந்தப்பட்டவர்களுடன் கலந்து பேசி ஆலையை லாபத்தில் இயங்க வைக்க முயற்சி செய்யும்.

**திரு. க. நரசிம்மபல்லவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குழுவில் யார் யார் இடம் பெறுவார்கள் என்பதைப் பற்றி அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டைரக்டர் ஆஃப் ஹேண்ட்லூம் அண்ட் டெக்ஸ்டைல்ஸ், சம்பந்தப்பட்ட ஆலையின் நிர்வாக இயக்குநர் அதாவது எம்.டி., மற்றும் பினான்சியல் அட்வைசர் மற்றும் நூற்பாலைக்கு நிதி வழங்கியிருக்கிற வங்கியின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு மூலம் பேச்சுவார்த்தை நடத்தி மேற்கொண்டு நூற்பாலையை லாபத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி. என். முருகானந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மில் நஷ்டத்தில் இயங்குவதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும் இங்கே என்ன பிரச்சினை என்றால் ரா மெட்டீரியலை அதாவது பஞ்சை மில்லின் எம்.டி. மட்டும் வாங்குகிறார். அவர் பஞ்சை வாங்கும்போது எந்த விலைக்கு வாங்குகிறார், மற்றும் அதற்கான காரணங்களை எல்லாம் சொன்னாலும் கூட பஞ்சை வாங்கும்போது ஒரு கமிட்டி இருந்து, அந்த கமிட்டி நிர்ணயம் செய்கின்ற விலையை ஒப்புக்கொண்டு அந்த விலைக்கு பஞ்சை கொள்முதல் செய்தால் இன்னும் நிறைய நாம் உற்பத்திச் செலவைக் குறைக்க முடியும். இந்த மில்லில் கொள்முதல் பஞ்சை வாங்குவதற்கு முன்பு எம்.டி. இந்தக் குழுவில் கலந்தாலோசித்த பிறகு தான் கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணை பிறப்பிக்க இந்த அரசு முன்வருமா?

[1987 மே 5

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறது. அதன்படி ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலை நிர்வாக இயக்குநரும் தாமாக பஞ்சை வாங்க முடியாது. கோவையில் இருக்கிற தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேசனுக்கு எவ்வளவு தேவை என்பதை எழுதி அனுப்ப வேண்டும். மாசா மாசம் கூட்டம் நடத்தப்பட வேண்டும். அந்தக் கூட்டத்தில் நிர்வாக இயக்குநர் பர்சேஸ் செல் மூலம்தான் வாங்க வேண்டும். ஆக, அந்தக் குழு மூலம் தான் வாங்கப்படுகிறது. தனியாக எந்த நிர்வாக இயக்குநரும் தாமாக ஆலைக்கு வேண்டிய பஞ்சை வாங்குவதில்லை.

திரு. கே. பாலாஜி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் காமாட்சியம்மன் கூட்டுறவு நூற்பாலை தொடர்ந்து நஷ்டத்தில் இயங்குகிறது. இதுபற்றி நிர்வாக இயக்குநரை அணுகிகேட்டால், அங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற நூலை கோவாப்டெக்ஸ் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படுகின்ற காரணத்தால்தான் மார்க்கெட்டில் நூல் விலை அதிகமாக இருந்தாலும் இங்கே இவர்கள் நிர்ணயித்திருக்கின்ற விலை குறைவாக இருப்பதால் இவர்களுக்கு நூலைக் குறைந்த விலைக்கு வழங்குவதால் தான் இப்படிப்பட்ட நஷ்டம் கூட்டுறவு நூற்பாலைக்கு ஏற்படுகிறது என்று காரணம் கூறுகிறார்கள். ஆகவே, விலைக்கு விற்கப்படுகின்ற நூலின் விலையில் மாற்றம் செய்தாலே லாபம் வரும் என்று சொல்கிறார்கள். அதோடு கூட அவர்கள் 50 லட்சம் ரூபாய் வேண்டுமென்று அரசாங்கத்திலேயிருந்து கடன் கேட்டிருக்கிறார்கள். அங்கே இருக்கின்ற இயந்திரங்கள் எல்லாம் புதியவை. அங்கே பணியாற்றுகின்ற பணியாளர்களும் அனுபவம் வாய்ந்தவர்கள். ஆக, அந்த ஆலை சரியாக உற்பத்தி செய்தாலும்கூட நூலை குறைந்த விலைக்கு கோவாப்டெக்ஸ் மூலமாக கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குவதால் தான் நஷ்டம் ஏற்படுகிறது என்று தொடர்ந்து அந்த நிர்வாகம் சொல்கிறது. எங்கள் தாலுக்காவில் இருப்பது இந்த ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலை மட்டும் தான். என்றைக்கு அந்த ஆலையை மூடுவார்களோ என்கிற பயம் அங்கே இருக்கிறது. ஆகவே அவர்கள் கேட்டுள்ள 50 லட்சம் ரூபாயை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்க அதற்குண்டான ஏற்பாடுகளை செய்ய முன்வருவார்களா?



1987 மே 5]

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே, கூட்டுறவுத் துறையிலே 18 நூற்பாலைகள் இயங்குகின்றன. தமிழ்நாட்டில் 350 நூற்பாலைகள் தனியார் துறையில் இருந்தாலும், இவைகள் எல்லாம் ஏற்படுத்தப்பட்டிருப்பதே கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆகவே, இவைகள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நூல் வழங்கிக் கொண்டிருப்பதை நிறுத்த முடியாது. வெளி மார்க்கெட்டில் விற்பதை விட கொஞ்சம் விலை குறைவாகக் கொடுத்தால்தான் நாம் நெசவாளர் பெருமக்களுக்கு நன்மை செய்வதாக இருக்கும். மேலும் கமிட்டி நிர்ணயம் செய்கின்ற விலைக்குத்தான் விற்கக்கூடிய நிலை இருக்கிறது. அதோடு ஒவ்வொரு கூட்டுறவு நூற்பாலையிலேயும் உற்பத்தியாகின்ற நூல் முழுவதையும் அப்படியே கூட்டுறவுச் சங்கங்களுக்கு அவைகள் வழங்குவது கிடையாது. மூன்றில் ஒரு பங்கை தான் வழங்குகிறார்கள். மூன்றில் இரண்டு பங்கு நூலை அவர்கள் வெளி மார்கெட்டில் விற்கலாம். ஆக, வெளி மார்கெட்டில் மூன்றில் இரண்டு பங்கு நூலை அதிக விலைக்கு விற்பதன் மூலம்தான் இந்த ஆலைகளை லாபத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆகவே அவர்கள் நூலை கொடுக்க முடியாது என்று சொல்ல வழியில்லை. அது போல இன்றைக்கு எல்லா நூற்பாலைகளும் அரசிடம் கடன் கேட்கின்றன. அந்தந்த ஆலைகளுக்கு ஏற்ப அரசு தனியாக நிதித் துறையோடு கலந்து இது குறித்து பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர் பதவியிடங்கள்

603—(* வினா எண் 7352) திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல மாவட்டங்களில் மாவட்ட ஊட்டச்சத்து அலுவலர்கள் பதவி காலியாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை நிரப்ப அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வடாற்காடு, செங்கல்பட்டு மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாவட்டங்களில் மாவட்ட ஊட்டசத்து அலுவலர் பதவி நிரப்பப்படாமல் காலியாக இருந்தது.

(ஆ) நிரப்பப்படாமல் காலியாக இருந்த மேற்படி பதவிகளுக்கு நேரடி நியமனம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலுள்ள போதிலும், இத்திட்டத்தின் பணிகளின் முக்கியத்துவம் கருதி, இப்பதவிகள் துறையில் உள்ள அலுவலர்களைக் கொண்டு கூடுதல் பொறுப்பு அளித்து தற்காலிகமாக நிரப்பப்பட்டுள்ளன.

### ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம்.

604—(* வினா எண் 12069) **திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு சத்துணவு, சமூக நலம் மற்றும் கதர்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் 1987 ஆம் ஆண்டு மே மாதத்துடன் நிறுத்தப்பட உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987-ல் முடிவடைய இருந்த ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டத்தை 31—3—1988 வரை நீட்டித்து அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

### தஞ்சாவூர் மாவட்டம், குடவாசல் பஞ்சாயத்து யூனியன் முடிகொண்டான் ஆற்றில் படுகை அணை.

605—(* வினா எண் 7971) **திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க்கால் தலைப்பில் முடிகொண்டான் ஆற்றில் ஒரு படுகை அணை கட்டித்தரும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.





**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தஞ்சை மாவட்டம், குடவாசல் ஒன்றியம், அதம்பார் வாய்க்காலின் மூலம், குப்பயம், சோத்திரியம், மணியாங்குடி, மேலவெளி, ஒத்தைமேடு, பல்லவநத்தம், படுகை, வாழ்க்கை போன்ற கிட்டத்தட்ட பத்துக்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார், மூவாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பாசன வசதி பெற்றிருக்கின்றன. ஆகவே, அதைக் கருத்திற்கொண்டு இந்த ஆண்டே மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்த பெட் டேமைக் கட்டித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மூன்று இலட்சம் ரூபாயிலே அந்த பெட் டேம் கட்டுவதற்கு அரசு திட்டம் தீட்டியுள்ளது. காவேரி டெல்டா சீரமைப்புத் திட்டத்திலே அது சேர்க்கப்பட்டிருக்கிறது. அதிலே காலதாமதம் ஆகும் என்று சொன்னால், அரசினுடைய நிதியிலிருந்து செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. பாப்பா சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியிலே 1924 ஆம் ஆண்டு காவேரி ஒப்பந்தத்தைப் புதுப்பித்துக் கொள்ளாததன் விளைவாக இன்றையதினம் காவேரியிலே வருகின்ற தண்ணீரின் அளவு மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தாலே ஆறுகளிலே வருகின்ற தண்ணீர் ஹெல்ட் அப் ஆகி வாய்க்காலிலே பாய்வதில்லை. எனவே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கின்ற அந்தக் காவேரியிலே இருக்கின்ற வாய்க்கால்களில் எந்தெந்தப் பகுதிகளுக்கு ரெகுலேட்டர் தேவை என்று ஆய்வு செய்து, அந்தந்தப் பகுதி கூறிலே இந்த ஆண்டோ அல்லது அடுத்த ஆண்டோ அல்லது உலக வங்கித் திட்டத்தின் மூலமாகவோ பெட் டேம் கட்டி, பாசனத்திற்கு ஏற்பாடு செய்ய முடியுமா என்பதை அறிய விரும்புவதோடு: தண்ணீர் பூராவும் போய், கடலிலே சேருவதால், அதைக் கருத்திற்கொண்டு காவேரியிலே ஒவ்வொரு வாய்க்காலிலேயும் எந்த இடத்திற்குத் தேவை என்று ஆய்வு செய்து, உலக வங்கித் திட்டத்தின் மூலமாக அல்லது நான்கைந்து ஆண்டுக் காலத்திற்குள்ளாக எல்லாயிடங்களிலும் ரெகுலேட்டர் கட்டினால்தான்

வாய்க்காலிலே ஹெல்ட் அப் ஆகி தண்ணீர் பாயும். இதைக் கருத்திற்கொண்டு அமைச்சரவர்கள் ஒரு திட்டத்தைத் தயாரிக்க வழி வகுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, காவேரி டெல்டா சீரமைப்புத் திட்டம் என்பதே அப்படிப்பட்ட பணிகளை மேற்கொள்வதுதான். வருகின்ற தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி தேவைப்பட்ட இடத்திற்கு மிக வேகமாகத் தண்ணீரைக் கொடுப்பதுதான் இந்தத் திட்டத்தினுடைய வடிவமைப்பு. அவர் சொல்வதைப்போல காவேரி பகுதி பூரா செய்ய வேண்டுமென்று சொன்னால் அதிகச் செலவு ஆகும். ஆகவேதான் உலக வங்கி உதவியோடு அப்படிப்பட்ட முயற்சிகளை இன்றைக்கு அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.

**கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம்.**

606—(*வினா எண் 13569) **திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அண்ணா மாவட்டம் நிலக்கோட்டை ஒன்றியத்தில் கொடை ரோடு அருகில் சிறுமலை நீர்த்தேக்கத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் உள்ளது.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் எப்படியும் இந்தப் பணியைத் தொடங்குவதற்கு உத்தரவு வழங்குவார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த வினாவை எழுப்பினேன். ஆகையால் இந்தத் திட்டத்திற்கு முதலிலே எஸ்டிமேட், பிறகு ரிவைஸ்ட் எஸ்டிமேட் போட்டு இப்பொழுது அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்தப் பகுதியின் வறட்சி நிலையை அறிந்து இந்தத் திட்டத்தை உடனே நிறைவேற்றுவதற்கு உத்தரவு வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாங்கத்தைப் பொறுத்தவரைக்கும், இப்படிப்பட்ட திட்டங்களையெல்லாம் மிக வேகமாக மேற்கொள்ள வேண்டுமென்ற ஆசைதான் இருக்கிறது. ஆனால் நிதிப்பற்றாக்குறை மிகப்பெரிய சுமையாக நமக்கிருக்கிறது. இந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு 16 கோடி ரூபாய் என்று அதிகாரிகள் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது மறு ஆய்வு செய்து கொண்டிருக்கிறார்கள். அப்படி மறு ஆய்வு செய்து வந்தவுடனேயே முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் மிக வேகமாக எடுத்து வேலை செய்யப்படும்.

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வரவர்கள் உத்தரவு கேட்டு இதைச் செய்வதாகக் கூறினார்கள். ஆனால் மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வரவர்கள் அந்தப் பகுதிக்கு வருகை தந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை எப்படியும் செயல்படுத்துவதாக அந்தப் பகுதி மக்களுக்கு வாக்குறுதி அளித்தார்கள். புரட்சித் தலைவரின் வாக்குறுதியை நிறைவேற்றுகின்ற அமைச்சரவர்கள் இந்தத் திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு உடனே உத்தரவு வழங்குவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிக அவசரமாக இருக்கிறார்கள். மறு ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. மறு ஆய்வின் திட்ட அறிக்கை அரசாங்கத்திற்கு வந்தவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1962, 1963, 1964 ஆம் ஆண்டுகளில் ஆய்வு செய்யப்பட்டு 123 இலட்சம் ரூபாய்க்கு எஸ்டிமேட் போடப்பட்டு, பிறகு தள்ளுபடி செய்யப்பட்டு, மீண்டும் அதை எடுத்து 16.5 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டி, அரசாங்கத்திற்கு வந்திருக்கிறது. அதனுடைய முக்கியத்துவம் என்னவென்றால் மழைக்காலங்களில்

தண்ணீர் அதிகமாக வந்து கொடை ரோட்டிலிருந்து பள்ளப்பட்டி வரையில் உள்ள பாதைகளில் உடைப்பு எடுத்து, இரயில் கவிழக்கூடிய நிலைமை இருக்கிறது; ஆயிரக்கணக்கானவர்கள் சாகக்கூடிய நிலைமை இருக்கிறது; செத்தும் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையை மாற்றியமைக்க 1987-88 ஆம் ஆண்டிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய அறிவு நுட்பத்தைப் பயன்படுத்தி, திறமையைப் பயன்படுத்தி, இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** தலைவரவர்களே, இந்தத் திட்டத்தை ஆய்வு செய்த காலத்தில் பி.சி.ஏ.சி. ரேஷியோ மோசமாக இருந்ததால் மறு ஆய்வு செய்ய உத்திரவிடப்பட்டிருக்கிறது. மறு ஆய்வு செய்து சாதகமாக வரும்போது அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்.

### (அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப்பேரவைக்கு (செனட்) மூன்று உறுப்பினர்களை இவ்வவை உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கும்பொருட்டு வேட்புத் தாள்கள் கோரியபோது ஐந்து உறுப்பினர்கள் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்திருந்தார்கள். எனவே இன்று தேர்தல் நடைபெறும் என்று அறிவித்திருந்தேன். தற்போது உறுப்பினர்கள் டாக்டர் ந. மாசிலாமணி மற்றும் திரு. சா. ஜெயச்சந்திரன் இருவரும் தாங்கள் இந்தப் போட்டியிலிருந்து விலகிக்கொள்வதாக என்னிடம் கடிதம் மூலம் தெரிவித்துள்ளபடியால் கீழ்க்கண்ட மூன்று உறுப்பினர்கள் மேற்படி



பேரவைக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிவிக்கிறேன்.

1. திரு. சு. சிவராஜ்
2. திரு. சா. ஞானசுந்தரம்
3. திரு. துரை அன்பரசன்

எனவே, தேர்தல் தேவையில்லை என்பதையும் அறிவிக்கிறேன்.

## 3. தகவல் கோரல்

### வினாக்களுக்கு விடைகள் அனுப்புவதில் துறைகளில் ஏற்படும் தாமதம்.

திரு. கு. ரமணி: தலைவரவர்களே, இன்று கேள்வி நேரத்தில் என்னுடைய கேள்வியை நான் போட்டபோது, 5, 6 மாதங்களுக்கு முன்னால் போட்ட கேள்விக்கு அண்மையில் பதில் வந்தவுடனே பட்டியலில் போட்டு வந்துவிட்டது என்று சொன்னார்கள். இதற்கு முன்னாலே கூட கேள்வி போட்டபோதும் பதில் வருவதற்கு நீண்டநாள் ஆகிவிட்டது. சம்பந்தப்பட்ட துறையிலிருந்து இங்கே வந்தவுடன் தாமதம் இல்லாமல் பதில் தரப்படுகிறது. ஆனால் நீண்டநாட்களாகப் பதில் வராமல் இருக்கும்போது சம்பந்தப்பட்ட இலாகாவைக்கோரி, விரைவிலே பதில் பெறுவதற்கு என்ன நடவடிக்கை என்று ஒரு உறுப்பினர் கேட்டார்; நானும் கேட்கிறேன். நாங்கள் கேள்வியை அனுப்புகிறோம். 6 மாதம், ஒரு வருடம் கூட கழிந்துப் பதில் வருகிறது என்றால் அரசுதான் அதற்கு பொறுப்பு. பதில் தருவதில் தாமதம் ஏற்படுகிறபோது சில சங்கடங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, உறுப்பினர்கள் போடுகின்ற கேள்விகளுக்கு உரிய காலத்தில் சம்பந்தப்பட்ட துறையிலிருந்து பதிலைப் பெற்று, 41 நாட்களுக்குள்ளாகப் பதில் வாங்கித் தருவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** தலைவரவர்களே உடனடியாகப் பதில் தர அரசு எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும். சில கேள்விகளின் தன்மையைப் பொறுத்து, நிறைய விவரங்களைப் பெறவேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது தவிர்க்க முடியாமல் சற்று, காலதாமதம் ஏற்படுகிறது. கேள்விகளைப் பொறுத்தவரையில் எதைப்பற்றிக் கேட்கிறார்கள், என்ன விவரத்தைக் கோருகிறார்கள் என்பதைப் பொறுத்தும் காலதாமதம் ஏற்படுகிறது.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, நான் கேட்டதற்குச் சரியான பதில் வரவில்லை. கடுமையான கேள்விகளாக இருந்தால் அரசு இலாகா 40, 41 நாட்களுக்குள்ளாகப் பதில் பெற முடியாது என்பது சரியல்ல. சாதாரணக் கேள்வியாக இருந்தாலும் கடுமையான கேள்வியாக இருந்தாலும் 41 நாட்களுக்குள்ளாகப் பதில் தருகின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இதுபற்றி என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** தலைவரவர்களே, இதே பிரச்சினைதான் (மணியடிக்கப் பெற்றது) வேறு ஒன்றும் நான் கேட்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு நான் பதில் சொல்லி விட்டேன். என்னுடைய அலுவலகத்தில் தாமதம் கிடையாது. அமைச்சகங்களிலிருந்து பதில் வந்தவுடன் அது முறைப்படி அவைக்கு வந்துவிடும். பதில் வந்தவுடன் அவையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு நாளைக்கு 10 கவன ஈர்ப்புத் தீர்மானங்களை எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) கேள்விக்கும் பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளப்படுகிறது. விரைவிலே பதிலை அனுப்ப வேண்டும் என்று என்னுடைய அலுவலகத்திலிருந்து துறைச் செயலாளர்கள் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வினாக்களைப் பொறுத்த வரையிலும் இவ்வளவு நாட்களுக்குள்ளாகப் பதில் வரவேண்டுமென்று திட்டவட்டமாகத் தெளிவாக விதிமுறைகள் வகுக்கப்பட்டு இருக்கின்றன. அந்தக் குறிப்பிட்ட நாட்களுக்குள்ளாக வினாக்களுக்கான விடைகளைத் திரட்ட முடியவில்லை என்றால் மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களிடத்தில் அனுமதி பெற்று சில காலம் நீட்டிக்கலாம் என்று இருக்கிறது. ஆனாலும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக வரவேண்டுமென்றுதான் எல்லாத் துறைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. அண்மையில்கூட தாங்கள் கண்டிப்பாகச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போது விரைவுபடுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே குறிப்பிட்ட





நாட்களுக்குள்ளாக கேள்விகளுக்கான ஏதாவது பதில் வரவேண்டும் என்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்தினை இந்த அவை ஏற்றுக்கொள்கிறது. அதனை மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். சிலபல நேரங்களில் குறிப்பிட்ட பதிலைத் திரட்ட முடியாத சூழ்நிலை ஏற்படுகிற போது அவைத் தலைவருடைய அனுமதி பெற்று சில காலம் நீட்டிக்கிற வகையில் இருக்கிறதே தவிர இரண்டு வருடம், மூன்று வருடம் என்று நீட்டிக்கிற வாய்ப்பு இல்லை. அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையில் மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வை அடிப்படையாக வைத்தும், மாண்புமிகு அவைத்தலைவர் அவர்கள் கூறிய கருத்தை அடிப்படையாக வைத்தும் துறையினர் உரிய கவனம் செலுத்தி இந்த விதிமுறைகளுக்கு மதிப்பளித்து குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக விடைகளை அனுப்புகின்ற வகையில் ஏற்பாடுகளைச் செய்வார்கள் என்று நான் கருதுகிறேன். அதற்கான முறைகளில் இந்தச் சட்டமன்றச் செயலகம் மீண்டும் நினைவு படுத்தும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (ஆ) அலுவல் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் நியமனம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 231 (1)-ன் கீழ் பின்வரும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களை 1987-88 ஆம் ஆண்டிற்கான அலுவல் ஆய்வுக் குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கிறேன்:

1. மாண்புமிகு முதல் அமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு உணவு அமைச்சர்
4. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்
5. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
6. மாண்புமிகு திரு. உ. சுப்பிரமணியன், அரசுத் தலைமைக் கொறடா. எதிர்க்கட்சித் தலைவர்.
7. திரு. துரை கோவிந்தராசன், அரசுத் தலைமை கொறடா.
8. திருமதி. டி. யசோதா
9. திரு. சி. பழனிமுத்து

10. திரு. கி. மனோகரன்
11. திரு. சோ. மா. இராமச்சந்திரன்
12. திரு. கு. ரமணி
13. திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்
14. திரு. ஆ. கா. அ. அப்துல் சமத்
15. திரு. பொ. உத்திராபதி

மாண்புமிகு பேரவைத் தலைவர் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவர் ஆவார்.

(இ) மதுரை காமராஜ் பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவைக்கு மற்றுமோர் அறிவிப்பு. மதுரை காமராஜ் பல்கலைக் கழகப் பேரவையில் (செனட்) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த திரு. சித. சிதம்பரம், திரு. ஏ. சந்திரசேகரன், திரு. வி. பாலகிருஷ்ணன், திரு. ஆர். டி. கோபாலன் ஆகியோரின் பதவிக் காலம் 15—11—1984 ஆம் நாளுடன் முடிவடைந்து விட்டதால் பல்கலைக் கழகப் பேரவையில் ஏற்பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. எனவே வேட்பாளர்கள் தங்கள் நியமனத் தாள்களை 6—5—1987 புதன் கிழமை மாலை 3.00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். நியமனத் தாள்கள் 7—5—1987 வியாழக்கிழமை காலை 11-00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 7—5—1987 வியாழக்கிழமை மாலை 3-00 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 9—5—1987 சனிக்கிழமை காலை 10-00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை சென்னை கோட்டையில் இருக்கும் முன்னாள் சட்டமன்ற மேலவை மண்டப கிழக்கு வளாகத்தில் வாக்கெடுப்பு நடைபெறும்.





4. அறிக்கை அளித்தல்.

சட்ட விதிகள் ஆய்வுக் குழு.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 6-வது அறிக்கையை (எட்டாவது சட்டமன்றப் பேரவை) பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் சட்ட முன்வடிவு.

தொழுநோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவு, 1987.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987-ஆம் ஆண்டு தொழுநோயாளிகள் (தமிழ்நாடு நீத்தறவு) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 15—காவல் துறை—தொடர்ச்சி.

(ஆ) கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்—தொடர்ச்சி.

***திரு. கு. ரமணி :** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்த போலீஸ் மானியத்தின் மீது இரண்டு நாள் விவாதம் நேற்றிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு இந்தச் சபையின் மாண்புமிகு உறுப்பினர் பல விஷயங்களை இந்த அவை முன்னர் எடுத்து வைத்திருக்கிறார்கள். மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்

[திரு. கு. ரமணி] [1987 மே 5

(முற்பகல் 11-10)

கட்சியின் சார்பில் நானும் சில விவரங்களைக் கூற விரும்புகிறேன் போதிய அவகாசம் இல்லாத கஷ்டத்தினால் சில விஷயங்களை மட்டும் இந்தக் குறிப்பிலிருந்து நான் சொல்ல வேண்டி இருக்கிறது. காவல் துறை பற்றி நமக்குச் சமர்ப்பிக்கப் பட்டுள்ள இந்த அறிக்கை என்பது எப்போதும் போல் பெரிய மாறுதல் ஏதும் இல்லாத, கிட்டத்தட்ட ஒரேமாதிரியான அறிக்கையாகத்தான் இருக்கிறது. 1980 முதல் 1986 முடிய உள்ள அறிக்கைகளை நான் பார்த்தேன். பெரிய வித்தியாசங்கள் எதுவும் தென்படவில்லை. மிகச் சிறிய மாற்றங்கள்தானே அன்றி ஒரே தரத்தில் இருக்கக்கூடிய அறிக்கைகள்தான் அவை. உதாரணமாக 1982 அறிக்கையில் முதல் பக்கத்தில் என்ன சொல்லுகிறார்கள்? மக்கள் வாழ்க்கையின் போக்கிலும் கலாசார தொடர்புகளிலும் மாற்றங்கள் ஏற்படுவதன் விளைவாக குற்றங்களின் தன்மை பெரிதும் மாறுபட்டு குற்றவாளிகள் செயல்களின் முறைகளிலும் நவீன முறைகளை கையாண்டு வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் காவல் துறையினர் குற்றங்களை கையாள்வதில் சற்று திறமையாக செயல்பட்டு குற்றங்களை தவிர்ப்பதிலும் குற்றவாளிகளை அடக்குவதிலும் அதன் திறமையை மக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடிய சூழ்நிலை களை உருவாக்க வேண்டி உள்ளது என்று சொல்லுகிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதே மாதிரி 1986-ஆம் வருட அறிக்கையில் எடுத்துப் பார்த் தால் என்ன சொல்லுகிறார்கள். குற்றவாளிகள் செயல் முறை களில் தற்போது மாறுபடுகின்றனர். காவல் துறையினர் குற்றவாளிகளை கண்டு பிடிப்பதில் ஈடுபடுகிறார்கள். குற்ற வாளிகளின் தன்மைகளும், குற்றவாளிகளின் செயல் முறைகளும் நவீன முறையில் மாறுபடுகின்றன. சமுதாய கலாச்சாரங்கள் மாறி வரும்போது குற்றங்களைப் பற்றிய மக்களின் எண்ணங் களும் மாறுகின்றன. குற்றவாளிகள் குற்றங்களைச் செய்வதில் அதை ஒரு தொழிலாகவே ஆக்கி வருகின்றனர். முன்பு நடந்த தைப் போல் அன்றி தற்போது குற்றவாளிகள் புதிய முறை களையும் கையாளுகின்றனர். எனவே குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதில் அவர்களுடைய முறைகளைவிட திறமை மிக்க



1987 மே 5]

தொழில் நுட்ப வசதிகளை காவல் துறையினர் கொண்டிருக்க
வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதேமாதிரி 86 ஆம்
ஆண்டு . . . . . (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு
உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திற்குச செல்ல வேண்டும்.
விவாதம் ஆரம்பித்தாகி விட்டது. அவரவர் இருப்பிடங்களுக்கு
போங்கள்.

திரு. கு. ரமணி: இப்படி ஒப்பிட்டுப் பார்த்தால் இதேபோன்ற
வாசகங்கள் இந்த அறிக்கையிலும் பார்க்கலாம். என்ன மாறுதல்
கள் வந்திருக்கின்றன என்ற அப்படிப்பட்ட தன்மைகளை கூட
பரிசீலனை செய்து அளிக்கப்பட்ட அறிக்கை மாதிரி தெரிய
வில்லை இது.

இதே மாதிரிதான் குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும்
இருக்கிறது. 1980-லிருந்து 1986 ஆம் ஆண்டு வரையிலான குற்
றங்களைக் கண்டு பிடிப்பதிலும் வித்தியாசம் அதிகம் இல்லை.
கண்டுபிடிக்கப்பட்ட
புகார் செய்யப்பட்ட குற்றங்கள்,
குற்றங்கள் கொலை, கொள்ளை, திருட்டு போன்ற 7
அயிட்டங்களை ஒன்றாகச் சேர்த்து எடுத்து புள்ளி விவரம்
கொடுக்கக்கூடிய அறிக்கையில் 1980 ஆம் வருஷத்திலே 59
பெர்சென்ட் குற்றங்கள்தான் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.
41 சதவீதம் கண்டு பிடிக்கப்படவில்லை. 1981-லே 69 பெர்சென்ட்
குற்றங்கள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன 31 பெர்சென்ட்
கண்டுபிடிக்கப்படவில்லை. 1982-லே 71 சதவீதம் கண்டு
பிடிக்கப்பட்டிருக்கின்றன. 29 சதவீதம் கண்டுபிடிக்கப்பட
வில்லை. 1984-லே 65 பெர்சென்ட் கண்டுபிடிக்கப்பட்டிருக்
கின்றன. 35 பெர்சென்ட் கண்டுபிடிக்கப்படவில்லை. 1985-லே
69 பெர்சென்ட் கண்டுபிடிக்கப்பட்டது. 31 பெர்சென்ட் கண்டு
பிடிக்கவில்லை. 1986-லே 65 பெர்சென்ட்தான் கண்டுபிடித்திருக்
கிறார்கள். அதுவும் எண்ணிக்கையில் கீழே போய்விட்டது.
இந்த அளவுக்குத்தான் குற்றங்களைக் கண்டுபிடித்திருக்
கிறார்கள். அப்படியானால் ஒவ்வொரு வருடமும் குற்றங்கள்
அதிகமாகி இருக்கின்றன. அடுத்த வருடம் 38,000
குற்றங்கள் வந்தால் அதில் 24,000 கண்டு பிடிக்கப்பட்டிருந்தால்
அடுத்த வருடம் 35,000, 34,000 என்று குற்றங்கள் வருகிறபோது

ஒவ்வொரு வருடமும் 10 ஆயிரத்திலிருந்து 12, 13 ஆயிரம் வரை குற்றங்கள் கண்டு பிடிக்கப்படாமல் ஒவ்வொரு வருஷமும் நின்று விடுகின்றன என்ற கணக்கு நமக்குத் தெரிகிறது. இந்த நிலைமை ஏற்படுவதற்கு என்ன காரணம் என்பதை அரசும் இலாகாவும் மிக ஆழமாகக் கவனிக்க வேண்டும். குற்றவாளிகள் அதிக யுக்திகளை கையாளுகிறார்கள். அதற்கேற்ற வகையில் நவீன கருவிகள் நமக்கு இருக்க வேண்டும் என்று சொல்வது நாம் எடுக்கக் கூடிய வேலைகளுக்கு ஒரு உதவியே தவிர குற்றங்களின் எண்ணிக்கை குறைக்கப்படுவதற்கு அது பெரிய உதவி செய்யாது. குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே போகாமல், அதன் எண்ணிக்கையை மிகமிக கீழாகக் கொண்டு வந்து குறைக்கக்கூட நம்மால் முடியவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதனுடைய அர்த்தம் நம்முடைய காவல் துறை எந்தவிதமான திறமையும் இல்லாத, போதிய அளவிற்குச் செயல்படாத துறை என்று சொல்ல வரவில்லை. காவல் துறை பல நல்ல காரியங்களைச் செய்திருக்கிறது. பல கடுமையான குற்றங்களைக் கண்டுபிடித்து இருக்கிறது. பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் நடந்திருக்கிறது. ஆகவே காவல் துறை செயல்பட்டிருக்கிறது, இல்லையென்று சொல்லவில்லை. குற்றங்களுடைய நிகழ்வுகளைப் பார்த்தால் அது குறைவதாகத் தெரியவில்லை. 1 சதவிகிதம், 2 சதவிகிதம், 4 சதவிகிதம், 5 சதவிகிதம் என்ற வித்தியாசத்தில்தான் இருக்கும். இப்படி ஒரு ஏழெட்டு வருஷங்களுக்கு ஒரே மாதிரியாக இருக்குமென்றால், பெரிய மாற்றங்கள் வருகின்றன என்றெல்லாம் சொல்வது அதீதமான நிர்ணயிப்பு. அது சரியான நிர்ணயிப்பு இல்லையென்றே சொல்ல விரும்புகிறேன். துப்பாக்கிப் பிரயோகம் 26 முறை நடந்திருக்கின்றனவென்று அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. 9 முறைகள் கடத்தல் பொருள்களைக் கொண்டுபோன வாகனங்கள் மீது நடத்தப்பட்டிருக்கிறது. அதில் யாரும் காயம் அடையவில்லை. பாக்கி 17 முறைகள் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் என்ன நிலைமை? அதைத் தொகுத்துக் கூறவில்லை. ஆங்காங்கு சொல்லியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இடங்களில் 2 பேர் செத்தார்கள், 3 பேர் செத்தார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி பார்த்தால் 10, 12, பேர்களுடைய கணக்கு வருகிறது. அதையும் தொகுத்துச் சொல்லலாம் இல்லையா? தொகுத்துச் சொல்லாதது மட்டுமல்ல



26 முறைகள் துப்பாக்கிப் பிரயோகம் இப்படிப்பட்ட முறையில் செய்ய வேண்டி வந்திருக்கிறது என்று சொன்னால், அது ஒரு நியாயமான முறையாக இருக்க முடியாது. நம்முடைய முன்னேற்பாடுகளும், நாம் உஷாராக இருப்பதும், பொதுமக்களுடன் காவல் துறைக்கு இருக்க வேண்டிய அறுந்து போகாத தொடர்ச்சியான தொடர்பும் இருந்திருக்குமானால் இதைக்கூட காவல் துறை தவிர்த்து இருக்க முடியும் என்பதுதான் அனுபவத்தில் நாங்கள் கூறக்கூடிய விஷயம். ஆயினும் இவ்வளவு துப்பாக்கிப் பிரயோகம் நடக்கவேண்டி வந்தது ஏன் என்பதைச் சிந்தித்துப் பார்ப்பது அவசியம். கொலைகள், கொள்ளைகள், திருடுகள், ரவுடித்தனங்கள், பெண்கள் மீது கடுமையான தாக்குதல்கள் இப்படிப்பட்ட நடவடிக்கைகள் மேலும் மேலும் அதிகப்பட்டு வருகின்றன என்பதுதான் இதனுடைய யதார்த்தமான நிலை. மக்களிடத்தில் தொடர்பு கொண்டால் இந்த விவரங்கள் உங்களுக்குத் தெரியும்.

அதேமாதிரி வகுப்புக் கலவரத்தைப் பற்றிச் சொல்லும் போது, நாட்டில் ஜாதி மத வித்தியாசங்கள் வளர்க்கப்பட்டு, வகுப்புக் கலவரம் தூண்டி விடப்பட்டு, இந்த நாட்டினுடைய உறுதிப்பாட்டை கட்டமைப்பை சீர்குலைப்பதற்கான நடவடிக்கைகள் இன்றைக்கு நாடு முழுவதும் நடக்கின்றன. அதை நாம் அறிந்திருக்கிறோம். நாடு முழுவதும் நாட்டினுடைய ஒற்றுமையை காப்பாற்றுவதற்கு போராட்டங்கள் நடக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவை நடக்கும் போது உறுப்பினர்கள் அவைக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது, அமைச்சர்களுக்கும் தொல்லை கொடுக்கக் கூடாது. உறுப்பினர்கள் அவரவர்களுடைய இருக்கைக்குப் போக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வதை மற்றவர்கள் கேட்கவிட மாட்டார்கள். வகுப்பு கலவரத்தைப் பொறுத்த வரையில் ஒன்றிரண்டு விஷயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

14—4—1987-ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ஆர். எஸ். எஸ். அமைப்பு சென்னையில் ஒரு ஊர்வலத்திற்கு அனுமதி கேட்டு, காவல் துறை அந்த அனுமதியைக் கொடுத்தது.

[திரு. கு. ரமணி] [1987 மே 5

அந்த ஊர்வலம் மூன்று முஸ்லீம் மசூதிகள் உள்ள தெரு வழியாக நடத்திச் செல்லப்பட்டு, புரவோகேட்டிவான கோஷங்கள் எழுப்பப்பட்டு, கலவரம் மூள இடம் கொடுத்தது. கலவரத்தில் ஒரு இளைஞர் கூட உயிர் நீத்தார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சென்னை ஜில்லா கமிட்டி இதனைக் கண்டித்து அறிக்கை விட்டது. பல நண்பர்கள் இதைக் கண்டித்து பத்திரிகைகளில் எழுதியிருக்கிறார்கள். இதே இடத்தில் 1964-ம் ஆண்டில் ஊர்வலத்திற்கு பெர்மிஷன் கேட்ட போது, அன்றைக்கு காவல் துறை அனுமதி மறுத்திருக்கிறது. காரணம் அந்த இடம் அப்படிப்பட்ட சலனம் உள்ள இடம். ஆபத்து இருக்கிறது என்று அன்றைக்கு அனுமதி மறுத்தார்கள். அன்றைய தினத்திலிருந்து அங்கே ஊர்வலத்திற்கு அனுமதி கொடுப்பதில்லை. இப்போது 14-ம் தேதி தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று ஏன் அனுமதி கொடுத்தார்கள்? ஏதோ மக்களுடைய ஜனநாயக உரிமையை காப்பாற்றுவதற்கு அனுமதி கொடுத்தோம் என்று சொல்வது சரியாகாது. என்னைக் கேட்டால் அது ஜாக்கிரதையான செயலல்ல. அதனுடைய விளைவாக அங்கே கலவரம் மூண்டு, பலபேர் காயமடைந்து, ஆஸ்பத்திரிக்குப் போய், ஒரு இளைஞன் இறந்தார். இதிலே கவனமாக இருந்திருக்க வேண்டும். இப்படிப்பட்ட முறையில் வகுப்புக் கலவரங்களை, ஜாதி உணர்வுகளை கிளப்பும்படியான நடவடிக்கைகளுக்கு நிச்சயமாக அனுமதிக்கக் கூடாது. அதேசமயத்தில் மக்களுடைய ஜனநாயக இயக்கங்கள், அரசியல் இயக்கங்களுக்கு அனுமதி மறுப்பதும் கூடாது. அதுவும் சரியில்லையென்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-20)

இராஜபாளையத்தில் 19—4—1987-ம் தேதியன்று ஒரு சைக்கிள் கடையில் சைக்கிள் வாடகைக்கு எடுக்கக்கூடிய ஒரு சின்ன விஷயம். இந்த விஷயத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு தகராறு தான் காரணமாகக் காட்டப்பட்டிருக்கிறது. உண்மையான காரணம் அதுவல்ல. அந்த நகரத்தில் இரண்டு சமூகத்தினர் மத்தியில் சில ரவுடிக் கூட்டங்கள் நிரந்தரமாக இருந்து செயல்பட்டு வருகின்றன. அவர்கள் சுற்றுப்புறத்தில் பலாத்கார நடவடிக்கைகளை நடத்தி வந்திருக்கிறார்கள். இதுபற்றி காவல் துறைக்கு பல குறிப்புகள், ரிப்போர்ட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தச் சமயங்களிலே காவல்துறை விழிப்பாக இருந்து,



1987 மே 5] [திரு. கு. ரமணி]

அந்த ரவுடிக் கூட்டத்தினுடைய நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு உறுதுணையான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. அந்த ரவுடிக் கூட்டம் சுற்றுவதற்கும், அக்கிரமம் செய்வதற்கும் ஊக்கம் கிடைத்தது. இந்த அற்ப சம்பவத்தை அந்த ரவுடிக் கூட்டங்கள் பயன்படுத்தி, சமூகக் கலவரமாக தூண்டும்படியான முறையில் தூண்டிவிட்டு, பல மக்கள், அப்பாவி மக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். கொள்ளை அடிக்கப்பட்டது. ரவுடிக் கூட்டத்தினுடைய வழக்கம் பணத்தைக் கொள்ளை அடிப்பது, கலகம் பண்ணுவது, மற்றவர்களுடைய சொத்துக்களை அபகரிப்பது, என்பதுதான் அவர்களுடைய தொழில். ஆகவே காவல்துறை சார்பந்தப்பட்டவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? முன்கூட்டியே தகுந்த ஜாக்கிரதையோடு மக்களோடு தொடர்பு இருந்திருக்குமானால், இந்த விஷயம் அவ்வளவு தூரத்திற்குப் போகாமல், ஒரு வாரத்திற்கு, 2 வாரத்திற்கு என்று கலகத்தினுடைய தொல்லையை நீடிக்காமல் தடுத்திருக்க முடியும். இதிலே உஷார் தன்மை குறைவு என்பதுதான் நான் சொல்லவேண்டியதாக இருக்கிறது.

அதேமாதிரிதான் பெண்கள் மீது நடைபெறுகிற தாக்குதல்கள் மேலும் மேலும் அதிகமாகிக் கொண்டு வருகின்றன, குறைய வில்லை. இதை நாம் கணக்கில் எடுக்கவேண்டும். பல விஷயங்களில் கேஸ்கள் போட்டார்கள். தண்டனை வாங்கிக் கொடுக்கிறார்கள், இதையெல்லாம் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நாம் இல்லை என்று சொல்லவில்லை. பல நல்லவைகள் நடந்திருக் கின்றன. ஆனாலும் இது காணாது. நம் நிலைமைக்கு இது போதாது. வரதட்சணைக் கொடுமையினால், கொலைகள் நாள்தோறும் அதிகரித்து வருகின்றன. அவற்றைத் தடுக்க ஒருசில சட்டங்கள் இருந்தபோதும், அவைகள் சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை என்ற குறை இருக்கிறது. கணவன் வீட்டில் துன்புறுத்தப்பட்ட பெண்கள் சார்பில் காவல் நிலையங்களிலே புகார் கொடுத்தால், அதைப் பதிவு செய்து, உடனே விசாரணை நடத்த முற்படாமல், போலீசாரே சமரசம் செய்ய முயற்சிக்கிறார்கள். சமரசம் பேசி முடித்துவிடலாம் என்று பார்க்கிறார்கள். அப்படியானால் கணவன், மனைவியிடம் பேசி, சேர்த்து வைக்க வேண்டாமா, நாம் சமரசம்பேச வேண்டாமா என்று கூறுவார்கள். அது அல்ல பிரச்சினை. இது

முற்றி ஒரு கட்டத்திற்கு வந்து, உயிருக்கு ஆபத்து என்கிற போதுதான் ரிப்போர்ட் கொண்டு வருகிறார்கள். அதன் மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டியது உங்களுடைய கடமை. அது இல்லை என்று சொன்னால், இந்தச் சமாதானம் பேசுவதால் ஒன்றும் முடிவு அடைவதில்லை. அது கொலையிலே தான் போய் முடிகிறது. இதனால் கொடுமைகள் நீடிக்க வழி ஏற்படுகிறது. பிரச்சனைகள் தீருவதில்லை. இதற்கு மாவட்டங்களில் உள்ள தனி போலீஸ் பிரிவில் இருக்கிற ஸ்ட்ரெங்த், பலம் போதாது. இந்தக் காரியத்திற்காக என்று அமைக்கப்பட்டு இருக்கிற டி.எஸ்.பி-க்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்; காவலர்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். இதைச் செய்யவில்லை என்று சொன்னால், பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதியை உடனடியாக தடுக்க முடியாமல் போய்விடும் என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இந்த வழக்குகளிலே இன்னொரு விதத்திலே என்ன செய்கிறார்கள் என்றால், இந்த வரதட்சணையின் காரணமாக ஏற்பட்டு இருக்கக்கூடிய கொலைகளைப் பற்றி ஆராய்ந்து, கண்டுபிடிப்பதற்காக என்று சொல்லி, வருடக் கணக்கில் நீட்டித்துக் கொண்டே போய், இறுதியாக அந்த கேஸ்கள் தோல்வி அடையக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. இது ஒரு டெக்னிக் மாதிரி இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது என்று சொன்னால் கூட மிகையாகாது. இந்த நிலையை மாற்ற வேண்டும்; கட்டாயமாக மாற்றவேண்டும்.

ஒன்றிரண்டு உதாரணங்களை நான் சொல்ல விரும்புகிறேன். சென்னை விருகம்பாக்கத்தில், சாந்தி என்ற பெண், திருமணம் ஆகி 6 மாதத்திலே சந்தேகத்திற்கு இடமான முறையில், 21—5—1986-ல் மரணம் அடைந்திருக்கிறார். சாந்தியின் கணவர் வெங்கடாசலம், ஆசிரியர். சாந்தியைக் கொன்றதாக பெண்ணின் தகப்பனார் புகார் கொடுத்துள்ளார். தாசில்தார் விசாரணை திருப்தி அளிக்கவில்லை. போலீசார் விசாரணையும் பாரபட்சமற்றதாக இல்லை என்று கூறுகிறார்கள். ஆகவே விசாரணையைத் திரும்பவும் நடத்த வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.





நெல்லை மாவட்டம், செங்கோட்டையருகே விசுவநாதபுரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த கனகவல்லியின் கணவன் செல்லையா, 4 ஆண்டுக் காலமாக வரதட்சணை கேட்டு, துன்புறுத்தி, வந்தது பொறுக்காமல், 8—9—1986 ஆம் தேதியன்று கனகவல்லியின் தகப்பனார், பரமய்யத்தேவர், தாய் சங்கரவடிவு, சகோதரிகள் லிங்கம்மாள், முத்துலட்சுமி, மகள் காமாட்சி ஆகியோர் விஷம் குடித்து உயிர்விட்டார்கள். இது குறித்து, அரசும், காவல்துறையும் என்ன நடவடிக்கை எடுத்தன என்பது தெரியாது. இவ்வளவு பெரிய கொடுமைகளுக்கு என்ன முடிவு கொண்டு வர இருக்கிறார்கள், என்ன செய்திருக்கிறார்கள் என்பது இன்னமும் தெரியாமல் இருந்து வருகிறது.

அதுமாத்திரமல்ல, சென்னை மைலாப்பூரைச் சேர்ந்த சாந்தி, தங்கம்மாளை, 3—3—1986-லே சைதாப்பேட்டை, ரங்கராஜபுரத்தைச் சேர்ந்த அலெக்ஸ் சாமுவேல் திருமணம் செய்து கொண்டார். கடந்த 6 மாதங்களாக, பீரோ, படுக்கை முதலியன வாங்கிக் கொடுக்கவேண்டுமென்று பெண் வீட்டாரை நிர்பந்தப்படுத்தி, மனைவியை அலெக்ஸ் அடித்து துன்புறுத்தி உள்ளார். 8—3—1987 அன்று சந்தேகத்திற்குரிய முறையில், சாந்தி இறந்து இருக்கிறார். அவருடைய கணவர் அலெக்ஸ் கராத்தே பயிற்சியைப் பயின்றவர். அவர்தான் தன் மகளை அடித்துக் கொன்றிருக்க வேண்டும் என்று அந்தப் பெண்ணினுடைய தகப்பனார் புகார் செய்திருக்கிறார். என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று தெரியாது. இந்தமாதிரி புகார்களில் உடனுக்குடனே ஆய்வு நடத்தி உண்டு, இல்லை என்பதை முடிவுக்குக் கொண்டுவரவில்லையென்று சொன்னால், ஒவ்வொருவரும் இஷ்டமான முறையில் தன்னுடைய மனைவியை என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்ற நிலைமைக்குப் போய்விடும்.

மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுக்கா, ஓடையப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த அற்புதம் என்ற அம்மையாரின் மகள் செல்வியை அவள் கணவன், பெரியார் மாவட்டம் பவானி அருகிலுள்ள ஊராட்சிகோட்டை மின்சார பிரிவு-4ல் வேலை செய்யும் மணியும், அவனுடைய அண்ணன் சோலைமலையும் வரதட்சணை அதிகம் கேட்டு துன்புறுத்தி வந்ததாகவும் இறுதியில் மின்சாரத்தைப் பாய்ச்சி 3—9—1986 ஆம் தேதியன்று கொன்று விட்டதாகவும் தாயார் அற்புதம் புகார் கொடுத்திருக்கிறார்.

[திரு. கு. ரமணி] [1987 மே 5

அந்தப் புகார் என்னவாயிற்று? எப்படி இந்தக் கொலையை செய்தார்களா என்று இன்வெஸ்டிகேட் செய்திருக்கிறார்களா என்கின்ற விவரங்கள் கிடைக்கவில்லை. நடவடிக்கை எடுக்க வில்லை என்று அவர் கூறுகிறார்.

அந்தமாதிரி, சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா எட்டிகலசாலை கிராமத்தைச் சேர்ந்த அர்த்தநாரீசுவரனின் 8 மாத கர்ப்பிணி மனைவி 'மகாதேவியை' தனது உறவினர்களின் உதவியுடன் (டேன்னிஷ்பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் ஆறுமுகம் அர்த்தநாரீசுவரனின் சித்தப்பா ஆவார்) அவர் செய்தார் என்று அர்த்தம் இல்லை, குடும்பத்தினுடைய உதவி யோடுதான் என்று சொல்கிறார்கள்—8 மாத கர்ப்பிணியை அடித்தே கொன்றுவிட்டார்கள். வரதட்சணை கேட்டு அடிக்கடி கணவன் வீட்டார் துன்புறுத்துகிறார்கள் என்று 2—3—1986-ல் மகாதேவியே மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருக்கிறார். கடைசியாக, அவளுடைய கணவன் வீட்டார், அந்தப் பெண்ணை பேய் அடித்துக் கொன்று விட்டது என்ற ஒரு பதிலை கொடுத்துவிட்டு, பிணத்தை உடனே எரித்து விட்டார்கள். அவர்களுடைய ஜாதி பழக்கம், பிணத்தை எரிப்பது இல்லை என்று சொல் கிறார்கள். இப்படித்தான் காரியங்கள் நடக்கின்றன. இதை யெல்லாம் கண்டுபிடிப்பது சிரமமான காரியம் என்று சொல்வது நம்மாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கொலை நடந்தி ருக்கிறது. வழக்கத்திற்கு மாறாக பிணத்தை எரித்திருக் கிறார்கள். எந்த அளவிற்கு ஜாக்கிரதையாக, வேகமாக நமது காவல்துறை செயல்படுகிறது என்பதுதான் கேள்வி. அதைத் தான் நான் இங்கே சொல்கிறேன்.

அதைப்போல, பல பெண்களை ஏமாற்றித் திருமணம் செய்துள்ளவன்; இந்த மாதிரி திருட்டுத்தனமாக திருமணங்களை ஏராளமாக செய்வதில் மன்னன்: அவன் பெயர் ராகவன்; அவனு டைய வழக்கு இன்னும் முடியவில்லை. அவனைப் பிடித்து உள்ளே போட்டிருக்கிறார்கள். குற்றப்பத்திரிக்கை தாக்கலாகி இரண்டுக்குப் பின்தான் வழக்கு விசாரணைக்கே வந்தது. இதை துரிதப் படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். பல பெண்களை இப்படி திருமணம் செய்து துன்புறுத்தி, கெடுத்து இருக்கிறான்.



1987 மே 5] [திரு. கு. ரமணி]

திருச்சி பி.எச்.ஈ.எல். ஊழியர் பால்ராஜ் தனது மனைவியை நெருப்பிட்டு கொன்ற வழக்கு. செஷன்ஸ் கோர்ட்டிலே அவனை விடுதலை செய்து விட்டார்கள். அந்த வழக்கில் அப்பீல் செய்ய வேண்டுமென்று மாதர் சங்க ஸ்தாபனங்கள் நமது மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களிடம் கேட்டு, நேரடியாகப் பார்த்தும் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது என்பது தெரியவில்லை. புதுக்கோட்டை மாவட்டம் கீரனூரில் காந்தி என்பவர் தன் மனைவி நீலவேணியை காலை வெட்டி வீட்டுக்குள் தள்ளி தீ வைத்த புகாரில் ஆர்.டி.ஓ. விசாரணையில் கொலை என்று சொல்லப்பட்டது. செஷன்ஸ் கோர்ட்டில் தற்கொலை என்று தீர்ப்பு. இப்படிப்பட்ட விஷயங் கள் வந்தால் இதற்கு நீங்கள் உடனடியாக போலீஸ் தரப்பில் அப்பீல் செய்வதற்கு அரசாங்கம் ஒப்புதலை உடனுக்குடன் கொடுக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், இப்படிப்பட்ட நிலைமைகளை எப்படி தடுத்து நிறுத்த முடியும்?

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி கிராமத்தில் கண்ணன் என்பவர் தன் மனைவி பரிமளாவிடம் அடிக்கடி பணம் கேட்டு அடித்து துன்புறுத்துவதும் பரிமளா அடிக்கடி தாய்வீட்டுக்கு வந்து வந்து போவதும், இரண்டு மூன்று முறை பரிமளாவை கொலை செய்வோம் என்று அவரிடம் கூறப்பட்டதும், இந்தச் சம்பவங்களுக்குப் பிறகு 16—2—1987 ஆம் தேதி, பரிமளாவை யும், மூன்று வயது பார்த்திபன் என்ற குழந்தையையும் கொன்று விட்டு, அடித்துக் கொன்றுவிட்டு, நெருப்பு வைத்ததாகக் கூறப் படுகிறது. இந்தக் கண்ணன் என்பவரின் மேல் போலீசார் எடுத்த நடவடிக்கை என்ன? தற்கொலை செய்யத் தூண்டியதாக வழக்குத் தொடர்ந்து இருக்கிறார்கள், அந்தப் பெண்ணும் அந்தக் குழந்தையும் தற்கொலையாம். அப்படியானால் ஒரு இரட்டைக் கொலையை மறைத்ததாகத்தானே அர்த்தம்? இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எப்படிச் சரியாகும்? அதனால்தான் இந்த மாதிரி விஷயங்களிலே நமது காவல்துறை அதனுடைய திறமையை முறையாகப் பயன்படுத்திக் காரியங்களைச் செய்யவில்லை என்பது என்னுடைய விமர்சனம். அதைத்தான் எடுத்துச் சொல்கிறேன். அந்த மாதிரி உழைப்பாளி மக்கள், சாதாரண மக்களுக்கு பிரச்சினை வந்தால் காவல் துறையில் ஒரு முறை இருக்கிறது. பணக்கார வர்க்கம் என்றால் வேறு ஒரு மாதிரியாக வருகிறது. ஏழை வர்க்கம் என்றால் ஒரு மாதிரியாக இருக்கிறது.

[திரு. கு. ரமணி] [1987 மே 5

(முற்பகல் 11-30)

தஞ்சை மாவட்டத்தில் சில உதாரணங்கள். நாகூர் காவல் நிலையத்தில், 'காட்டு விறகால் அடித்து மண்டை உடைக்கப் பட்டது' என்று ரிப்போர்ட் கொடுத்தால், காட்டாமணியால் அடித்ததாக எப்.ஐ.ஆர். போட்டு இருக்கிறார்கள். அந்த கேஸ் என்ன ஆனது? இப்படி எல்லாம் பதிவு செய்கிறார்கள்.

அதேபோல் ரூபாய் 50 ஆயிரம் மதிப்புள்ள மரம் திருட்டு போய்விட்டது என்று போலீஸ் நிலையத்தில் ரிப்போர்ட் கொடுக்கப்படுகிறது. ஆனால் எப்.ஐ.ஆரில் 5 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள மரம் திருட்டு போய்விட்டது என்று அதில் பதிவு செய்திருக்கிறார்கள். அதே மாதிரி சாராய கேஸ் பலது பிடிப் பட்டாலும் பிடிப்பட்ட சாராயத்தில் ஒரு சிறிய பகுதியை மட்டும் பிடிப்பட்டதாக இங்கே வைத்துக் கொண்டு பாக்கி சாராயம் மறைந்து விடுகிறது. அது எந்த கள்ள மார்க்கெட்டில் வியாபாரம் ஆகிறதோ தெரியாது. அப்படி போய்விடுகிறது. இதை எல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் வழக்குகளை பதிவு செய்யும்போது உள்ள இப்படிப்பட்ட குறைகளை எல்லாம் கண்டுபிடித்து—இவைகள் எல்லாம் காவல் நிலையத்தில் செய்ய வேண்டிய மாற்றங்கள் தான்—நடவடிக்கை எடுக்க வேண்டும். இப்படி எல்லாம் நடந்தால் ஜனங்கள் மத்தியில் ஆத்திரமும், கோபமும் அதிகமாகத்தான் வரும். ஆகவே இவைகளை எல்லாம் சாதாரணமான தவறு என்று ஏற்றுக் கொள்ள முடியாது. (மணி அடிக்கப்பட்டது) சீக்கிரம் முடித்து விடுகிறேன்.

சமூக விரோதிகள், ரவுடிகள், நிலச்சுவாந்தார்கள், ஆலை முதலாளிகளின் அடி ஆட்கள், ஏழை மக்களை தாக்கினால் தாக்கப்பட்டவர்கள் புகார் கொடுத்தால் அவர்கள் இரு சாரார் கள் மீதும் வழக்குப் போடப்படுகிற கொடுமை நடக்கிறது. இந்த மாதிரி கொடுமைகள் எல்லாம் நடக்கின்றன. அடிப்பட்டதும் போதாது என்று ரிப்போர்ட் கொடுத்தால் அவர் மீது வழக்கு போடப்படுகிறது. 2 சாரார்களிடமும் ரிப்போர்ட் வாங்கி 2 பேர் மேலும் கேஸ் போடுகிறார்கள். இப்படி சில இடங்களில் நடக் கிறது. 107 செக்ஷன் பேரில் ஜாமீன் கேஸ் போடுகிறார்கள். இந்த ஜாமீன் கேஸ் போடுவதற்கு முன்னதாக 2 சாரார்களும் சண்டைப் போட்டதின் அடிப்படையில் அப்படிப்பட்ட வழக்கில்



1987 மே 5] [திரு. கு. ரமணி]

ஏதாவது முன் ரெப்பரன்ஸ் ஏதுவும் இல்லாமல் எப்படி ஜாமீன் கேஸ் போடுவது. ஒரு முன் ரெப்பரன்ஸ் கூட இல்லாமல் ஜாமீன் கேஸ் போடப்படுகிறது. இதற்கு எல்லாம் ஆதாரம் கேட்டால் நிறைய கொடுக்க முடியும். ஆனால் அவைகள் அனைத்தையும் இங்கே சொல்லிக் கொண்டு இருக்க முடியாது.

கோவை மாவட்டத்தில், என்னுடைய மாவட்டத்தில் நானே சில ரிப்போர்ட்டுகளை கொடுத்த அனுபவம் எனக்கு இருக்கிறது, அவினாசி தாலுக்கா பரம்சிவம்பாளையத்தில் பூவாத்தாள் என்ற பெண்ணை—நேற்றையதினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் கூட இங்கே குறிப்பிட்டார்கள்—2 பேர் பட்டப் பகலில் மாடு மேய்க்கிற இடத்தில் பலாத்காரம் பண்ணி கொலை செய்து 8 பவுன் நகையை கொண்டு போய் விட்டார்கள். ஊர் முழுவதும் சேர்ந்து கூட்டம் கூட்டி, தீர்மானம் போட்டு காவல் நிலையத்திற்கும், அரசுக்கும் அனுப்பி சாட்சிகளும் கொடுக்கப்பட்டது. பஞ்சாயத்து சபையிலும் தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டது. ஆனால் அவினாசியில் இருக்கக்கூடிய காவல்நிலையம் குற்றவாளிகளை கண்டுபிடிக் காமல் அவர்கள் செயலற்ற நிலையில் இருப்பதன் விளைவாக 2 குற்றவாளிகள் கோர்ட்டுக்குப் போய் ஆஜர் ஆனார்கள். அவர்கள் லாக்-அப்பில் பாதுகாப்பாக இருந்தார்கள். பிறகு அந்த போலீஸ் அதிகாரி இந்த 2 பேர்களையும் இந்த குற்றத்தில் சேர்ப்பதற்கான எந்த தடயமும் இல்லை என்று சொல்லி விட்டார்கள். அவர்கள் ரிலீஸ் செய்யப்பட்டார்கள். ரிலீஸ் செய்து வந்த பிறகு ஊரில் தகராறு செய்தனர். இதைப்பற்றி நானே கலெக்டரிடம் ரிப்போர்ட் கொடுத்ததன் மூலம் பிறகு மறுபடியும் விசாரணை நடக்கிறது. இப்படிப்பட்ட நடவடிக்கை கள் சில போலீஸ் நிலையங்களில் நடைபெறுகின்றன. இவைகள் எல்லாம் மிக மிக ஆட்சேபகரமானது. மக்களுக்கு வெறுப்பு ஊட்டக்கூடியது.

அதேமாதிரி கோவை மாநகரம் காந்திபுரத்தில் தனலட்சுமி என்ற ஒரு இளம் பெண்ணை 7 ரவுடிகள் கற்பழித்து, கொலை செய்து விட்டார்கள். அந்த 7 ரவுடிகளுக்கும் கோவை செஷன்ஸ் கோர்ட்டில் தூக்கு தண்டனை கொடுக்கப்பட்டது. அவர்கள் இங்கே வந்து அப்பீல் செய்து 7 பேரும் விடுதலைப் பெற்று ஊருக்குள் வரும்போது பட்டாசும், வாண வேடிக்கையும் விட்டார்கள். இதைப் பார்த்த மக்கள் மத்தியில் பயங்கரமான

[திரு. கு. ரமணி] [1987 மே 5

ஆத்திரம். அந்த மாதிரி கேஸ்களில் உடனே அப்பீல் செய்ய வேண்டும். அங்கே இருக்கிற மக்கள், மாதர் சங்கங்கள் எல்லாம் சேர்ந்து கலெக்டருக்கும் மற்றவர்களுக்கும் அப்பீல் செய்ய மனுகொடுத்து இருக்கிறார்கள். உடனே அப்பீல் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விட்டு இருக்கிறார்கள். செய்தார்களா இல்லையா என்று தெரியாது.

அதேமாதிரி எவரெஸ்ட் இன்ஜினியரிங் கம்பெனியில் ஒரு தொழிலாளர் போராட்டம். அங்கே அந்த மேனெஜ்மென்டி னுடைய கையாள் உள்ளிருப்புப் போராட்டம நடந்த போது சில ரவுடிகளை கூப்பிட்டுக்கொண்டு அந்த தொழிற்சாலைக்குள்ளே போய் அங்கே தகராறு, சண்டை நடந்த நேரத்தில் அந்த ரவுடியான கையாள் அடிபட்டு செத்து போய் விட்டான். அதற்காக 50, 60 தொழிலாளர்கள் மேல் கேஸ் போட்டார்கள. அந்தக் கேஸில் அத்தனை தொழிலாளர்களும் விடுதலை செய்யப பட்டார்கள். அரசின் சார்பில் அந்தக் கேஸ் மீது அப்பீல் செய்தார்கள், இப்படிப்பட்ட வழக்குகளில் ரிலீஸ் ஆனவர்கள் மேல் அரசின் சார்பில் அப்பீல் போடுவது என்பது அனேகமாக வழக்கம் இல்லை. ஆனால் இதற்கு அந்த முதலாளி ரொம்ப வேலை செய்து இருக்கிறார், ரொம்ப பணம் செலவு செய்திருக்கிறார், எனக்குத் தெரியும். இன்றைக்கு அந்த கம்பெனி செயல்படாத வகையில் நசிந்து போய் இருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு கேஸில் இங்கே இருக்கக்கூடிய சென்னை உயர்நீதி மன்றம் விசாரணை செய்து அந்த தொழிலாளிகளில் சில பேருக்கு ஜென்ம தண்டனையும், சில பேருக்கு வெறும் தண்டனையும் கொடுத்து இருக்கிறது. இப்போது அவர்கள் சுப்ரீம் கோர்ட்டுக்குப் போய் கேஸ் நடத்துகிறார்கள், அந்த தொழிலாளர்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் வருகின்றன. ஆகவே நியாயம் எப்படி வழங்கப்படுகிறது, எப்படி சுரண்டப் பட்ட ஏழை எளிய மக்கள் மத்தியில் நடக்கிறது என்பதை கவனத்தில் கொண்டுவருவதற்காகத் தான் இதை எல்லாம் நான் சொல்லுகிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளை மாற்றவேண்டும். போலிசாருக்கும் மக்களுக்கும் இடையில் ஒரு நல்ல தொடர்பு ஏற்படவேண்டும் என்று கூறும்போது இப்படிப்பட்ட போக்குகளை மாற்றாமல் போலீசுக்கும் மக்களுக்கும் இடையில் நல்ல தொடர்பு ஏற்படுத்தும் கடமை இருக்கிறதே அந்தக்



1987 மே 5] [திரு. கு. ரமணி]

கடமையை கூட நிறைவேற்றிட முடியாது. போன வருஷம் கொடுக்கப்பட்ட அறிக்கையிலே ஏழையெளிய மக்களை பாதுகாப்பது எங்களுடைய கொள்கை என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கொள்கைக்கும் இந்த நடைமுறைக்கும் எப்படி சரியாக இருக்கும்? சரியல்ல என்று தான் சொல்லமுடியும்.

போலீசார் செயல்படுவதற்கு அவர்களுடைய மனது சுத்தமாக இருப்பது மட்டுமல்ல, அந்த சுத்தம் என்பதை நடவடிக்கையில் தான் காட்டவேண்டும். வேறு ஒன்றும் அதற்கு அளவு கோல் கிடையாது. அவர்களுக்கு சேவை மனப்பான்மை இருக்க வேண்டும். அவர்களுக்கு சில கோரிக்கை கள் உள்ளன.

அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற ரேஷன் குறைந்த அளவில் தான் கொடுக்கப்படுகிறது. அரிசி, பருப்பு போன்றவை மாதத்திற்கு 24 கிலோ கொடுக்கப்படுவது 12 கிலோவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இது எப்படி சரியாக இருக்கும்? உடனடியாக அதை ரெஸ்டோர் பண்ணவேண்டும். பாமாயில் ஆயில் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை இவர்களுக்கு வழங்கப் படுகிறது. மற்ற கார்டுகளுக்கு இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்கப்படுகிறது. இவர்களுக்கு ஏன் நான்கு மாதங்களுக்கு ஒரு முறை? குறைந்த விலையில் கிடைப்பது அந்த எடிபிள் ஆயில் ஒன்றுதான். அதுவும் ஒழுங்காக சப்ளை செய்யப்படுவதில்லை. அவர்களுக்கு விசேஷமாக ஒரு சலுகை கொடுத்தால் கூட பரவாயில்லை. அவர்களுக்கு இந்த எடிபிள் ஆயில் முறையாக கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். 1980 ஆம் ஆண்டு காவலர்களைப் பொறுத்தவரையில் புதிதாக 10,000 பேர்களுக்கு தேர்வு செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இன்று வரையில் 2,000 பேர்தான் ரெக்ரூட் ஆகியிருக்கிறார்கள். இந்த நிலையில் பாக்கி உள்ளவர்கள் என்ன செய்வது? போலீஸ் காரர்களின் குடும்பங்களில் பல பேர் எங்கே போய் வேலை தேடுவார்கள்? அதை நிறைவேற்றும் கடமை அரசுக்கு இருக்கிறது.

அதேமாதிரி சப்-இன்ஸ்பெக்டருக்கான தேர்வுகள் சில ஆண்டுகளுக்கு முன்பாக நடத்தி, முடிவு அறிவிக்கப்படாமல்

[திரு. கு. ரமணி] [1987 மே 5

அவர்களுக்கு வேலையும் கொடுக்காமல் இருந்து வருவதால் அவர்கள் மத்தியில் ஒரு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதைப் பயன்படுத்தி ஒரு சிலர் போஸ்ட் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி பணம் வசூல் செய்கிறார்கள். பணம் வாங்கி, எங்கே யாருக்குக் கொடுப்பாாகள் என்று புரியவில்லை. இதைக் காலாகாலத்தில் செய்யாததினால் இந்த அக்கிரமங்கள் ஏற்படு கின்றன. உடனடியாக இதனுடைய முடிவுகளை அறிவிக்க வேண்டும். யாரை நீங்கள் தகுதியானவர்களாக நிர்ணயிக் கிறீர்களோ, அதைப் பற்றி கவலைப்படவில்லை. அவர்களுக்கு உடனடியாக வேலை கொடுக்க வேண்டும்.

பட்டதாரிகளான போலீஸ்காரர்கள் பணியில் சேர்ந்திருக் கிறார்கள், வேறு வழியில்லாமல். அவர்களுக்கு புரமோஷனில் கொஞ்சம் முன்னுரிமை கொடுத்து, அவர்களுக்கு சலுகையை கொடுங்கள். அது நியாயமானதும் கூட, கிராஜுவேட் அலவன்ஸ் இருக்கிறது. அதை மற்ற டிபார்ட்மெண்டுகளிலே கொடுக் கிறார்கள். ஆனால் இவர்களுக்குக் கொடுக்கப்படுவது இல்லை. அதையும் இவர்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன். பட்டதாரிகளாக காவலர்கள் பதவியில் சேரும்போது, சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷன் வரும்போது அவர்களுக்கு முத விடம் கொடுக்கப்படுவது ஒரு முக்கியமான அம்சம் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இப்படிப்பட்ட முறையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, குறைகள் தீர்க்கப்பட வேண்டும். குறைந்தபட்ச நிம்மதியோடு அவர்கள் வாழ வழிவகை காண வேண்டும். காவலர்கள் மட்டுமல்ல, நன்றாக வேலை செய்யக் கூடிய அதிகாரிகள் பலர் இருக்கிறார்கள். அதிகாரிகள் எல்லோரும் கெட்டவர்கள் என்று சொல்லவில்லை. அதில் நல்லவர்களும் இருக் கிறார்கள். நேற்று இங்கே ஒரு பெரிய போலீஸ் அதிகாரி பற்றி கூறப்பட்டது. அப்படிக் கூறப்பட்ட அந்த போலீஸ் அதிகாரி அவருடைய பெண்டாட்டி, மக்கள் பெயரால் சீட்டுக் கம்பெனி வைத்து, லட்சக்கணக்கில் பணத்தை மற்றவர்கள் போடும்படி செய்திருக்கிறார் அவர்கள் பெயரில் கூட கேஸ் இருக்கிறது. எப்படி அப்படிப்பட்டவர்களை நீங்கள் இந்த கட்டுக் கோப்பிற்குள் வைத்துக் கொண்டு நடவடிக்கை எடுக்காமல் பொறுமையாக இருக்கிறீர்கள் என்று தெரியவில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம்.



1987 மே 5] [திரு. கு. ரமணி]

அடுத்து காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும். அவர்கள் குறைந்தபட்ச நிம்மதியோடு வாழ வழி செய்யப்பட வேண்டுமெனில், அவர்களின் எண்ணிக்கை அதிகப் படுத்தப்பட வேண்டும். வேலைப் பளு குறைய வேண்டும். பொது மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படும் வகையில் காவலர்களின் நடத்தை இருக்க வேண்டும். இதே விஷயம் போன அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வருஷ அறிக்கையிலும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் உண்மை நிலைமை என்ன? ஒரு போலீஸ் ஸ்டேஷனில் சாதாரண பிரஜை தைரியமாக போய் உட்கார முடியுமா என்றால் முடியாது. ஒரு பெஞ்ச்சோ, நாற்காலியோ இல்லை. சேர் வேண்டாம் வெறும் பெஞ்ச் போட்டால்கூட நல்லது. அங்கே அந்தஸ்து பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ஆளுங்கட்சியைச் சார்ந்தவர், ஆளுங்கட்சியைச் சாராதவர் என்று பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவர்கள் பொதுமக்களுடைய சேவகர்களாக இருந்தாலும், காவல் நிலையத்தில் வருகின்ற மக்களிடையே நேர்மையான முறையில் நல்ல முறையில்,

(முற்பகல் 11-40)

பழகுவது குறைவாக இருக்கிறது. அதற்கான நடவடிக்கையை நீங்கள் எடுக்க வேண்டும். பொது மக்களிடையில் நம்பிக்கை ஏற்படும் முறையில் காவலர்கள் நடத்தை இருக்க வேண்டும். போலீஸ்காரர்கள் சங்கம் உருவாக்கப்பட்டது. இதை ஒவ்வொரு வருடமும் நான் சொல்லிக்கொண்டு வருகின்றேன். அந்த சங்கத்தை ஏன் நீங்கள் அங்கீகரிக்க மறுக்கிறீர்கள்? அவர் களுடைய சொந்த கோரிக்கைகளுக்காக நாங்கள், எம்.எல்.ஏக்கள் இங்கே வேண்டுமா? அவர்கள் சங்கத்திலேயிருந்து பெரிய அதிகாரிகளிடம் பேசுவார்களே; ஆனால் அதிகாரியாக இருக்கிறவர்கள்தான் சங்கத்திற்கு தலைவராக இருக்க வேண்டுமென்று சொன்னால் அது சுத்த தப்பு. காவலர்கள் சங்கத்திலே அவர்கள் இருக்கட்டும். அவர்கள் சங்கம் வைப்பது நாங்கள் வைத்து இருக்கின்ற மாதிரி தொழிற் சங்கம் அல்ல. அவர்களுக்கு சர்வீஸ் காண்டக்ட் ரூல்ஸ் எல்லாம் இருக்கின்றன. அவர்கள் அதன்படி சங்கம் வைக்கிறார்கள். அவர்கள் நியாயமாக மதிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு தைரியம் கொடுக்க வேண்டும். ஒரு இன்ஸ்பெக்டர் முன்னாலே ஒரு காவலர் உட்கார்ந்து தன்னுடைய கோரிக்கையைப் பற்றி ஏன் பேசக்

[திரு. கு. ரமணி] [1987 மே 5

கூடாது. அப்படி பேசுவதற்கு உதவி செய்வதற்கு பதிலாக பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பல பேர்கள் பழிவாங்கப்பட்டு சிலருக்கு வேலையும், தொலைந்து போன நிலை அந்தக் கொடுமை இன்றைக்கும் அவர்களுடைய எண்ணத்திலே இருக்கிறது. நாங்கள் அரசாட்சி அமைத்த மேற்கு வங்காளத்தில் சங்கம் வைத்து நடத்த அவர்களுக்கு ஆரம்பத்திலேயே உரிமைக் கொடுக்கப்பட்டது. எந்த ஆபத்தும் வரவில்லை. நல்ல முறையில் சங்கம் நடக்கிறது. பிரச்சினைகள் வரவில்லை. அவர்கள் நல்ல ஒத்துழைப்போடு காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் போலீஸ்காரர்களைக் கண்டால் அவர்கள் தங்களைக் காப்பாற்றுவதற்கு வந்தவர்கள் என்ற உற்சாகம் ஏற்பட வேண்டும். அதற்குப் பதிலாக, ஐயோ போலீஸ் வந்து விட்டதே என்று சொல்லக்கூடிய அந்த மனோபாவம் மக்கள் மத்தியிலிருந்து போவதற்கு இந்த இலாக்காதான் முக்கியமாக பொறுப்பு எடுத்துச் செயல்பட வேண்டும். அரசினுடைய கொள்கைகள்தான் இதற்கு அஸ்திவாரம்—பேக்கிரவுண்ட்— என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

இப்போது இந்த தர்மபுரி மாவட்டத்தில் இரண்டு அரிஜன சேரிகளையே தீ வைத்து கொளுத்தி, டஜன் கணக்கான ஹரிஜன பெண்களை மானபங்கப் படுத்தி, அங்கே அவர்களை கற்பழித்து இப்படி பல அக்கிரமங்கள் நடந்து இருக்கின்றன. இதன் பேரில் சிவியர் ஆக்ஷன் எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். எந்த மேல்ஜாதிக்காரனாக இருந்தாலும் அதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதை தடுக்க வேண்டும். இப்போது குரூப் சேப்பிங் நடக்க ஆரம்பித்திருக்கிறது. இண்டிவிஜுவல் சேப்பிங்கிலே அவர்கள் தப்பித்துப் போய்விடுகிறார்கள். கேஸ் போட்டு பணத்தை செலவு பண்ணி தப்பித்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படுவதை பூரணமாக தடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

காவல் நிலையங்களை நாடி வருகின்றவர்களுக்கு மரியாதைக் கொடுத்து இளகிய மனதுடன் அவர்கள் கூறுவதை நன்கு உணர்ந்து செயல்படுவது காவல் துறையினரின் கடமையாகும். நான் சொல்லவில்லை, இந்த கொள்கை குறிப்பு புத்தகத்தில் கூறப்பட்டுள்ள கருத்து. அனைவர் மீதும் அன்பு காட்டி



1987 மே 5] [திரு. கு. ரமணி]

மக்களின் ஒத்துழைப்பையும், நம்பிக்கையையும் பெறுவதற்கு என்ற முறையில் அரசின் கருவியாக பணிபுரிந்து காவல்துறை மக்களின் நண்பனாக விளங்குகிறது என்று இந்தக் காவல்துறை 1985-86 ஆவது அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இப்படி அரசினுடைய கருத்து இருக்கிறது. ஆனால் காவல்துறை அப்படிச் செயல்படாமல் அந்த மக்களை தாக்குவதற்கும், அநீதி இழைப்பதற்கும், தவறான கேஸ் போடுவதற்கும், கற்பழித்துக் கொலை செய்வதை எந்தவிதத்திலே கண்டுபிடிக்கலாம் என்ற துணிச்சலோடு அதைக் கண்டுபிடித்து குற்றவாளியை கூண்டிலே ஏற்றுவதற்கான நடவடிக்கை எடுக்காத நிலையில் இருக்கிறது. அப்படி நீங்கள் சொல்வதற்கும், அந்த நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது. அதுதான் வித்தியாசம். அதே மாதிரி கோவை மாநகரத்திலே கொள்ளையும், ஜேப்படியும், ரௌடித்தன மான தாக்குதலும் கடுமையாக வளர்ந்திருக்கின்றன. நேற்றையதினம் திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார்கள். ஏற்கனவே ஒரு ரௌடிக்கூட்டம் அங்கே வந்து பல சங்கடங்களுக்கு அந்த மக்களை ஆளாக்கியிருக்கிறார்கள். ஒரு நாள் தவறாது பத்திரிகையிலே நீங்கள் அந்த செய்திகளை எல்லாம் பார்த்திருப்பீர்கள். கோவை மாநகரத்தில் ஜேப்படி நடந்தது, கொள்ளை நடந்தது என்று. இதை கட்டாயம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கக்கூடிய சக்தி காவல்துறைக்கு உண்டா? உண்டு. சந்தேகமே கிடையாது. எங்களுக்கு இருக்கின்ற சந்தேகம் என்னவென்று கேட்டால், காவல்துறையின் பேரில் மக்களுக்கு இருக்கின்ற செல்வாக்கைவிட இந்த ரௌடிக் கூட்டத்திற்கும், கொள்ளையடிப்பவர்களுக்கும், சமூக விரோதிகளுக்கும் ஏதோவிதத்தில் செல்வாக்கு அதிகம் ஏற்படுகிறதா என்பதுதான் அந்த நிலையை அனுமதிக்கக்கூடாது. ட்ராஸ்டிக் ஆக்ஷன் அகென்ஸ்ட் தெம் என்ற வகையில் அங்கே நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் கொலையும், கொள்ளையும் மேலும் தொடரும். இப்படிப்பட்ட மாநகரங்களிலே இப்படி நடந்தால் கிராமங்களின் நிலை என்ன? கிராமங்களிலும் இது பரவும். இந்த நிலை இருப்பதை உணர்ந்து நமது காவல்துறை சரியாக செயல்பட வேண்டும். பல நல்ல காரியங்களைச் செய்ததை நாம் வரவேற்கிறோம். ஆனால் அதே சமயத்தில் துப்பாக்கி பிரயோகங்களுக்கு கொண்டுபோய்

[திரு. கு. ரமணி] [1987 மே 5

விடாதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். அரசினுடையக் கொள்கைதான் இவை எல்லாவற்றிற்கும் அடிப்படை. என்று நான் இறுதியாகச் சொல்லி அரசு இதை பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நாம் ஏதோ நல்ல நிலையில் போய்க் கொண்டிருக்கிறோம் என்று மட்டும் நீங்கள் நினைத்தால் நீங்கள் சொப்பன லோகத்தில்தான் இருக்கிறீர்கள் என்பதை நான் கூறிக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள் கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: அவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறையினுடைய 1986—87 ஆம் ஆண்டு ஆய்வுரையின் மீதும், தமிழ்நாடு தீயணைப்புத் துறை யினுடைய 1987—88 ஆம் ஆண்டு கொள்கைக் குறிப்பின் மீதும் எதிர்க்கட்சிகளின் தரப்பிலே நடைபெற்ற விவாதத்தை முடித்து வைத்து, நான் சார்ந்துள்ள இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் நிறைவுரையாக என்னுடைய கருத்துக்களை நான் இங்கே முன் வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, நம்முடைய நாட்டினை எதிரிகளிடமிருந்து, எதிரிகளின் தொல்லைகளிலிருந்து, அவர்களுடைய தாக்குதல் களிடமிருந்து பாதுகாக்கின்ற பொறுப்பு ராணுவத்திற்கு இருக்கிறது. அதைப்போலவே, உள்நாட்டிலே நம்மைப் பாதுகாக் கின்ற பொறுப்பு, சமுதாயத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பு இன்றைக்குக் காவல்துறைக்கு இருந்து கொண்டிருக்கிறது. ஆனால் இங்கே மன்றத்திலே விவாதம் நடக்கின்றபோது, எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தாலும்கூட, எதிர்க்கட்சிகளினுடைய கடுமையான கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் ஆளாவது காவல்துறை என்பதை நாம் மறந்து விடமுடியாது.

சமுதாயத்திலே இன்றைக்கு இரண்டு துறைகளை மிக நல்ல துறைகளாக, மக்களாலே மதிக்கப்படுகின்ற துறைகளாக, 'நோபிள் புரொபஷன்' என்று ஆங்கிலத்திலே சொல்வார்களே, அதற்கு இணையான துறைகளாகச் சொல்லப்படுவது, ஒன்று மருத்துவத் தொழில். இன்னொன்று காவல்துறைத் தொழில். இந்த இரண்டு துறைகளாலும் நன்மை பெறுகிறவர்கள் அந்தத் துறையிலே இருக்கிறவர்களை வாழ்நாள் எல்லாம் போற்றிப் பாதுகாக்கின்ற நல்ல சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது.



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

காவல்துறையைப் பற்றி, காவலர்களைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில், தேசப் பிதா காந்தியடிகள், காவலர்கள் எப்படி இருக்க வேண்டும் என்று ஒரு முறை சொன்னது என்னுடைய நினைவிற்கு வருகிறது.

"The Police of my conception will however be wholly different from the present day force.

They will be servants, not masters of the people. People will instinctively render them every help and through mutual co-operation they will easily deal with ever decreasing disturbances. The Police work will be confined primarily to robbers and decoits . . ."

என்று சொல்கிறார்கள்.

இதனைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், காவலர்கள் மக்களுடைய முதலாளிகள் அல்லர்; அவர்கள் மக்களுடையப் பணியாளர்களாகவே இருப்பார்கள். அப்போது மக்கள் அவர் களுக்கு தாங்களாகவே எல்லா உதவிகளையும் செய்ய முன் வருவார்கள். காவலர்களுக்கும், மக்களுக்கும் இடையே உள்ள பரஸ்பர ஒத்தாசையினாலே, காவலர்கள் நாட்டிலே குறைந்து வரும் கலவரங்களையும், தொல்லைகளையும் சமாளிப்பார்கள். திருடர்களையும், கொள்ளைக்காரர்களையும் நோக்கியே காவல் துறையினுடைய பணி முனைப்பாக்கப்படும் என்று தேசப் பிதா காந்தியடிகள் ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அன்னை இந்திரா காந்தி அவர்கள் ஒரு முறை காவலர்களைப் பற்றிச் சொல்கிறபோது,

"They—the Police—are the guardians of the poor people and their success depends on their ability to win the confidence, respect and co-operation of the public. Theirs' is not a force, but a service.".

இதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமேயானால், காவலர்கள் ஏழைகளினுடைய பாதுகாவலர்கள். எனவே, பொதுமக்களுடைய நம்பிக்கையையும், மரியாதையையும், ஒத்துழைப்பையும் பெறு வதிலிருந்து அவர்களுடைய பணியினுடைய வெற்றி அமையும். அவர்கள் படையே அல்லர்; சேவையினுடைய சின்னம் என்று அன்னை இந்திரா காந்தி அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 5

அதைப்போலவே, இன்னொரு இடத்தில் ஆராய்ச்சி நூல் ஒன்றில் படித்தது என்னுடைய நினைவுக்கு வருகிறது :

"The important ingredients of the Training should be to inculcate in Police men respect for human dignity. In short, the Police men will have to be taught to deal with people instead of only with criminals."

என்று சொன்ன கருத்தை இந்த நேரத்தில் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற காவல்துறையைப் பொறுத்த அளவிலே இன்னும்கூட நேர்மையாக, நாணயமாகப் பணியாற்றுகிற அதிகாரிகள் நம்முடைய காவல்துறையிலே இருக்கிறார்கள். அவர்களை நான் முதலாவதாகப் பாராட்ட விழைகிறேன்.

தமிழகத்தைப் பொறுத்த அளவில் அண்மையில் நம்முடைய நெஞ்சங்களை எல்லாம் உலுக்குகின்ற பல்வேறு நிகழ்ச்சிகள், வெடிகுண்டுச் சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. மதுரையிலே தபால் நிலையத்திலே நிகழ்ந்த வெடிகுண்டு நிகழ்ச்சி; நாம் வாழ்நாள் எல்லாம் மறக்க முடியாத, மருதையாற்றில், அரியலூருக்கு அருகில் பாலத்திலே நடந்த வெடிகுண்டு நிகழ்ச்சி; கரூருக்குப் போகிற ரயிலிலே வைத்த வெடிகுண்டு நிகழ்ச்சி; திருச்சிக்கு அருகே தேசியமயமாக்கப்பட்ட ஒரு வங்கியிலே வைக்கப்பட்ட வெடிகுண்டுகள். இத்தகைய நிகழ்ச்சிகளை எல்லாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிற நேரத்தில் நம்முடைய காவல்துறை மிக, மிகச் சுறுசுறுப்பாகப் பணியாற்றி, குற்றவாளிகளைக் கண்டுபிடித்ததை நிச்சயமாக என்னாலே பாராட்டாமல் இருக்க முடியாது.

சமுதாயப் பணியாக, அண்மையிலே சிதம்பரத்திலே நடைபெற்ற கோயில் கும்பாபிஷேக நிகழ்ச்சியிலும், ஸ்ரீரங்கத்திலே நடைபெற்ற கோயில் சம்ப்ரோக்ஷண நிகழ்ச்சியிலும், ஏன், அண்மையில் சேலத்திற்கு வந்த பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்களுடைய அந்தக் கூட்ட நிகழ்ச்சிகளிலேயும் நம்முடைய காவல்துறையினுடைய பணி ஒப்புயர்வற்று விளங்கியதை நான் பாராட்ட விரும்புகிறேன்.

ஏன், நான் இன்னமும் சொல்லிப் பெருமைப்படுவேன். சில மாதங்களுக்கு முன்னாலே, சென்னையிலே, சூளைமேட்டிலே தீவிரவாதிகளாலே ஒருவர் கொல்லப்பட்ட நேரத்திலே, ஐ.ஜி.



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

அந்தஸ்திலே இருக்கிற ஒரு உயர் அதிகாரி தன்னுடைய உயிரையும் திரணமாக மதித்து எந்தவிதமான ஆயுதமும் இல்லாமல் அவர்கள் முன்னாலே போய், அறிவித்து, அவர்களுடைய ஆயுதங்களைக் கீழே போடச் சொன்ன அந்த வீர சாகசத்தை நான் எண்ணிப் பார்க்கிறேன்.

(முற்பகல் 11-50)

நம்முடைய காவல் துறையின் வீர சாகசம் முற்றாகப் பட்டுப் போய்விடவில்லை. அது இன்னும் துளிர்க்க வேண்டும். துளிர்ப்பது இந்த நேரத்தில் எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்மைப் பொறுத்தவரையில் வளருகிற நிலையில் உள்ள நாடு நம்முடைய நாடு. இந்த நாட்டிலே சகிப்புத்தன்மையும், பொறுத்துக் கொள்ளும் தன்மையும் அதிகமாக இருந்தால் நம் நாட்டில் இருக்கிற பல்வேறு குற்றங்களும், குழப்பங்களும் குறைவதற்கான வாய்ப்பு அதிகமாக இருக்கும். சகிப்புத் தன்மையைப் பொறுத்த அளவில்—பொறுத்துக் கொள்கிற தன்மையைப் பொறுத்த அளவில்—எதிர் வரிசையில் இருக்கிற கட்சிகளை விட ஆளுகிற கட்சிக்கு அவை அதிகமாக இருக்க வேண்டும் என்று நான் கூற விரும்புகிறேன்.

பல நூற்றாண்டுகளுக்கு முன்னால் புறநானூற்றில் சொல்லப் பட்ட வரி ஒன்று என் நினைவுக்கு வருகிறது "நன்நடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்று சொல்லப்பட்டது. ஆக, காவல் துறை நல்லமுறையில் பணியாற்ற வேண்டுமானால், இன்றைக்கு ஆட்சியில் இருப்பவர்கள் நல்ல மாதிரியாக நடந்து கொள்வார்களானால்—அரசு தலையீடு அதிகமாக இல்லாமல் இருக்குமானால்—காவல் துறை சுயேச்சையாக, சுதந்திரமான முறையில் இயங்குமானால், நிச்சயமாக நல்ல பயன்கள் நாட்டுக்குக் கிடைக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

குற்றவாளிகளைத் தடுப்பது, காவல் துறையின்—அதிலும் காக்கிச் சட்டை அணிந்தவர்களின் பணி என்பது மட்டுமல்ல. நாட்டில் சமுதாயத்தில் இருக்கிற பல குற்றங்களுக்குக் காரணமாக இருக்கிற சமூக பொருளாதார நிலைமைகளை எண்ணிப்

பார்த்து அவைகளைக் களைவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுத்தாலே அதன் காரணமாகப் பலக் குற்றங்கள் இன்றைக்கு நிகழாமல் போகும் என்று நான் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் ஒரு ஆராய்ச்சி நூலைப் பார்த்தேன். 1981-82 ஆம் ஆண்டில் சமூகக் குற்றங்கள் குறைந்ததாக அந்தப் புள்ளிவிவரம் காண்பித்தது. அதற்குக் காரணம் என்ன என்று சொல்லப்பட்டது என்றால் அந்த ஆண்டுகளில்தான் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்றும் அதன் காரணமாகச் சமுதாயத்தின் குற்றங்கள் குறைந்து விட்டன என்றும் அந்த ஆராய்ச்சி நூலில் சொல்லப்பட்டிருந்தது. அதைப்போலவே தமிழகத்தில் சில ஆண்டுகளுக்கு முன்னால் மதுவிலக்குக் கடைகள் மீண்டும் திறக்கப்பட்ட நேரத்தில் பல்வேறு இனங்களில் குற்றங்கள் பெருகி இருந்தன என்றும் அந்தப் புள்ளிவிவரத்தில் சொல்லியிருப்பதை நாம் ஒப்பு நோக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

காவல் துறை என்பது இங்கே 1861 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டது. நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் காவல்துறையைப் பொறுத்தவரையில் தவறு நடக்காமல் இருக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். தவறுகள் நடந்தால் அதற்கு ஆய்வு நடத்தி அதைக் கண்டுபிடிக்க வேண்டும். டிடெக்‌ஷன் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். இந்த இரண்டு நிலைமைகளையும் நாம் ஒப்பு நோக்கவேண்டும். இதில் பிரிவென்ஷன் ஆப் கிரைம் என்கிற நிலையில் குற்றங்கள் நடப்பதைத் தடுப்பது—அதாவது வருமுன் காப்பதுதான் மிகவும் முக்கியமானதாகும். இதற்கு முக்கியமாக புட் பெட்ரோல் என்று சொல்லுவார்கள். அதாவது நம்முடைய காவலர்கள் தெருக்களில் நடந்து செல்லுவதன் மூலமாகவே அதிகமாக குற்றங்கள் குறையும். அப்படி அவர்கள் செல்ல ஆரம்பித்தால் சமுதாயத்தில் பல குற்றங்கள் நிகழாமல் இருக்கும். காவலர்களைக் காக்கி உடையில் மக்கள் பார்த்தாலேகூட பல குற்றங்கள் நிகழ வாய்ப்பு இல்லாமல் போகும். இன்றைக்கு இந்த முறை முற்றாக இல்லை என்று சொல்லவில்லை. இருந்து கொண்டிருக்கிறது. இருப்பதாகச் சொல்லப்படுகிறது—கைவிடப்பட்டுப் போடப்பட்டிருந்து அதைத் தீவிரப்படுத்த வேண்டும். புட் பெட்ரோல் முறையை சரியான





முறையில் அமுல்படுத்தினால் பல குற்றங்கள் குறைய வாய்ப்பு இருக்கிறது என்பதால் அரசு அதைக் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக குற்றங்களைக் கண்டுபிடித்து விசாரணை செய்கிற நிலைமையைப் பார்க்கிறபோது அதிலும் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும். காவல் துறையினரிடம் ஒருவர் சென்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லுகிற நேரத்தில் அதை எந்தவிதமான தாமதமும் இல்லாமல் பதிவு செய்து கொண்டு நடவடிக்கை எடுப்பதில் காவல் துறையில் உள்ளவர்கள் அக்கறை காட்டினால் பல குற்றங்களை உடனுக்குடன் களைய வாய்ப்பு ஏற்படும். எனவே அந்த முறையில் காவல் துறை முனைப்பாகப் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சில வழக்குகளில் குற்றவாளிகள் என்று கைது செய்யப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடராமல் அவர்கள் பல மாதங்கள் வரை காவலில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் சென்னையை உலுக்கிய திரைப்பட நடிகையான இராணி பத்மினி கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு குற்றவாளிகளில் ஒருவர் கைது செய்யப்பட்டும் அவர் மீது வழக்குத் தொடரப்படாமல் பல மாதங்களாகக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக எனக்குத் தகவல் வந்திருக்கிறது. காரணம் இன்னொரு குற்றவாளி அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாத காரணத்தால் அவர்மீதும் வழக்குப் போடப்படாமல் இருக்கிறது என்று நான் கேள்விப்படுகிறேன். எனவே இதில் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் அந்த வழக்கை இரண்டாகப் பிரித்து ஏற்கெனவே பிடிக்கப்பட்டுள்ள குற்றவாளி மீது வழக்குத் தொடர்ந்து அவருக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாமல் பல மாதங்கள் விசாரணை இல்லாமலேயே வைத்திருந்தால் பின்னாலே உச்ச நீதிமன்றத்திற்குப் போகிற வாய்ப்பு கூட இல்லாமல் போய் விடும். எனவே அந்தக் குற்றவாளி தண்டனை பெறுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால் இந்த வழக்கைப் பிரித்து நடவடிக்கை எடுப்பதில் காவல் துறை முனைப்புக் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 5

கொள்கைக் குறிப்பைப் பொறுத்த வரையில் பல புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். நான் 1980 ஆம் ஆண்டிலிருந்து புள்ளிவிவரங்களைப் பார்த்தேன். ஆதாயத்திற்குக் கொலை, கொள்ளை, வழிப்பறி, வீடு உடைப்பு, பெரிய திருட்டு, சிறிய திருட்டு என்கிற பல்வேறு இனங்களில் புள்ளிவிவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நான் அரசைக் கேட்க விரும்புகிறேன். அந்தரங்க சுத்தியோடு பதில் சொல்ல வேண்டும். இவை உண்மையான புள்ளிவிவரங்கள்தானா?

பல்லாண்டுகளின் புள்ளிவிவரத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது கூட்டிக் குறைத்துப் போட்டிருப்பதாகத் தெரிகிறது. உண்மையான புள்ளிவிவரங்கள் இல்லை என்பது என்னுடைய அழுத்தமான கருத்து. பல இடங்களில் வழக்குகள் பதிவு செய்யப்படாமல் இருக்கின்ற காரணத்தால் ஏதோ சட்டமன்றத்திற்கு விவரங்களை வைக்க வேண்டும் என்ற முறையில் தயாரிக்கப்பட்டதாக இருக்கிறது என்பதை என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

காவல் துறையைப் பொறுத்த வரையில் பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கியதாக இருக்கிறது, பல்வேறு பணிகளைச் செய்யக் கூடியதாக இருக்கிறது. மதுவிலக்கு, போக்குவரத்து, தீண்டாமை ஒழிப்பு, குற்றவியல் தடுப்பு என்று பல்வேறு பிரிவுகளுக்கு இந்தத் துறை பொறுப்பேற்றுக் கொண்டு இருப்பதால், எல்லா பொறுப்புகளும் ஒன்று சேர்ந்திருப்பதால் விரைவிலே எதையும் செய்ய முடியவில்லை என்று நான் கருதுகிறேன். குறிப்பாக போக்குவரத்தைப் பொறுத்தவரையில் காவல் துறையிலிருந்து விடுவிக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கென்று பெண்கள், மாணவர்கள், டாக்டர்கள், என்ஜினியர்கள், வழக்கறிஞர்கள் இன்னும் வணிகத் துறையிலே இருக்கிறவர்கள், கட்டட வல்லுநர்கள், கலைஞர்கள், உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் ஆகியவர்கள் அடங்கிய ஒரு தனி வாரியம் அமைத்து அதன் கீழ் போக்குவரத்துப் பணிகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பல்வேறு இடங்களில் பல்வேறு வழக்குகள்— hit and run என்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, பிடிபட்ட கேஸ்களில் கூட வழக்குகள் சரியாக தொடரப்படவில்லை. தண்டனை வழங்கப்படவில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே,



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

போக்குவரத்துப் பணிக்கென்று தனியாக ஒரு ஐ.ஜி. நியமிக்கப் பட்டால் இன்னும் இப்பணியை நன்றாகச் செய்ய வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

காவல் துறையிலிருந்து Intelligence Wing குற்றப் புலனாய்வுப் பிரிவு தனியாக பிரிக்கப்பட வேண்டும். மேல் நாடுகளில் குற்றப் புலனாய்வுப் பிரிவு வேறு துறையில் இருந்து வருகிறது. காவல் துறையிலிருந்து முழுவதுமாகப் பிரிக்கப்பட்டால் பல வழக்குகள் எளிதாக கண்டுபிடிக்க முடியும். இந்தப் பணியை காவல் துறையிலிருந்து விடுவித்து தனியாக ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே இந்தப் பகுதியிலிருந்து பேசுகின்ற நேரத்தில் எதிர்க் கட்சி சார்பில் ஒரு கருத்து சொல்லப்பட்டது. டைரக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ் பதவியில் இருக்கிற ஒருவர் கட்டாய விடுமுறை வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து மனு கொடுத்திருப்பதாக செய்திகளை பத்திரிகையில் பார்த்திருக்கிறோம். சில பல நாட்களுக்கு முன்பு அவருடைய துணைவியார் தன்னுடைய கணவரின் உயிருக்கு பாதுகாப்பு இல்லை. பாதுகாப்பு வேண்டும் என்று கேட்டு பாதுகாப்பு கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. காவல் துறையில் உச்ச நிலையில் உள்ள அதிகாரிக்கே இந்த நிலை என்றால் சாதாரண குப்பனுக்கும், சுப்பனுக்கும், எப்படி பாதுகாப்பு கொடுத்து காப்பாற்ற முடியும் என்று என்னாலே புரிந்துகொள்ள முடியவில்லை. காவல் துறை உயர் அதிகாரிகளே இப்படி நடத்தப்படுகிறார்கள் என்றால் இந்த அரசின் மீது எப்படி மக்களுக்கு நம்பிக்கை வர முடியும் என்ற வினாவை என்னாலே எழுப்பாமல் இருக்க முடியவில்லை. ஆகவே அரசின் அணுகுமுறை புதிய கண்ணோட்டத்துடன் இருக்க வேண்டும். இந்தத் துறை மற்றவர்களை பாதுகாக்க வேண்டும் என்ற நிலையிலே இருக்க வேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறை தலைமை அலுவலகத்தில் எனக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. சில நாட்களுக்கு முன்பு நான் அந்த அலுவலகத்திற்குச் சென்றபோது அந்த அலுவலகத்தின் வளாகத்திற்கு வெளியே பீச் ரோட்டில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போக வேண்டும் என்று சொன்னார்கள். எங்களைப் போன்ற மக்கள் பிரதிநிதிகள் கூட உள்ளே காரில் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்பதற்கு என்ன காரணம்? எங்களை நம்ப

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 5

வில்லையா? தங்களை பாதுகாத்துக்கொள்ள இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறார்களா? இது நியாயம்தானா என்பதை என்னால் கேட்காமல் இருக்க முடியவில்லை. நாங்கள் உள்ளே வந்தால் உங்களுக்கு பாதுகாப்பு குறைவாக இருக்கும் என்றால், மக்களை எப்படி யார் பாதுகாக்க முடியும்? நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்த முறை இது. உடனடியாக இந்த முறை மாற்றப்பட வேண்டும். நாங்கள் உள்ளே செல்ல அனுமதி வழங்கப்பட வேண்டும்.

அதிகாரிகளைப் பொறுத்தவரையில் உச்ச நிலையில் இருக்கிற அதிகாரிகள் நன்கு பழகுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி கூட குறிப்பிட்டார்கள். சின்ன சின்ன காவல் நிலையங்களில் உள்ளவர்களின் மனோபாவம் இதிலிருந்து மாறுபடுகிறது. வெள்ளைக்காரன் காலத்திலே இருந்த உணர்வு இன்றைக்கும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் சாதாரணமானவர்கள் காவல் நிலையங்களுக்குப் போனால் எப்படி நடத்தப்படுவார்கள்? தங்கள் குறைகளைச் சொல்ல வாய்ப்பு இருக்குமா என்ற வினாவை என்னால் எழுப்பாமல் இருக்க முடியவில்லை. ஆகவே அதிகாரிகள் மத்தியில் எந்த நிலைமை இருந்தாலும், காவல் நிலையங்களுக்கு வருகிறவர்களை வரவேற்று, மரியாதை கொடுத்து, அவர்கள் சொல்லும் குற்றம் குறைகளைப் பதிவு செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஒரு வழக்கு இன்றைக்கு காவல் நிலையத்திற்கு வருகிறது என்றால் அந்த வழக்குக்குரிய ஃபர்ஸ்ட் இன்ஃபர்மேஷன் ரிப்போர்ட்டில் இருந்து விசாரணை வரை எவ்வளவு காலம் ஆகிறது என்று பார்த்தால் 'வழக்குகளின் பயணம்' என்று தலைப்பு கொடுக்கலாம் என்ற அந்த அளவிற்கு காலம் போய்க் கொண்டேயிருக்கிறது. சம்பவம் நடக்கிற காலத்திலேயே காவல் நிலையங்களுக்கு புகார் கொடுக்கிறபோது உடனடியாக பதிவு செய்யப்படுகிறதா என்றால், இல்லை. அவர்களை ஏதேதோ கவனிக்க வேண்டியிருக்கிறது. ஃஎப்.ஐ.ஆர். ரிப்போர்ட்டை புகார் கொடுத்த தேதியிலேயே கொடுக்க வேண்டும். ஆனால் நான் கேள்விப்படுகிறேன், பல இடங்களில் எஃப்.ஐ.ஆர். போட படிவங்கள் இல்லை. ஆண்டுக்காண்டு படிவங்களே கொடுக்கப்படுவதில்லை. அங்கே பேப்பர் இருப்பது



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

(முற்பகல் 12-00)

இல்லை. புகார் கொடுப்பவர் பேப்பர் வாங்கிக் கொடுக்க
வேண்டும், கார்பன் பேப்பர் வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற
நிலை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் இருந்தால் எத்தனை
குற்றங்களை ரிஜிஸ்டர் செய்ய முடியும் என்று கேட்க விரும்பு
கிறேன். அதுமட்டுமல்ல, எஃப்.ஐ.ஆர் எழுதுகிறார்கள் என்று
வைத்துக்கொள்வோம். பின்னால் நீதி மன்றத்திற்குப் போகிறது.
நீதி மன்றத்திற்குப் போனால் நீதிபதிகள் இருப்பதில்லை. பல
இடங்களில் நீதிபதிகளின் பதவிகள் நிரப்பப்படாமல் இருக்
கின்றன. போஸ்டிங்ஸ் போட்டு, 2, 3 மாதங்கள் கழித்து நீதிபதி
வந்து, வழக்கு விசாரணைக்கு வரும்போது, நீதிபதி மாற்றப்
படாமல் இருக்க வேண்டும் அல்லது வழக்கைப் பதிவு செய்த
போலீஸ் அதிகாரி அங்கே இருக்க வேண்டும் அல்லது காயம் பற்றி
சர்டிபிகேட் கொடுத்தாரே அந்த டாக்டர் பதவியில் இருக்க
வேண்டும். ஒரு நேர்வில் டாக்டர் வெளி நாட்டுக்கே போய்
விட்டார். இவர்கள் எல்லாம் இருந்தால், ஏ.பி.பி. இருக்க
வேண்டும். ஏ.பி.பி. இடத்திற்கு ஆள் போட வேண்டும். அவர்
ஊரில் இருக்க வேண்டும். இதற்குப் பிறகு வாய்தா போட்டு
விடுகிறார்கள். 2, 3 மாதம் ஆகிவிடுகிறது. இவ்வளவும் இருந்
தாலும்கூட, குற்றவாளி தலைமறைவாகிவிடுகிறான். குற்ற
வாளிக்கு ஜாமீன் கொடுத்த நபரும் இருப்பதில்லை. இப்படி
வழக்குகளின் பயணம் இருந்தால், எத்தனை வழக்குகள்மீது நட
வடிக்கை எடுக்க முடியும்? இத்தகைய நிலைமை மாறி, சாட்சி
களை விசாரிக்க 2 ஆண்டுக்காலம், 3 ஆண்டுக்காலம் ஆகிற
நிலைமை மாறி, குற்றம் செய்தவருக்கு உடனடியாக தீர்ப்பு
வழங்கக்கூடிய அளவுக்கு நம்முடைய முறைகள் மாற்றப்பட
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்ற போது வரிசையாகப் பல விஷயங்களைச் சொன்னார்கள். அதற்கு அரசாங்கம் என்ன செய்ய வேண்டுமென்று அவர் என்ன யோசனை சொல்ல இருக்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன். அடுத்து, யாரையும் மாற்றக்கூடாது, அப்படியே இருக்க வேண்டுமென்று சொல்லுகிறாரா? அப்படி மாற்றுவது தவறு என்கிறாரா? இதில் அவருடைய விளக்கம் என்ன?

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாற்றவே கூடாது என்று இந்தப் பகுதியிலிருந்து விவரம் தெரிந்தவர்கள் சொல்லுவார்களா? பதவியில் அதிகாரிகள் இருக்க வேண்டும். ஏழைகளுக்கு நீதி அளிக்க வேண்டுமென்றால், பதவியில் அதிகாரி இருக்க வேண்டும். பதவி காலியாக இருக்கக்கூடாது. அப்போதுதான் நீதி கிடைக்கும். இதில் முனைப்பாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த நேரத்தில் ஒரு யோசனையைச் சொல்ல விரும்புகிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 6 மாதத்திற்கு அல்லது ஓராண்டுக்கு ஒரு முறை ஒரு வருடத்திற்கு அதிகமாக எத்தனை வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. என்ன காரணம்—நீதிபதி இல்லையா, டாக்டர் இல்லையா, இன்ஸ்பெக்டர் இல்லையா, ஏ.பி.பி. இல்லையா—என்று அறிக்கை கொடுக்க வேண்டும். அரசாங்கம், வழங்கப்படுகிற அறிக்கையை கிடப்பிலே போடாமல், அந்த அறிக்கையை, மாண்புமிகு நிதி அமைச்சர் இருக்கிறார், ஹோம் செக்ரட்டரி இருக்கிறார், இவர்களை எல்லாம் வைத்து குழு அமைத்து, அந்தக் குழு பரிசீலனை செய்து, அதன் மூலமாக துரிதமாக வழக்குகளைப் பைசல் செய்ய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குற்றங்கள் தடுக்கப்பட வேண்டுமென்றால், பல்வேறு துறைகள் மத்தியில், ஒத்துழைப்பு வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சென்னை போன்ற ஊர்களில் ஆட்டோ ரிக்ஷாக்கள், டாக்சிகள் தொல்லை அதிகமாக இருக்கிறது. They are fleecing like anything. இன்றைக்கு ஓரிடத்திற்குப் போக வேண்டுமென்றால் தகராறு இல்லாமல், சண்டை இல்லாமல் போக முடியாது. இதைப் பற்றி ஒவ்வொரு முறையும் விவாதிக்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்களும் கூட கலந்துகொண்டார்கள் என்று கேள்விப்பட்டேன். அதன் விளைவு என்ன? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? தினசரி சொந்தரவு இல்லாமல் யாராவது டாக்சியில், ஆட்டோரிக்ஷாவில் வந்தால், அதைப் பாராட்டலாம். அந்த அளவுக்கு டாக்சி, ஆட்டோ ரிக்ஷாக்கள் தொல்லை இருக்கிறது. வெளி நாடுகளிலிருந்து நம்முடைய





விமான நிலையத்திற்கு வருகிறார்கள். அவர்களை என்ன பாடுபடுத்துகிறார்கள் தெரியுமா? அப்படிச் செய்தால், அவர்கள் நம்மீது என்ன நம்பிக்கை கொள்வார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். 2½ ஆண்டுக் காலம் எமர்ஜன்சி அமுலில் இருந்தபோது ஆட்டோக்களும், டாக்சிகளும் வரிசையாக வந்தன. ஒரு முணுமுணுப்பு வரவில்லையே, ஒரு சலசலப்பு வரவில்லையே. அதை ஏன் இப்போது செய்யக் கூடாது? அதே அதிகாரிகள்தான் இருக்கிறார்கள். இதை எல்லாம் எண்ணிப் பார்த்து, சாதாரண நடுத்தர மக்களுக்கு தொல்லையில்லாமல் ஒரு முறையைச் செய்ய வேண்டும்.

அடுத்து, சாதிக் கலவரங்கள். தமிழகத்திலே சாதிக் கலவரங்கள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன. தர்மபுரி மாவட்டத்தில் ஒரு மோதல்; சென்னை புளியந்தோப்பில் ஒரு கலவரம்; ராஜபாளையத்தில் ஒரு கலவரம்; திருச்சி மாவட்டத்தில் கோட்டாத்துறிச்சி மாரியம்மன் திருவிழாவில் கலவரம்—இப்படி பல கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. நான் கூற விரும்புவது, இதுபோன்ற கலவரம் நடைபெறும் என்று காவல் துறைக்குத் தெரியாதா? புலன் ஆய்வு துறை சொல்லவில்லையா? ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? ஒன்றிரண்டு நேர்வுகளிலே முன்னாலே தகவல் கொடுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காத காரணத்தினாலேயே இத்தனை உயிர்கள் இழக்கப்பட்டிருக்கின்றன என்று கேள்விப்படுகிறேன். இதுமாதிரி இனியும் நடைபெறாமல் இருக்க பார்த்துக்கொள்ள வேண்டும். ராஜபாளையத்தில் நடந்த நிகழ்ச்சியைப் பற்றி எங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமன் பேச விரும்பினார்கள். அவர்கள் இன்றைக்கு நேரம் இல்லாத காரணத்தினாலே பேச முடியவில்லை. ராஜபாளையம் பக்கத்திலே மட்டும் ஏன் இதுமாதிரியான கலவரங்கள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன. கடந்த 4, 5 ஆண்டுகளில் 50 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. ராஜபாளையத்திலே, பக்கத்திலேயுள்ள சேத்தூர், மம்சாபுரம் என்று இப்படி பல இடங்களிலே கலவரங்கள் நடைபெற்றிருக்கின்றன. காவல் துறை என்ன செய்துகொண்டிருக்கின்றது? ராஜபாளையத்திலே நடைபெற்ற நிகழ்ச்சியிலே 2 பேர்களை கைது செய்ய சென்னையிலே இருந்து உயர் அதிகாரிகள் போகவேண்டியதாக இருக்கின்றது என்று சொன்னால், அங்கே இருக்கின்ற அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள்? அவர்கள்

கடமையை சரியாக ஆற்றுவதில்லை. அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கிறார்கள்? நான் கேள்விப்படுகிறேன். ஆட்டுக்கு கத்தரிக்காயை கண்டம் துண்டமாக வெட்டிப்போடுவார்களே, அதுபோல எதும் அறியாத அப்பாவிகளை கண்ட துண்டமாக வெட்டி, கிணற்றிலே வீசியிருக்கின்றார்கள் என்று எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. அன்பழகன் அவர்கள் சொல்கின்றார்கள். காவல்துறைக்கு சவாலாக, அந்த நிகழ்ச்சிகள் அங்கே நடக்கின்றன என்று சொன்னால், அதற்கு அரசு என்ன செய்துகொண்டிருக்கின்றது. காவல்துறை முடுக்கிவிடப்பட வேண்டும். எதிர்காலத்திலே அந்த மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறாத வண்ணம், நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பல்வேறு நேரங்களில் செய்திகளை தனியாக எடுத்துக் கொள்ளாத காரணத்தினால், இந்தமாதிரியான நிகழ்ச்சிகள் நடக்கின்றன என்று எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். உதாரணமாக ஒன்றிரண்டு நிகழ்ச்சிகளை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா மாவட்டம், திண்டுக்கல் தாலுக்கா, அய்யம் பாளையத்திலே இருந்துகூட எனக்கு ஒரு செய்தி வந்திருக்கிறது. எங்கள் ஊரிலே எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவர் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 5 ஏக்கர் நிலத்தை அங்கே இருக்கின்ற பெரியண்ணன் என்ற நாகராஜ நாயுடு என்பவர் இடமிருந்து பெற்றிருக்கின்றார்கள். ஆனால், 16 ஆண்டுகளாக எந்தவிதமான சிரமமும் இல்லை. இன்றுவரை அந்த நிலத்தை அனுபவித்து வருகிறார். 21—1—1986-லே அவர் மீது சிவில் வழக்கு திண்டுக்கல் சப்-கோர்ட்டிலே போடப்பட்டிருக்கிறது. போடப் பட்ட உடனே அவருக்குச் சொந்தமான தோட்டத்திலே வந்து, அந்த எதிரிகள் திரு. கோவிந்தசாமி செட்டியார் அவர் வந்து தொல்லை கொடுக்கிறார்கள். உடனே அவர் பாட்டிவீரன்பட்டி காவல் நிலையத்திலே புகார் சொல்கிறார். புகார் கொடுத்தபிறகும் போலீஸ் நடவடிக்கை எடுக்கவில்லை. பின்பு 19—2—1986-ம் தேதியன்று தோப்பிலே நுழைந்து காயப்படுத்துகின்றார்கள். போலீஸ் ஸ்டேஷனில் மீண்டும் புகார் கொடுக்கிறார். நடவடிக்கை எடுக்கவில்லை. போலீஸ் எங்கள் மீது நடவடிக்கை எடுக்காது என்று சொல்கிறார்கள். எதிரிகள் தைரியம் அடைந்து 3—3—1986 அன்று மீண்டும் அவர்களை தாக்குகிறார்கள் போலீசில்





அவர்கள் புகார் சொல்கிறார். எந்த நடவடிக்கையும் இல்லை. இதுமாதிரி 3, 4 நேர்வுகளில் நடக்கிறது. மீண்டும் அவர்கள் 27—3—1986-ல் திண்டுக்கல் சப்-கோர்ட்டிலே எதிரிகளைத் தடுப்பதற்காக கண்டிஷனல் இன்ஜெக்ஷன் ஆர்டர் வாங்கு கிறார்கள். அந்த ஆர்டரைக் கொடுத்தும்கூட நடவடிக்கை எடுக்கவில்லை என்று அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டிருக் கின்றார்கள்.

இப்படி பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றி காவல் நிலையத் திற்குக் கொடுத்தும் உரிய நடவடிக்கைகளை எடுக்காத காரணத்தினாலேதான் இந்த மாதிரி சாதிக் கலவரங்கள் நடந்து, பின்னர் கொலையிலே முடிகின்ற அளவுக்கு நிகழ்ச்சிகள் வருகின்றன என்பதை இந்த நேரத்திலே அருள்கூர்ந்து எண்ணிப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாயத்தில் இன்றைக்கு சிலை திருட்டு, கள்ள நோட்டு அச்சடிப்பு என்பது போன்ற குற்றங்களை கண்டுபிடிக்க தனியாக முனைப்பாக காவல்துறை இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எஸ்.பி. அந்தஸ்திலே ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக நாட்டிலே இருக்கின்ற வேலையில்லாத் திண்டாட்டத்தை குறைப்பதற்கு காவல்துறையில் போலீஸ் கார்ட் என்ற புதிய அமைப்பை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது காவல் துறையிலே சேர்வதற்கு எட்டாவது வரை படிக்க வேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் இப்போது போலீஸ் கார்ட் வேலைக்கு 5-வது படித்தாலே போதும். ஏனென்று சொன்னால் பி.ஏ. படித்தவர்கள் கூட காவல்துறைக்கு வருகின்றார்கள். சும்மா துப்பாக்கி வைத்துக்கொண்டு டல் டியூட்டிக்கு அவர்களைப் பயன்படுத்துகின்றார்கள். அதுமாதிரி வேலைக்கு கொஞ்சம் படித்தவர்களை, சமுதாயத்திலே அப்படி இருக்கின்றவர்களை அந்தப் பணிகளிலே பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எத்தனையோ தேசியமயம் ஆக்கப்பட்ட வங்கிகள் தோன்றிக் கொண்டிருக்கின்றன. அங்கேயெல்லாம் இந்த காவல்துறை கார்டு களை நியமிக்கலாம். தொழிற்சாலை அமைப்புகள் இருக்கின்றன.

அந்தத் தொழிற்சாலைகளில் போலீஸ் கார்ட்கள் டியூட்டி கொடுத்து ஊதியம் பெறலாம். கல்யாணம் போன்ற இடங்களில் போலீஸ் கார்ட்களாக அவர்களை அனுப்பினால் அதனால் அவர்களுக்கு ஊதியம் வர வாய்ப்பிருக்கிறது. நல்ல முறையில் காவல் துறை பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக காவல்துறையைப் பொறுத்தவரையில் நவீனப்படுத்த வேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்தி வருகிறோம். கொள்கைக் குறிப்பிலே நவீனப்படுத்துவதற்கான ஒன்றிரண்டு விவரங்கள் இருக்கின்றன. நவீனப்படுத்துவது பற்றி சொல்லும்போது, அவர்களுக்கு டெலிபோன் கொடுப்பது, ஜீப் கொடுப்பது, ஒயர்லெஸ் கொடுப்பது மட்டும் போதுமா? இன்னும் எத்தனை நவீன முறைகள் இன்றைக்கு நாகரீகம் வளர வளர வந்திருக்கின்றன. இந்த விஞ்ஞான யுகத்திலே எத்தனையோ விதமான குற்றங்களை கண்டுபிடிக்கின்ற அளவுக்கு இருக்கிறோம். இந்த நேரத்தில் காவல்துறை நவீனப்படுத்த வேண்டும் என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12-10)

1975 ஆம் ஆண்டு அங்கே கம்ப்யூட்டர் வாங்கப்பட்டது. 12 ஆண்டுகளுக்கு பிறகு இன்றைக்கு சமுதாயத்திலே எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, நவீன கம்ப்யூட்டர் ஒன்றை வாங்கினால் இன்றுள்ள நிலைமையில் எத்தனையோ வழக்குகள் பற்றிய புள்ளிவிவரங்களை நாம் சேகரிக்க வாய்ப்பாக இருக்கும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஒருவர் போன தலைமுறையில் வாங்கிய கம்ப்யூட்டர் என்று குறிப்பிடுகிறார். ஆகவே அந்த கம்ப்யூட்டருக்குப் பதிலாக ஒரு நவீன கம்ப்யூட்டரை அரசு வாங்க வேண்டும். அதற்கு மத்திய அரசு இன்றைக்கு முழு உதவி கொடுப்பதாக அறிகிறேன். அதுகுறித்து நீங்கள் மத்திய அரசுக்கு எழுதுங்கள், நாங்களும் சொல்கிறோம், அந்த வகையிலாவது காவல் துறையை நவீனப்படுத்துவதற்காக ஒரு நல்ல கம்ப்யூட்டரை வாங்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சென்ற தடவை இதே மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது நான் இந்த அரசுக்கு பல்வேறு ஆலோசனைகளைச் சொன்னேன். அப்படி நான் சொல்லியதற்குப் பிறகு அரசு





ரப்பிலே இருந்து இன்னின்ன உறுப்பினர்கள் இன்னின்ன யோசனைகளைச் சொன்னார்கள், அவற்றில் இவை இவைகளை நிறைவேற்றிருக்கிறோம், இவை இவைகளை பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம் இவை இவைகளை பரிசீலிக்க முடியாது என்கிற விவரக் குறிப்பை கொடுத்திருந்தார்கள் என்றால் நாங்கள் சொல்வதையும் அரசு பரிசீலிக்கிறது. நடவடிக்கை எடுக்கிறது என்று சொல்லுகின்ற அளவுக்கு எங்களுக்கு ஆத்ம திருப்தி ஏற்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இது குறித்து இந்த ஆண்டிலாவது அரசு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து, காவலர்களுக்கு வீடு கொடுப்பதைப் பொறுத்தவரை இதனை ஓர் அடிப்படையாகக் கொண்டு நூற்றுக்கு நூறு காவலர்களுக்கும் வீடு கொடுக்க வேண்டும். அதுபோல ஆர்ம்ட் ரிசர்வ் போலீசில் இருப்பவர்கள் அனைவருக்கும் வீடு கொடுக்க வேண்டும். சென்னையைப் பொறுத்தவரை அவர்கள் பொருளாதார நிலைக்கு குப்பத்தில் தான் வாடகைக்கு வீடு எடுத்து குடியிருக்க வேண்டிய நிலை இருக்கிறது. ஏதாவது இனக்கலவரம் போன்ற பிரச்சினைகள் வந்தால் அவர்கள் தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற முற்படுவார்களா அல்லது இனக் கலவரத்தை அடக்குவார்களா என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆகவேதான் காவலர்களுக்கு—நூற்றுக்கு நூறு சதவிகிதம் பேருக்கும் வீடு கொடுக்க வேண்டும். அதுபோல ஆயுத படையினரை எடுத்துக் கொண்டால் 50 சதவிகிதத்தினருக்கு தான் வீடு கொடுத்திருப்பதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். திடீரென்று எங்கேயாவது கலவரம் வந்தால் அவர்கள் உடனடியாக அந்த இடத்திற்குப் போக கடமைப்பட்டவர்கள். ஆர்ம்ட் ரிசர்வ் போலீசைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிறைய பேர்களுக்கு வீடு கொடுத்ததாகச் சொல்வார்கள். ஆகவே, வீடு கொடுக்கின்ற பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே அவர்கள் எல்லோருக்கும் வீடு கொடுக்காமலிருந்தாலும் கூட இனிமேலாவது எல்லோருக்கும் கட்டாயம் வீடு கொடுப்பதற்கான முயற்சியில் இந்த அரசு ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு 988 காவல் நிலையங்கள் இருக்கின்றன. அதுபோல 101 உட் கோட்டங்கள் அல்லது சப்-டிவிசன்கள் இருப்பதாக அறிகிறேன். ஒவ்வொரு உட் கோட்டத்துக்கும் ஒ

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 5

அல்லது 10 காவல் நிலையங்கள் இருக்க வேண்டும். ஆனால் பல இடங்களில் 14, 15 காவல் நிலையங்கள் இருப்பதாக அறிகிறேன். உதாரணத்திற்கு செயின்ட் தாமஸ் மவுண்டில் இருக்கிற உட்கோட்டம், திருநெல்வேலியில் இருக்கிற உட்கோட்டம் இவைகளில் எல்லாம் அதிகமான காவல் நிலையங்கள் இருக்கின்றன. இன்றைக்கு நாம் ஒரு புறம் பெரிய மாவட்டங்களை எல்லாம் பிரிக்க வேண்டுமென்று சொல்கிறோம். அப்படி பிரிப்பது நிர்வாகத்திற்கு எளிதாக இருக்கும் என்பது மாத்திரமல்ல, பொது மக்கள் அதிகாரிகளை சிரமமில்லாமல் சந்தித்து குறைகளைச் சொல்லவும் வாய்ப்பு இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் காவல் துறையில் சப்-டிவிசன்களில் அதிகமாக இருக்கின்ற காவல் நிலையங்களைப் பிரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டாமா? ஆகவே அதிகமாக இருக்கின்ற காவல் நிலையங்களைப் பிரித்து அதன் மூலம் இந்தத் துறை பொது மக்களுக்கு மேலும் நல்ல காரியங்களைச் செய்ய முடுக்கி விடப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கள்ளச் சாராயம் பற்றி இங்கே நிறைய சொல்லியிருக்கிறோம். இன்றையதினம் அரசு மதுவிலக்கை அமுல்படுத்தியிருக்கிறது. எங்களுக்கு அதிலே ஒரு வருத்தம் இருக்கிறது. இன்றைக்கு அரசுக்கு வந்துகொண்டிருந்த வருமானம் போய் விட்டது. அந்த வருமானம் சமுதாய விரோதிகள் கையில் போய் சேர்கிறது. இந்த சமுதாய விரோதிகள் இன்றையதினம் கிராமப் புறங்களில் பல இடங்களில் நாணயமாக இருப்பவர்களுக்கு எல்லாம், நல்லவர்களாக இருப்பவர்களுக்கு எல்லாம் சவால் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். முறைகேடாக வந்த வருமானத்தை வைத்துக் கொண்டு இவர்கள் புதிது புதிதாக சொத்துக்களை வாங்குகிறார்கள். பல்வேறு தொழில்களில் புகுந்து கொள்கிறார்கள். நவீனமயமான தொழில்களை செய்து சமூகத்தில் அந்தஸ்தை பெறுகிறார்கள். இதன்மூலம் அவர்கள் ஏழை மக்களுக்கு எந்த அளவில் பாதிப்பை உண்டாக்குகிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். பெருந்தலைவர் அமரர் காமராஜர் அவர்கள், உயர்திரு அமரர் கக்கன் போன்றவர்கள் எல்லாம் ஏழை குடும்பத்திலிருந்து வந்தவர்களில்லையா? இதை எல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும். கள்ளச்சாராய விவகாரங்களில் ஈடுபடுகின்றவர்கள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறான வழியில்



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

பணம் சம்பாதிக்கும் இவர்கள் குறுகிய காலத்தில் சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்க்கு வருவதை தடுத்து நிறுத்த வேண்டும். அந்த வகையில் காவல் துறையிலுள்ள என்போர்ஸ்மென்ட் பிரிவை இன்னும் வலுப்படுத்த வேண்டும். இன்றைக்கு கள்ள மது அல்லது கள்ளச்சாராயம் தயாரிக்கின்ற இடங்கள் 100 அல்லது 150 இருக்கின்றன. இந்தத் தொழில் இன்றையதினம் பெரிய அளவிலும் சிறிய அளவிலும் ஆங்காங்கே பிரபலமாக நடந்து கொண்டுதான் இருக்கிறது. இதைத் தடுக்க முடியாதா? நான் ஒட்டுமொத்தமாக இதற்கு காவல் துறையினரை குற்றம் சொல்ல மாட்டேன். காரணம் காவல் துறையிலும் நேர்மையான, நாணயமான அதிகாரிகளாக இருக்கின்றவர்களுக்கு நான் தலை வணங்குகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் ஒன்றை இங்கே சூசகமாகக் குறிப்பிட்டார்கள். அந்த வகையிலே இந்தத் தொழில் இன்றையதினம் தமிழகத்திலே நடந்துகொண்டு தான் இருக்கிறது. இதை உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும், தவிர்க்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் சரி அல்லது பொது மக்களில் யாராக இருந்தாலும் சரி குறிப்பிட்டு புகார் கொடுத்தால் உடனடியாக இது குறித்து நடவடிக்கை எடுத்து இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் தலைமையில், உள்துறை செயலாளர் உட்பட முக்கியமான நபர்களைக் கொண்டு குழு ஒன்றை அமைக்க வேண்டும். அந்த வகையில் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முயற்சிக்க வேண்டும். முன்பெல்லாம் கள்ளச் சாராயம் என்று சொன்னால் ஒரு பானை யிலே காய்ச்சுவார்கள். ஆனால் இப்பொழுது தொழில் எந்த அளவிற்குப் போயிருக்கிறது தெரியுமா? பெரிய பெரிய விஞ்ஞானத் துறைகளைப் போலவே, மின்சாரத்தைப் பயன்படுத்தி, அந்த அளவிற்கு நவீனமாகச் செய்யக்கூடிய அளவிற்கு இந்தத் தொழில் வந்து கொண்டு இருக்கிறது. ஆகையினாலே, இதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்

அந்தத் துறையிலே இருப்பவர்களை உற்சாகப்படுத்துவதற்காக முயற்சிகளைப்பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் போலீஸ் மெடல் கொடுக்கிறார்கள். நான் எண்ணிப் பார்க்கிறேன், 1937-லே முதன் முதலாக இராஜாஜி அவர்கள் தமிழகத்தின் பிரதமராக இருந்த

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே 5

காலத்திலே, இந்தியாவிலே முதன்முறையாகத் தமிழகத்திலே தான் மதுவிலக்கு கொண்டு வரப்பட்டது. இன்றைக்கு ஐம்பது ஆண்டுகள் ஆகின்றன. இடையிலே கொஞ்சகாலம் மதுக் கடைகள் திறந்துவிடப்பட்டிருந்தாலும்கூட, இது பொன்விழா ஆண்டு இந்தப் பொன் விழா ஆண்டினை நினைவுபடுத்துகின்ற வகையிலே இந்த என்ஃபோர்ஸ்மென்ட் பிரிவிலே இருக்கின்றவர்களுக்கு, நன்கு வேலை செய்பவர்களுக்கு ஏன் ஒரு மெடல் கொடுக்கப்படக் கூடாது? கொடுக்கலாம் அல்லவா? மூதறிஞர் இராஜாஜி அவர்களின் பெயரிலேயே கொடுக்கலாம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதைக் கேட்டுக்கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகிறேன். நிச்சயமாக இதைப்பற்றி அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி அந்தத் துறையிலே பணிபுரிகின்றவர்கள் ஊக்குவிக்கப்படவேண்டும்.

நான் இன்னும்கூடக் கேள்விப்படுகிறேன். என்ஃபோர்ஸ்மெண்ட் பிரிவிலே மொத்தம் மூவாயிரம் காவலர்கள்தான் இருக்கிறார்கள் என்று. இது எப்படி இருக்கும்? கொஞ்சம்கூட சரியாக இருக்க முடியாதே? எப்படி இந்தத் தீய தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற சமுதாய விரோதிகளைத் தடுத்து நிறுத்த முடியும்? மக்களைக் காக்க முடியும்? இந்தக் கள்ள மது அருந்துவதால் எத்தனையோ பேர் உயிரிழக்கிறார்களே. ஆகவே காவலர்களுடைய நல்ல கடமையை எண்ணிப் பார்த்து இந்த காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும்.

அவர்களுடைய வாகனங்களைப் பொறுத்தவரையில் ஒரு மாவட்டத்திற்கு ஐந்துதான் இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். அவை நவீன வாகனங்களாக, ஓடுகின்ற வாகனங்களாக, புதிய வாகனங்களாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தேவைப்பட்டால் தனியாக ஒரு ஐ.ஜி. அந்தஸ்திலே ஒருவர் இந்தப் பொறுப்பிலே இருந்து அவைகளைக் கட்டுப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றையும் நான் கேள்விப்படுகிறேன். இதுவரை இல்லாத அளவிற்கு, 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலேதான் கள்ளச்சாராயத்தைக் கடத்துகின்ற லாரிகள் அதிகமாகிவிட்டனவாம். ஐம்பதிற்கும் அதிகமான லாரிகள் பிடிபட்டன என்று



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நான் கேள்விப்படுகிறேன். ஆனால் என்ன நடைபெறுகிறது தெரியுமா? பிடித்து அங்கே கொண்டு வருவோமேயானால் மறுநாளே லாரியை எடுத்துக் கொண்டு போய்விடுகிறார்கள். இப்படிச் சட்டமிருந்தால் குற்றத்தை எப்படித் தடுக்க முடியும்? அப்படி வந்து அது நிரூபிக்கப்படுமேயானால் அந்த வழக்கு தீருகின்ற வரை இந்த வாகனங்களை ரோட்டிலே ஓட்டாத அளவிற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். அந்த அளவிற்குச் சட்டம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, மதுவினுடைய கொடுமைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே, நான்கூடக் கேள்விப்படுகிறேன். இங்கிலாந்திலே ஒவ்வொரு காவல் நிலையத்திலேயும் படம் இருக்கும்; உங்களுடைய மகன் மூன்று வயதிலே பாருங்கள் எவ்வளவு அழகாகச் சிரித்துக் கொண்டிருக்கிறான், 20, 25 வயதிலே பார்த்தோமானால் தலையெல்லாம் எப்படி இருக்கிறது அவன் மது குடிக்கின்ற காரணத்தால் அல்லது போதை மருந்துக்கு அடிமையாகி இருக்கின்ற காரணத்தாலே என்று சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய அளவில் படம் போட்டு காட்டுகிறார்களாம் இங்கிலாந்து நாட்டிலே. அதைப் கொடுமையை எடுத்துச் சொல்லுகின்ற நேரத்திலே குடி குடியைக் கெடுக்கும் என்று எழுதி விட்டால் மட்டும் போதாது. பல்வேறு துறைகளிலே பல்வேறு விளம்பரங்களின் மூலமாக அரசாங்கம் இதைத் தடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கள்ளச் சாராய வழக்குகளைத் துரிதமாக நடத்து வதற்கு—நான் கேள்விப்படுகிறேன், தமிழ் நாட்டிலே 21 கோர்ட்டுகள்தான் இருக்கின்றனவாம்; ஆனால் பத்தாயிரம் வழக்குகள், எட்டாயிரம் பேர் பிடிபடுகிறார்கள். 21 கோர்ட்டுகளிலே போட்டு என்றைக்கு நடவடிக்கை எடுத்து, பின்னாலே அவர்கள் அந்தக் குற்றத்தைச் செய்யாமல் இருப்பது? ஆகவே, இந்த வழக்குகளை விரைவாக விசாரிப்பதற்கு நீதி மன்றங்களை அதிகமாகப் போட வேண்டும். அதைத் தவிர பரிசோதனைச் சாலைகள் தனியாக இருக்கவேண்டும். காவலர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி ஒரு கட்டுக்குள்ளே கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, சமூதாயத்திலே நிர்வாகத்தைச் சீரழிப்பது இந்தக் கலப்படம். இன்றைக்குக் கலப்படம் எதிலேதான் இருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. மருந்திலேயிருந்து, உணவுப் பொருள்களில் இருந்து அத்தனையும் கலப்படம்தான். அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்த பொருளாக இருக்கின்ற காரணத்தினாலே கலப்படத்தைத் தவிர்ப்பதற்கு, ஒழிப்பதற்கு ஒரு தனி போலீஸ் படை வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் ஆலோசனை சொல்ல விரும்புகிறேன்.

காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரு டீம் ஸ்பிரிட் வேண்டும். குழு மனப்பான்மை வேண்டும். அது முற்றாக இல்லை என்று சொல்ல மாட்டேன். இன்னும் கொஞ்சம் அதிகம் இருக்க வேண்டுமென்று சொல்கிறேன். இந்தக் குழு மனப்பான்மை இன்றைக்கு உயர் அதிகாரிகள் மத்தியிலே இருக்குமேயானால் பல நல்ல தீர்வுகளைக் காண முடியும். நான் கூடக் கேள்விப்படுகிறேன். தூத்துக்குடியிலே ஜின்னசர் பீர் என்று ஒரு பானம் இருக்கிறது. அதைத் தடை செய்வதற்காக அங்கே இருக்கின்ற உயர் அதிகாரிகள் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுத்துக்கொண்டதன் காரணத்தினாலே இன்றைக்குத் தூத்துக்குடி நகர்ப் பகுதி மக்களே வாழ்த்துகின்ற அளவிற்கு அவர்கள் செயலாற்றியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்த மனப்பான்மையோடு, அந்தக் குழு உணர்வோடு மேல் மட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகளும், எல்லா மட்டங்களிலேயும் இருக்கின்ற அதிகாரிகளும் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்குக் காவல் துறையைப்பற்றிப் பல செய்திகள் வருகின்றன. இரண்டு நாட்களுக்கு முன்பாக, இண்டியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. பல்வேறு நிகழ்ச்சிகளைப் பற்றிச் செய்திகள் வருகின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், தீவிரவாதிகளை இன்னார் பிடித்தார் என்று படம் போட்டு வருகிறது; கள்ளச் சாராயத்தைப் பிடித்தவர் என்று படம் போட்டு கள்ளச் சாராயத்தைப் பிடித்தவர் இவர் என்று வருகிறது. இப்படிப் பத்திரிகையிலே படமும், பெயரும் வருகின்ற காரணத்தினால், தனிப்பட்ட அந்த அதிகாரிக்கு இதெல்லாம் சாதகமாக இருக்கலாம்; பிரயோசனமாக இருக்கலாம்.





ஆனால் அந்தச் சமூக விரோதிகளாலே அந்தத் தனிப்பட்ட அதிகாரிகள் குறி வைக்கப்படுகிறார்கள். இந்தக் குற்றத்தைக் கண்டுபிடித்தவர் இவர்தான் என்று அந்தக் குடும்பமும் குறி வைக்கப்படுகிறது. இது அந்த அதிகாரிகளுக்கு நல்லதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, தனித்தனியாகச் செய்தி கொடுக்கின்ற முறையை மாற்றி மாவட்ட அளவிலே செய்தி கொடுக்கின்ற ஒரு அமைப்பு இங்கே வேண்டும். எஸ்.பி. அலுவலகத்திலே இருக்க வேண்டும். சென்னையை எடுத்துக் கொண்டால், காவல் துறை தலைவர் அலுவலகத்திலே ஒரு அலுவலகம் இருக்க வேண்டும். அது உயர்ந்த மூத்த போலீஸ் அதிகாரிகள் பொறுப்பில் இருக்க வேண்டும். அங்கேயிருந்து தான் செய்திகள் போக வேண்டும். அந்தச் செய்திகளைத்தான் பத்திரிகைகாரர்கள் பிரசுரிக்க வேண்டும் என்ற வரைமுறை வருமேயானால் சமுதாயத்திற்கு நலம் பயப்பதாக இருக்கும்; 'போலீஸ் இன்பர்மேஷன் சென்டர்' என்பதைப்பற்றி சொல்கிறேன். அதை அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

அதைப்போல இந்த அரசில் காவல் துறைக்கு ஆள் எடுப்பதாகச் சொல்லி திடீர் திடீர் என்று எடுக்கிறார்கள். 1977-ல் எடுக்கப்பட்டது. அறிவிப்பு கொடுத்து 10 ஆண்டுக்குப் பின்னால் ஆள் எடுக்கப்படுகிறது. அதைப்போன்று 1978-ல் 10,000 காவலர்கள் எடுக்கப்படுவதாக அறிவிப்பு கொடுத்தார்கள்; ஆனால் எடுக்கப்படவில்லை. அதைப்போன்று சப் இன்ஸ்பெக்டர்கள் எடுக்கப்பட வேண்டுமென்று சொல்லி நேர்முகத் தேர்வு நடந்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் அறிவிக்கப்படவில்லை. காவல் துறைக்கு ஆள் எடுக்கின்ற நடைமுறைகள் எல்லாம் நல்லமுறையிலே, வேகத்தோடு நடைபெற்றால்தான் குற்றங்களைக் கண்டுபிடிக்க முடியும். ஒவ்வொன்றிலும் தாமதம் ஏற்பட்டு, ஆமையும் முயலும் போல் இல்லாமல், சரியான நேரத்திலே தேவையான காரியங்களைச் செய்ய வேண்டும். பத்து ஆண்டுகளுக்கான ஒரு 'பர்ஸ்பெக்டிவ் பிளான்' காவல் துறையில் தயாரிக்க வேண்டும். இந்த பத்து ஆண்டுகளில் காவல் துறையில் என்னென்ன செய்யப்போகிறோம். அதனுடைய கண்ணோட்டம் என்ன என்பன போன்ற ஆய்வுகளை, விவரங்களை, புள்ளிவிவரங்களைக் கொடுத்தால் நன்றாக இருக்கும். அடுத்த ஆண்டு அடுத்த

ஆண்டு, அதற்கு அடுத்தாண்டு என்ன செய்யப் போகிறோம் என்று சொல்லுகின்ற அளவுக்கு பர்ஸ்பெக்டிவ் பிளான் தயாரிக்கப்பட்டு, நல்லமுறையில் காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, எனக்கு முன்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். அவர்கள் சொன்னதைப்போல காவலர் பணிக்கு ஆள் எடுப்பதை ஆண்டுக்காண்டு செய்ய வேண்டும். காவல் துறைக்குத் தேவையான உதவி சப் இன்ஸ்பெக்டர்களை ஆண்டுக்காண்டு எடுக்க வேண்டும். அதைப்போலவே காவலர்களுக்கு உடுப்பு கொடுப்பதை ஆண்டுக்காண்டு செய்ய வேண்டும். அதைப் போன்றே அலுவலங்களுக்கு தலவாடங்கள் ஆண்டுக்காண்டு வழங்க வேண்டும். காவலர்களுக்குத் தேவையான அச்சுப் பதிவேடு, ஸ்டேஷனரி ஆண்டுக்காண்டு கொடுக்கப்பட வேண்டும். காவல்துறை அலுவலகக் கட்டடமாக இருந்தாலும், குடியிருப்பாக இருந்தாலும் ஆண்டுக்காண்டு பராமரிக்கப்பட வேண்டும். காவல் துறைக்குச் சொந்தமான வாகனங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். அரசாங்க ஒர்க்ஷாப் இருந்தாலும் தனியாக ஒரு ஒர்க்ஷாப் வைத்து, நல்ல முறையில் பராமரிக்கின்ற பணியை ஆண்டுக்காண்டு செய்யவேண்டும். காவல் துறை அலுவலகங்களில் மேசை, நாற்காலி போன்றவை ஆண்டுக்காண்டு பழுது பார்க்கப்படும் நிலைமை ஏற்பட வேண்டும். இவற்றை எல்லாம் சிறப்பாகச் செய்ய 'போலீஸ் ஹவுசிங் கார்ப்பரேஷன்' போன்ற ஒரு அமைப்பை தனியாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக காவல் துறைக்கு தனியாக ஒரு அச்சகத்தை ஏற்படுத்த வேண்டும். தனி அச்சகம் இருக்குமானால் அதன் மூலம் காவல் துறை சம்பந்தப்பட்ட பணிகளை நல்லமுறையில் செய்ய வாய்ப்பாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சில குற்றச் சாட்டுகளைச் சொன்னார்கள். காவல் துறையில் இருக்கிற சில அதிகாரிகள் அதிகமாக சொத்துக்கள் வைத்திருக்கிறார்கள்; பினாமி முறையில் சொத்துக்களை வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். சட்டமன்ற உறுப்பினர்களானாலும், பொது வாழ்க்கையில் இருக்கிற யாராக இருந்தாலும் அவர்களுடைய





சொத்துக்கள் தணிக்கை செய்யப்பட வேண்டும். அது பொது வாழ்க்கையிலே இருப்பவர்கள் தூய்மையாக இருக்க உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சென்னை மாநகரைப் போல மதுரையும் மாநகராகிவிட்டது. ஆனால் அங்கே ஒரு கமிஷனர் இல்லை. கமிஷனர் வேண்டுமென்று நீண்டகாலமாக சொல்லிக்கொண்டே இருக்கிறோம். அதை ஏன் இன்னும் செய்யவில்லை? அரசாங்கத்திற்கு மனம் இல்லையா? அல்லது வேறு ஏதாவது காரணங்களா? 'குண்டாஸ் ஆக்ட்' இருக்கிறது. அதன் அடிப்படையில் கையெழுத்து வாங்க என்ன பாடுபட வேண்டியிருக்கிறது. வேறு சில காரியங்களும் விரைவாகச் செய்ய முடியவில்லை. ஆகவே சென்னை மாநகரில் காவல்துறை கமிஷனர் நிர்வாகம் இருப்பதைப்போன்று மதுரை மாநகருக்கும் கமிஷனர் நிர்வாகத்தை உடனடியாக ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, என்னுடைய தொகுதியாகிய திருமங்கலத்தில் கூடக்கோயில் பகுதியில் காவல் நிலையம் அமைக்க வேண்டுமென்று நீண்டகாலமாக கோரிக்கை இருந்துவருகிறது. அதற்கு அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வடாற்காடு மாவட்டத்தில் வேலூர், குடியாத்தம், ஆரணி, இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை பகுதிகளில் நோட்டு இரட்டிப்பு மோசடிக் குற்றம் அதிகமாக இருக்கிறது. பலர் ஆயிரக்கணக்கான ரூபாய்களை இந்த மோசடியினால் இழந்திருக்கிறார்கள். சேலம், ஆந்திராவில் இருந்து வந்து, வேலூரை தலைமையிடமாகக் கொண்டு, ஒரு கும்பல் இந்த மோசடியில் ஈடுபட்டிருப்பதாகத் தெரிகிறது. ஒரு வாரத்திற்கு முன்பு பெரிய தோல் தொழில் உரிமையாளர் ஒருவர் இராணிப்பேட்டையில் மூன்று இலட்சம் ரூபாயை இழந்துவிட்டார். இந்த மோசடியைச் செய்கின்ற கும்பலைக் கண்டுபிடித்து, உடனடியாக தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டை, வாலாஜாபேட்டை நகரப் பகுதிகளில் வங்கி அதிகாரிகள், வியாபாரிகளுடைய நகைகள், இதர பண்டங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. இதுவரையில் புலன் விசாரணை இல்லை; எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல சட்டமன்ற

[திரு. என். எஸ். வி. சித்தன்] [1987 மே

உறுப்பினர்கள் இப்படிப்பட்ட சம்பவங்களைச் சொல்லியிருக்கிறார்கள்; மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்களும் குறிப்பிட்டார்கள்.

அதைப்போன்று தென்னாற்காடு மாவட்டம், சின்னசேலம் நகரில் அரங்கநாத நாயகர் மகள் அருள்மொழி என்ற பெண் கொலை செய்யப்பட்டிருக்கிறார். அந்தப் பெண்ணின் கணவன் பரமசிவம்; இன்னொருவர் பெயர் கிருஷ்ணன். இருவரும் சேர்ந்து அந்தப் பெண் தன்னுடைய தகப்பனார் வீட்டில் இருந்தபோது பாஸ்ஃபரஸ் வீசி அந்தப் பெண்ணை கொன்றிருக்கிறார்கள். அந்தப் பெண் அரசு மருத்துவமனையிலும் காவல் துறை அதிகாரிகளிடமும் மரண வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். பரமசிவம் கைது செய்யப்பட்டிருக்கிறார், வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமான ஒருவர் தப்பித்துக் கொண்டிருக்கிறார். அவரைக் கண்டுபிடித்து, இந்த வழக்கில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையில் இருப்பவர்கள் தவறு செய்கிறார்கள் என்று சொல்லுகிறபோது, எல்லோருமே தவறு செய்கிறார்கள் என்று சொல்ல முடியாது. காவல் துறையில் இருப்பவர்களில் திறமையானவர்கள் இருக்கிறார்கள்; நேர்மையானவர்கள் இருக்கிறார்கள்; யோக்கியமானவர்கள் இருக்கிறார்கள்; ஒழுக்க சீலர்கள் இருக்கிறார்கள். இன்று காலையில் வந்த பத்திரிகைச் செய்தி ஒன்றைப் பார்த்தேன். ஊட்டியில் டி.எஸ்.பி.-யே ஒரு பெண்ணை கடத்துவதற்கு துணையாக இருந்தார் என்ற செய்தியைப் பார்க்கும்போது 'வேலியே பயிரை மேய்வதுபோல' இருப்பது சரியல்ல, நியாயமல்ல. இந்தமாதிரியான குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். குற்றவாளிகள் என்று தெரிந்து, முன்னாலே அவர்கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டாலும், பின்னால் குற்றம் நிரூபிக்கப்படவில்லை என்று சொல்லி சிறு தண்டனை வழங்கப்பட்டு, மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நடவடிக்கை இல்லாமல் குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல் இன்னொன்று. மதுரை மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு 1983 ஆம் ஆண்டு திருமணம்



1987 மே 5] [திரு. என். எஸ். வி. சித்தன்]

நடைபெற்றது. மனைவியோடு கொஞ்சகாலம் அவர் வாழ்ந்தார். பிறகு இணைந்து வாழ முடியவில்லை. கருத்து வேறுபாடு காரணமாகப் பிரிந்து இருக்கின்றனர். மனைவி தன்னுடைய தந்தையார் வீட்டில் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் நான்காண்டுகளுக்குப் பிறகு, ஊராட்சி ஒன்றியத் தலைவராக அவர்கள் வந்ததற்குப் பிறகு அரசியல் காழ்ப் புணர்ச்சி காரணமாக வரதட்சிணை கொடுமை என்று சொல்லி அந்த ஊராட்சி ஒன்றியத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று காவல் துறையினரை வற்புறுத்திக்கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணியில் இருப்பவர்கள் உண்மையைச் சொன்னாலும் கூட காவல் துறை அவர்மீது நடவடிக்கை எடுப்பதில் முனைப்பாக இருக்கிறது. நான் ஒன்றைக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். குற்றவாளி தண்டிக்கப்பட வேண்டும் என்றாலும் நிரபராதிகளுக்குத் தண்டனை அளித்துவிடக் கூடாது. இப்படி அவர் மீது வரதட்சிணைக் கொடுமை என்ற அளவில் காவல் துறையினர் காட்டுகின்ற முனைப்பை கள்ள நோட்டு அடிப்பவர் மீதும், கள்ளச் சாராயம் காய்ச்சுவோர் மீதும், சமுதாயக் குற்றவாளிகள் மீதும் காட்டி அந்த அளவில் காவல் துறையினரின் கண்ணோட்டம் இருக்க வேண்டுமென்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சிவகாசி முண்டகநாடார் தெருவில் பகலில் ஆறரை மணிக்கு அதாவது 30-ஆம் தேதியன்று செயினை அறுத்துக் கொண்டு போய் இருக்கிறார்கள். இவ்வளவு சொல்வானேன். மாறண்டஹள்ளி என்ற கிராமத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களுடைய சகோதரியிடம் 8 பவுன் சங்கிலியை அறுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். மூன்று மாத காலம் ஆகியும் நடவடிக்கை எடுக்கவில்லை என்று ஆளும் கட்சி உறுப்பினரே சொன்னார் என்றால், நாங்கள் எல்லாம் எங்கே போவது? இதை எல்லாம் பார்த்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கும்பகோணம் பஸ் ஸ்டாண்ட் அருகிலே உள்ள போலீஸ் காலனியைப் பொறுத்தவரையில் கட்டிடங்கள் இடிந்து விழுகிற நிலைமையில் இருக்கிறது என்று சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அங்கே தண்ணீர் வசதி, லைட்

வசதி போன்ற பல்வேறு வசதிகள் இல்லாத நிலைமையில் உடனடியாக அந்தக் கட்டடத்தைக் காலி செய்யவேண்டுமென்று பொதுப்பணித்துறை நோட்டீஸ் கொடுத்த பிறகும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே உடனடியாக காவல் துறையினரின் குடியிருப்புக்களை எல்லாம் கண்காணித்து உரிய நடவடிக்கை எடுத்து விபத்து நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சென்னை நகரிலும், சுற்றி இருக்கின்ற பகுதிகளிலும் காட்டன் பெட் என்று சொல்லப்படுகிற பருத்திச் சூதாட்டம் அதிகமான அளவில் நடந்துகொண்டிருக்கிறது. இவ்வாறு வளர்ந்து கொண்டிருக்கின்ற நிலைமையைத் தடுக்க வேண்டும். தலைநகரைச் சுற்றி இவ்வாறு நடைபெறுகின்ற காரணத்தால் இதுகுறித்து கண்காணித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

தீயணைப்புத் துறை இன்றைக்குக் காவல் துறையோடு இருந்துகொண்டிருக்கிறது. ஆனால் தீயணைப்புத் துறையிலே இருப்பவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்களா என்று சொன்னால் நான் அறிந்த வரையில் மகிழ்ச்சியாக இல்லை என்றுதான் சொல்வேன். காவல் துறையில் இருப்பவர்களுக்கு இணையாக இவர்களுக்கும் ஒரு காலத்தில் சம்பளம் வழங்கப்பட்டது. பிறகு படிப்படியாக அது குறைந்துவிட்டது என்று அவர்கள் வருத்தப்படுகிறார்கள். அவர்கள் முக்கிய பணியில் இருக்கக்கூடியவர்கள். பொருட்களைப் பாதுகாக்கக்கூடிய பொறுப்பிலே இருப்பவர்கள்; உயிரைப் பாதுகாக்கக்கூடிய நிலைமையிலே இருப்பவர்கள்; எனவே அவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க முயற்சிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை, அரக்கோணம், சிவகாசி, உடுமலைப்பேட்டை, ராணிப்பேட்டை போன்ற இடங்களில்தான் தீயணைப்புத் துறையினருக்கு வீடுகள் இருக்கின்றன என்றும் மற்ற இடங்களில் இல்லை என்றும் சொல்கிறார்கள். எனவே அவர்களுக்கு போதிய அளவில் வீடுகளைக் கட்டிக் கொடுக்கின்ற முயற்சியினை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்து தீயணைப்புத் துறையில் இருக்கின்ற வாகனங்கள் சரியான நிலைமையில் இல்லை என்று சொல்கிறார்கள். அவற்றிலே 30 சதவீதத்தை உடனடியாகக் கண்டம் செய்ய வேண்டும்; புதிய வாகனங்கள் வாங்கவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே தீயணைப்புத் துறையில் இருக்கும் வாகனங்கள் நல்ல நிலைமையில் இருக்கவேண்டும். அந்த வகையில் அவற்றைப் புதுப்பிக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திருமங்கலம் தீயணைப்பு நிலையம் உட்பட பல இடங்களில் டெலிஃபோன் வசதி இல்லை. டெலிஃபோன் வசதி இருந்தால் தானே உடனடியாகப் போக முடியும். இல்லை என்றால் இங்கேயிருந்து ஒருவர் போய் அங்கே சொல்லி வருவதற்கு எவ்வளவு காலமாகும்? சின்னத் தொகைதானே இதற்கு செலவாகும். ஆகவே உள்துறை இது குறித்து அருள்கூர்ந்து பரிசீலித்து இந்த தீயணைப்பு நிலையங்களுக்கு உடனடியாக தொலைபேசி வசதியைச் செய்து கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்னும் சொல்லப் போனால் வயர்லெஸ் வசதி கூட செய்து கொடுக்கவேண்டும். அப்போதுதான் உரியநேரத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். அந்த வகையில் ஏற்பாடு செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1986 ஆம் ஆண்டின் தீயணைப்புச் சட்டத்தை அமலுக்குக் கொண்டுவரவேண்டுமென்று சொல்கிறோம். அதனை நிறைவேற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஊதியம் குறைவாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்னொரு செய்தியையும் நான் சொல்ல விரும்புகிறேன். குடந்தையிலே இருக்கின்ற தீயணைப்பு நிலையத்திலே உள்ள இரண்டு இன்ஜின்கள் பத்தாண்டுகளுக்கு மேலாக உபயோகப்படுத்தப்படாத நிலையில் இருக்கின்றன. சென்ற ஆண்டிலே என்று தீ விபத்துக்கள் ஏற்பட்டும் கூட அந்தத் துறையிலே உள்ள இந்த இன்ஜின்கள் சரியாக இல்லாத காரணத்தால் அதிகாரிகளின் கண்முன்னாலேயே வீடுகள் எரிந்து சாம்பலாகி இருக்கின்றன என்று சட்டமன்ற உறுப்பினர் வேதனையோடு குறிப்பிடுகிறார். இதனால் மக்கள் மத்தியில் தீயணைப்புத் துறைக்கும் கெட்ட பெயர் வந்திருக்கிறது என்று

சொல்கிறார்கள். ஆகவே இதுபோன்ற நிலைமையில் இருக்கும் அந்த இன்ஜின்களை நல்ல முறையில் புதுப்பித்துக்கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

1986-87-லே வாசுதேவநல்லூரிலே ஒரு தீயணைப்பு நிலையம் கட்டப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதனை இந்த ஆண்டு துவக்கவேண்டுமென்று மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொல்கிறார் என்பதைத் தெரிவித்து இந்த அளவில் என்னுடைய உரையை நிறைவாக்கி அமர்கிறேன். வணக்கம்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

(பிற்பகல் 12-30)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உட்காருங்கள்.** இந்த அவையிலே பிரதான எதிர்க்கட்சி பேசிய பிறகு அமைச்சர் தான் பேச வேண்டும் என்ற முறையில் பேரவைத் தலைவர் ரூலிங்கே கொடுத்திருக்கிறார். வேண்டுமானால் கடைசியில் விளக்கம் கேட்க அனுமதிக்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவையின் துணைத் தலைவர் அவர்களே, 1987-88 ஆம் ஆண்டிற்கான காவல் துறை பற்றிய செலவு வகைகளுக்கு 117 கோடியே 87 லட்சத்து 73 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையும், தீயணைப்புப் பணிகள் என்ற வகையில் செலவு வகைகளுக்கு 8 கோடியே 79 லட்சத்து 55 ஆயிரத்திற்கு மேற்படாத தொகையும் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுடைய சார்பாக கோரிய கோரிக்கைகள் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள், காவல் துறை பற்றிய பொதுவான கருத்துக்களையும், குறிப்பான கருத்துக்களையும், அந்தத் துறை பற்றிய நிறை குறைகளைப் பற்றியும், அதில் உள்ள எற்றத் தாழ்வுகள் பற்றியும், நடந்தன பற்றியும், நடக்க வேண்டியன பற்றியும், நிறைவேற்றப்பட்டவைகளைப் பற்றியும், நிறைவேற்றப்பட வேண்டியவைகள் பற்றியும் விவரமாகவும் பேசினார்கள், விளக்கமாகவும் பேசினார்கள்.





காவல் துறையின் அரிய பெருமைகளையும், நல்ல பணிகளையும், சீரிய சாதனைகளையும் உளமார உவகை பெருக்கோடு பாராட்டி பேசிய உறுப்பினர்கள் அனைவருக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்களின் சார்பாக நான் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் . கடமைப்பட்டிருக்கிறேன். நேர்மை பண்போடும், நியாய உணர்வோடும் குற்றங்குறைகளை நல்ல நோக்கத்தோடு எடுத்துச் சொல்லி, இந்தக் காவல் துறை செம்மை படுத்தப்பட வேண்டும்; சீர் படுத்தப்பட வேண்டும்; அதனுடைய நோக்கங்கள் எல்லாம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் மூலம் நாடும் நல்ல பல விளைவுகளையும் நல்ல பயனையும் பெறவேண்டும் என்ற தன்மையில் உரையாற்றிய உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுதல்களையும் இந்த வாய்ப்பிலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எதிர்ப்பு உணர்ச்சியோடும் வெறுப்பு உணர்ச்சியோடும் இட்டுக் கட்டி பேசிய பேச்சுக்களுக்கெல்லாம்

தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சே தன்னைச் சுடும்.

என்ற வள்ளுவருடைய வாய்மொழியையே மறுமொழியாக வைத்து அவர்களுக்கு வள்ளுவரையே பதில் சொல்ல விட்டு விட்டு கருத்துக்களை சொன்னவர்களுக்கு மட்டும் சில்பல கருத்துக்களை வழங்கலாம் என்று நான் கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால் மற்ற எந்த ஒரு துறையைக் காட்டிலும் அதிகமான பொறுப்புகள் ஏற்று கடமைகளை ஆற்ற வேண்டிய துறை காவல் துறை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேரும் எடுத்துச் சொன்ன கருத்துக்களிலிருந்து நாம் மிகத் தெளிவாக உணரலாம். மற்றைய மற்றைய துறைகளுக்கு இருக்கிற 'டியுட்டீஸ் அண்டு ரெஸ்பான்சிபிலிட்டிஸ்' என்று எண்ணுகிற போது மற்ற மற்ற துறைகளுக்கு இருக்கிற பொறுப்புகளின் அளவினையும், அந்தப் பொறுப்புகளை ஏற்று அவர்கள் எல்லாம் நடத்தி வருகின்ற கடமைகளின் தன்மையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது காவல் துறைக்கு இருக்கிற பொறுப்புகளும் அதிகம்; கடமையினுடைய அளவும் அதிகம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

5½ கோடி மக்கள் தமிழகத்தில் வாழ்கிறார்கள் என்றால் 5½ கோடி மக்களை பாதுகாக்க வேண்டும். அத்தனை பேருடைய உயிர், உடல், உடைமைகளுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அதற்கு ஏதேனும் ஒரு கேடு ஏற்படுமானால் அந்தக் கேடு ஏற்படாத அளவுக்கு தக்க பாதுகாப்பு தருதல் வேண்டும். கேடு ஏற்பட்டால் கேட்டை கண்டு பிடிக்கவும் வேண்டும். அதைச் செய்தவர்கள் யார் என்று கண்டு பிடிக்கவும் வேண்டும். கண்டு பிடித்து அவர்கள் மீது வழக்கு தொடுக்கவும் வேண்டும். அதற்கு முறையான சாட்சியங்கள் வேண்டும். அந்த சாட்சிகளை நீதிமன்றத்தில் கொண்டு போய் நிறுத்தவும் வேண்டும். அந்த சாட்சிகளின் அடிப்படையில் நீதிபதிகள் நீதியை வழங்கவும் வேண்டும். அந்த நீதியின் அடிப்படையில் உறுப்பினர்களும், நாமும் மற்றவர்களும் எண்ணுகிற தன்மையில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட காரியங்களை அவர்கள் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டும் அல்லாமல், குற்றவாளிகளை காவலர்கள் கண்டு பிடித்து இனிமேல் குற்றங்கள் நடைபெறாத வகையில் பாதுகாப்பு ஏற்படுத்தவும் வேண்டும். இப்படி தனிப்பட்டவர்களுடைய உரிமை, பாதுகாப்பு, அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகள் ஆகிய அத்தனையையும் செய்யவேண்டியவர்களாக இருக்கிறார்கள் என்பது மட்டுமல்ல, அமைப்புகள், குழுக்கள், சமுதாயம் ஆகியவற்றை பாதுகாக்க வேண்டியிருக்கிறது என்பது மட்டுமல்ல, எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க சட்டத்தை மட்டுமே காணாமல், இந்த நாடு விடுதலை பெற்றதற்குப் பிறகு, சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு சமூக நீதியின் அடிப்படையிலும், பொருளாதார நீதியின் அடிப்படையிலும், அரசியல் நீதியின் அடிப்படையிலும், பல்வேறு பாதுகாப்புகளை மக்கள் சமுதாயத்திற்கு உருவாக்குவதற்கு உறுதுணையாக இருக்கவேண்டிய பொறுப்பும் இருக்கிறது. அந்த வகையில் தான் அண்ணல் காந்தியடிகள், இந்திரா காந்தி அம்மையார் மற்றவர்கள் எடுத்துச்சொன்ன சிரிய கருத்துக்களையெல்லாம் மாண்புமிகு சித்தன் அவர்கள் எடுத்துச் சொன்னார். இப்படி இலக்கணம் வகுத்தவர்கள் உலகத்தில் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த இலக்கணங்களை எடுத்துச் சொல்வோமானால் ஏராளமாக இருக்கலாம். நமக்கிருக்கிற ஒரே ஒரு கஷ்டம் என்னவென்றால் இலக்கணப்படி யாரும் நடப்ப



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தில்லையென்பது தான் பல்வேறு வகையில் வருகிற தகராறே தவிர வேறல்ல. எல்லாவற்றிற்கும் இலக்கணம் இருக்கிறது. இலக்கணத்திற்கும் நடைமுறைக்கும் அதிக தொலைவு இல்லாமல், 'கேப்' இல்லாமல் பார்த்துக் கொள்வோமானால் பல சங்கடங்கள் வராது. அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல அந்த முக்கியத்துவத்தை அவர்கள் எல்லாம் உணர்த்தியிருக்கிறார்கள் என்பதைத் தான் இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள்.

இந்தத் துறை 24 மணி நேரமும் பணியாற்ற வேண்டிய ஒரு துறையாகும். இந்தத் துறை விழிப்புணர்ச்சியோடு இருந்து பணியாற்ற வேண்டிய ஒரு துறை. எந்த ஒரு நேரத்திலும் அத்தனைபேரும் வந்து பணியாற்ற வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிற துறை என்பது மட்டுமல்லாமல் சமுதாயத்தில் ஏற்படுகிற மாச்சரியங்கள், தனிப்பட்ட மனிதர்களுக்கு ஏற்படுகிற மாச்சரியங்கள், தில்லுமுல்லுகள், மோசடிகள் மற்றவைகளுக்கு எல்லாம் ஈடுகொடுத்து, ஈடுகொடுத்து நீதியை நிலைநாட்டுகிறபோது, அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறபோது சிலபல குறைபாடுகள் இருப்பதும், குற்றங்கள் ஏற்படுகிற தன்மைகளையெல்லாம் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப்போல குற்றங்கள் நிகழவில்லையென்றோ, குறைபாடுகளுக்கே இடமில்லையென்றோ, நூற்றுக்கு நூறு சதவீதம் இந்தத் துறை 'பெர்ஃபெக்ட்டாக' நடைபெறுகிறது என்றோ வாதாட முன்வரவில்லை. ஆனால் இப்படிப்பட்ட நிலைமையை ஏற்று நடத்துகிறபோது சிலபல நேரங்களில் அப்படிப்பட்ட தன்மை, 'To err is human' என்று சொல்கிற பழமொழிக்கு ஏற்ப, மனிதர்களுடைய இயல்பே தவறு செய்வது என்ற பழமொழியை பார்க்கிறபோது, 5½ கோடி மக்களை காப்பாற்றுகிற பொறுப்பு ஏற்படுகிற அத்தகைய சூழ்நிலையில், இங்கே நாம் 63,974 காவல் துறையைச் சேர்ந்த பணியாளர்கள் மேல் மட்டத்திலிருந்து அடிமட்டம் வரையில் இருக்கிறவர்களை வைத்துக் கொண்டு 5½ கோடி மக்களுக்கு பாதுகாப்பைத் தந்து, வழக்குகளைக் கண்டுபிடித்து, அவர்களுக்கு நீதி வழங்குகிற பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியதைப் போல 989 காவல் நிலையங்கள் மூலம், 135 புறக்காவல் நிலையங்கள் மூலம் இப்போது பணிகளையாற்ற வேண்டியிருக்கிறது. மாண்புமிகு

உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித்ததற்கிணங்க இவைகளின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கு நிதி வசதி, நிதியாதாரம் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவ்வப்போது பெருக்கிக் கொண்டு வருகிறோம் என்பதை நீங்கள் நன்றாக உணரலாம். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இதனுடைய வசதி வாய்ப்புகளை ஆண்டிற்காண்டு பெருக்கிக் கொண்டு வருகிறார்கள் என்பது மட்டுமல்லாமல், இங்கே காலத்தின் போக்கிலே ஏற்படுகிற திருட்டு, கொள்ளை, கொலை, மற்றைய மோசடிகள் ஆகியவற்றையெல்லாம் செய்வதில் நூதனமான, நவீனமான முறைகளையெல்லாம் கையாளுகிறார்கள் என்பதற்கேற்ப அறிவியல் முறையிலும், தொழில் நுட்ப அறிவியல் தன்மையிலும் அவற்றைக் கண்டுபிடிப்பதற்கு கருவிகள் மற்றவைகளைப் பயன்படுத்தி, தடயங்களைக் கண்டுபிடித்து, குற்றங்களைக் கண்டுபிடித்து, தண்டனை வழங்குகிற முறையில் அவர்களுக்கு வேண்டிய வசதி வாய்ப்புகளை, கருவிகளை வழங்குவதிலும், விரைவாகச் சென்று அந்தப் பணிகளை ஆற்றுவதற்கு ஏற்ற அளவில் வாகன வசதிகளை செய்வதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தாராளமான முறையில் பணியாற்றி வருகிறார்கள் என்பது ஆண்டிற்காண்டு இந்தத் துறைக்கு ஒதுக்கப்படுகிற தொகையின் அளவு பெருகிக் கொண்டே வருகிற பாங்கிலிருந்தே நீங்கள் ஓரளவிற்கு நன்றாக உணரலாம்.

அதுமட்டுமல்லாமல் எங்கே ஒரு நிகழ்ச்சி நடந்தாலும் 100-ம் நம்பருக்கு போன் செய்து சொல்லிவிடுவீர்களானால் ஒரு ஐந்து நிமிடத்திற்குள்ளாக அங்கே போய் சேர்கிற அளவிற்கு வசதி

(பிற்பகல் 12-40)

வாய்ப்புகளை செய்து வாகன வசதிகள் மூலமாக தொடர்பு வைத்துக் கொண்டிருக்கிற அளவிற்கு நவீன கருவிகள் மூலமாகவும், தொலைபேசி வாயிலாகவும் உடனுக்குடன் மைக்ரோ-வேவ் மூலமாக வைக்கிற தொலைபேசிகளின் வாயிலாகவும், இப்படிப்பட்ட வசதி வாய்ப்புகளை தமிழகம் முழுவதும் இருக்கிற காவல் துறையினரோடு தொடர்பு கொண்டு, பணிகளை உடனுக்குடன் அறிந்து கொள்ளவும், அறிந்து கொண்ட தன்மைகளுக்கு ஏற்ப, நடவடிக்கைகளை மேற்கொள்கிற வாய்ப்பினை தமிழகம் மிகச் சிறப்பாக பெற்றிருக்கிறது என்பதையும் உணர்ந்து வரலாம். அதற்கேற்றபடி மாண்புமிகு முதல்வர் அவர்களும், இதற்கெல்லாம் கருவிகள் வழங்கவும், அதிகமான செலவானாலும் கூட பரவா





யில்லை என்ற அளவிற்கு ஆண்டுக்காண்டு வழங்கிக் கொண்டு வருகிற பாங்கினை எல்லாம் நீங்கள் நன்றாகக் காணலாம். அந்த வகையிலே 1970-71-லே காவல்துறைக்கு 15 கோடியே 41 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கீடு செய்தோம் என்றாலும், 1976—77-லே 30 கோடி ரூபாய்தான் ஒதுக்கீடு செய்தோம் என்றாலும், 1986—87-லே இந்த வசதி வாய்ப்புகளை பெருக்கவும், காவல்துறையிலே பணியாற்றுகிறவர்களுடைய—உயர்மட்டத்திலேயிருந்து, அடிமட்டம் வரையில் இருக்கிற பணியாளர்களுடைய—எண்ணிக்கையை ஆங்காங்கு இருக்கிற தேவைக்கு ஒப்ப நாம் பெருக்கிக்கொண்டு வருவதன் காரணமாகவும், இப்படி வசதியான நவீன கருவிகள், மற்றவைகளை வழங்குவதன் காரணமாகவும், அதற்கான வசதிகளை ஏற்படுத்தித் தருவதன் காரணமாகவும், 94 கோடியே 11 லட்சம் ரூபாய் சென்ற ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 1987-88-க்கு 117 கோடியே 88 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதிலிருந்து, இருக்கிற நிதிவசதி ஆதாரத்தில் எவ்வளவு செலவழிக்க முடியும் என்று வருகிற தன்மையில் நாம் இதையெல்லாம் மனதிலே வைத்து, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுகிற கருத்துக்களுக்கு ஏற்பதான் இந்தப் பணிகள் எல்லாம் செய்யப்பட்டு வருகின்றன என்பதை நாம் காணலாம்.

ஆகவே ஓரளவிற்கு காணுகிறபோது, நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையிலும் இன்னமும் திறம்பட செயல்படலாம் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் அதை மிகச் சிறப்பாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். தமிழக போலீசாரைப் பொறுத்தவரையிலும், எல்லா உறுப்பினர்களும் பாராட்டினார்கள். சில பல இடங்களில் தவறுகள் நடைபெறுகின்றன என்று சுட்டிக் காட்டினார்கள். குறைபாடுகள் இருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டினார்கள். செய்யப்பட வேண்டிய பணிகள் செய்யப்படாமல் விடுபடுகின்றன, அது குறை என்றும் சுட்டிக் காட்டினார்கள். செய்யக்கூடாத செயல்கள் செய்யப்படுகின்றன, அது குற்றங்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள். சில பல இடங்களிலே குறைகள் நடைபெறுகின்றன, சில பல இடங்களில் குற்றங்கள் நடைபெறுகின்றன. மனித இயல்பைப்பொறுத்து, மனிதத் தன்மையைப் பொறுத்து, அவைகள் நடைபெறுகின்றன என்பதையும் சுட்டிக்காட்டி, சில சிறந்த, நல்ல, பண்புடைய, நாணயமான, நேர்மையான, தாம் எடுத்துக்

கொண்ட பொறுப்புகளிலே அக்கறையும், ஆர்வமும் கொண்டு பணியாற்றுகிற அதிகாரிகளும மற்றவர்களும் இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துத் தெரிவித் தார்கள்.

ஆனால் ஆங்காங்கு இருக்கிற சூழ்நிலைகளை ஒட்டி, சில பல தவறுகள் நடைபெறுகின்றன. அந்த வகையில் ஒப்பிட் டுப் பார்க்கின்றபோதுதான் சில பல வகைகளை, மற்றவை களைக் காணுகிறபோது, இங்கே புள்ளிவிவரங்களும், விழுக்காடு களும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு விளக்கக் குறிப்பிலே எடுத்துத் தரப்பட்டு இருக்கின்றன. அந்த வகையிலே, 1972-லேயிருந்து, 1986 வரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் என்ற முறையில் விவரங்கள் தரப்பட்டு இருக்கின்றன. கூடுமான வரையில், பொதுவாக கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள், பதிவு செய்யப்பட்ட வழக்குகள் என்ற வகையில் 1982-லே கண்டுபிடிக்கப் பட்டவை என்பது 73.3 சதவீதம்; 1983-லே 73.9 சதவீதம்; 1984-லே 70.2 சதவீதம்; 1985-லே 75.6 சதவீதம், 1986-லே 70.6 சதவீதம் என்ற அளவிற்கு வருகிறது என்று சொன்னால், இந்தியாவிலே இருக்கிற 22 மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற போது, இது அதிகம். இதை இன்னும் மேலே ஏற்ற முடியாதா என்றால்—மாண்புமிகு உறுப்பினர் ரமணி அவர்களும் சுப்பராயன் அவர்களும், மற்றவர்களும் இதை இன்னும் சீர்திருத்தவேண்டும், இன்னும் சிலபல குறைபாடுகளை சுட்டிக்காட்டி, சிலபல இடங் களில் சரியாக நடைபெறாததையும் இங்கே சுட்டிக்காட்டினார்கள். நான் நடைபெற்றவைகளைக் கூட சுட்டிக்காட்டலாம். அவர்கள் நடைபெறாதவற்றுக்கு உள்ளே புகுந்தார்கள், நான் நடைபெற்ற வற்றுக்குள்ளே புக முடியும். ஆனாலும் 70 சதவீதத்திலே தங்க ளால் இயன்ற அளவிற்கு செய்திருக்கிறார்கள். இருக்கிற சாட்சிகள் கலைக்கப்படுகின்றன. தடயங்கள் மாற்றப்படு கின்றன. மாறுபாடுகள் கொள்கிறார்கள். அப்படியே சாட்சிகள் வந்தாலும், அவர்களை மாற்றிவிடுகிறார்கள். அப்ரூவராக வருகின்றவர்கள்கூட பின்னாலே மாறிவிடுகிறார்கள். வழக்கு மன்றத்திற்குச் சென்றாலும் கூட அதை சரியாக நிர்வகிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு விடுகிறது. இவ்வளவுக் கும் இடையிலே 70 சதவீதம், 73 சதவீதம் என்று கண்டுபிடிக் கிறார்கள் என்பதை நாம் ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, இது



ளவிற்கு பரவாயில்லை என்று சொல்கிறோம். இந்தத் திறமையை மேலும் அதிகமாக ஆக்கவேண்டும் என்றால், ஆக்க வேண்டும். ஆனால் நல்லதல்லவா என்றால், நல்லதுதான். அதற்கான முயற்சிகள் ஏதாவது செய்யவேண்டுமானால், வசதி வாய்ப்புகளை கூடுதலாக ஆக்கவேண்டும் என்றால், அதை ஆக்கு வதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். சமுதாயம் அதற்கு ஒத்துழைப்பு தரவேண்டும் என்பதுதான் எங்களுடைய குறிக் கோள். மற்ற மற்ற மாநிலங்களைப் பார்ப்போமானால், நேரம் அதிகமாகிவிடுகிற காரணத்தால், விட்டுவிடுகிறேன். அதிலே 46 சதவீதம், 36 சதவீதம், ஒரு மாநிலத்திலே 26 சதவீதம்தான் கண்டுபிடிப்பே நடைபெற்று இருக்கிறது. ஆக; இப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பார்க்கிறபோது ஓரளவுக்குப் பரவாயில்லை என்று நாம் சொல்லலாம்.

அதேமாதிரிதான் மக்கள் தொகையையும், காவலர் களையும் சொல்லுகின்றபோது 1982-ல் ஒரு காவலருக்கு சராசரி குற்றங்கள் 21.8 என்று இருந்தால், இப்போது 1986-லே 18.8 சதவீதத்திற்கு குற்றங்களுடைய தன்மைகளும் வந்து சேர்ந்து இருக்கின்றன. அதை இன்னமும் கீழே கொண்டு போகிற அளவுக்கு திறமைகளைப் பயன்படுத்துகின்ற சூழ்நிலை கள் ஏற்பட்டால் மிக மிக நல்லது. குற்றங்களில், தாக்கலானவை, கண்டுபிடிக்கப்பட்டவை என்று சொல்கின்ற அளவுக்கு இங்கே புள்ளி விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப் பினர்களும் மிக நன்றாக அவற்றையெல்லாம உணர்வார்கள். அதேபோன்று குற்றங்களிலே, சாதாரண பெருநகரத்திற்கு பக்கத்திலே இருக்கின்ற நகரங்கள், சென்னைக்குச் சமமாகக் கருதப்படுகின்ற நகரம் பெங்களூர், தென்னகத்தைச் சேர்ந்த நகரம் பெங்களூர். சென்னையைவிட மிகப் பெரிய நகரம். மக்கள் தொகையில் ஒரு கோடியைத் தாண்டியது, கல்கத்தா. கிட்டத் தட்ட 85 லட்சம் மக்களை தாண்டியது பம்பாய். கிட்டத்தட்ட சென்னை நகரத்திற்கு சமமாக இருப்பது பெங்களூர். பெங்களூ ரையும் சென்னையை மட்டுமே நாம் ஒப்பிட்டுப் பார்ப்போமே யானால்கூட, 1985-லே கொலை என்று பார்த்தால் பெங்களூரிலே 92; சென்னை மாநகரில் 36; அங்கே 1986-லே 83 கொலைகள் என்றால், இங்கே 64 கொலைகள். கொள்ளை அங்கே 41 என்றால் இங்கே 3; அங்கே 1985-லே 190 வழிப்பறி என்றால்,

இங்கே 74; 1986-ல் அங்கே 197 என்றால், இங்கே 54; அங்கே கன்னம்வைத்து களவு 1,504 என்றால், இங்கே 544, 1985-ல் பெங்களூரிலே 1986-லே 1,538 என்றால், இங்கே 438. இன்னும் குறைய வேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன்.

ஆனாலும் கூட மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொல்கின்றபோது, ஜேப்படி போன்றவைகளெல்லாம் கொஞ்சம் அதிகமாக ஆகிவிடுகின்றன; அந்த நிலைமைகளெல்லாம் ஓரளவிற்கு குறைய வேண்டுமென்று எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உள்ளபடியே சென்னை, மதுரை, கோயம்புத்தூர் போன்ற இடங்களிலே நாளுக்குநாள் கொஞ்சம் பெருகி வருகின்றன. இந்த குற்றங்கள் என்று பொதுமக்களிடமிருந்து குற்றச்சாட்டுகள் வருகின்றன. காவல்துறையினர் அவ்வப்போது முடுக்கிவிடப் படுகிறார்கள். ஏனென்றால் கும்பல் கும்பலாக சேர்ந்துகொண்டு, கைமாறுகின்ற அளவுக்குகூட செய்கிறார்கள் என்றெல்லாம் வருகிறது. இதில் ஓரளவுக்கு அவர்கள் பிடித்துக்கொண்டு வருகிறார்கள் என்றாலும்கூட மேலும் அவர்களை சரியான முறையிலே கொண்டு வருவதற்கான சூழ்நிலைகளைச் செய்து கொண்டு வருகின்ற பாங்கினை பெற்றிருக்கிறார்கள். அதுபற்றிய புள்ளி விவரங்களை நான் கடைசியிலே சொல்லுகிறேன். அத்தகைய நிலைமைகளைப் பொறுத்தவரையிலே, ஜேப்படிகளைப் பொறுத்த வரையிலே, எப்படி நடக்கிறது? எவ்வளவு பேர் இருந்தார்கள்? எவ்வளவு கண்டுபிடித்தார்கள் என்பதை கடைசியிலே நான் சொல்கிறேன்.

இனக் கலவரங்களைப் பொறுத்தவரையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். ஜாதிக் கலவரங்களைச் சொன்னார்கள். ஜாதி உணர்வுகள் கூடாது என்று பலர் இருந்தாலும் கூட எல்லா அரசியல் கட்சிகளும், சமூகவாதிகளும், மற்றவர்களும் மக்களிடத்திலே ஜாதி உணர்வுக்கு இடமில்லாத அளவுக்கு மனிதனை மனிதன் என்று மதிக்கின்ற மனப்பான்மை வேண்டுமென்று பெரும் பெரும் தலைவர்கள் சொன்னக் கருத்துக்களை திரும்பத் திரும்ப எடுத்துச்சொல்லி, ஜாதி சங்கங்களுக்கு இடந் தராமல், ஜாதி சங்கங்களுக்குத் தலைமை தாங்காமல், அங்கே போய் அதைத் திறந்து வைக்காமல், அதற்கு ஊக்கம் தராமல் 'அட்லீஸ்ட்' குறைந்த அளவு அரசியலிலே புகழ்பெற்ற பெரும் பகுதி தலைவர்களெல்லாம் இதையெல்லாம் செய்யாமல் இருந்து



கொள்கிற ஒரு சூழ்நிலை ஏற்பட்டால்தான், அவைகளுக்கெல்லாம் ஒரு ஊக்கமும், ஆக்கமும் ஏற்படாமல் இருக்கக் கூடும். ஏனென் றால், நாளுக்கு நாள் இத்தகைய சங்கங்கள் ஏற்பட்டு வருகின்றன. அதற்கு ஒரு வெறித் தன்மை ஏற்பட்டு விடுகின்றது. ஒவ்வொரு ஜாதியும், அந்த ஜாதியின் முடிசூடா மன்னர்களும், இந்த நாட்டை ஆண்டுதான் ஆகவேண்டுமென்று—நாங்கள் ஒரு காலத்திலே ஆண்டோம்; இந்த நாடே எங்களுக்குத்தான் சொந்தம்; முடிசூடிய மன்னர்களாக இருந்தோம். இப்போது முடியையும் காணோம், அடியையும் காணோம் என்று சொல்கிற அளவுக்கு ஒரு தேவையற்ற பிரிஸ்டீஜை, தேவையற்ற வெறி உணர்ச்சியை ஊட்டிவிட்டதன் காரணமாக அங்கேயே நிற்கி றார்கள். அது நம் வளர்ச்சிக்கு அறிகுறியாகாது. நல்ல எதிர் காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்லாது. அது சமுதாயத் திலே இருக்கிற, சமுதாயத்தை திருத்துகிற பணியிலே சேர்ந்திருக் கிற சீர்திருத்தவாதிகளும், சமுதாயத்திற்கு தொண்டு செய்யக் கிளம்பியிருக்கிற அந்த பெரும் தலைவர்களும், சமுதாயத்திலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற அரசியல் தலைவர்களும், மற்றவர் களும், ஓயாமல் எடுத்துச்சொல்லிக் கொண்டு வருவார்களேயா னால், அது காந்தியடிகளைப்போன்று, பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்களைப் போன்று, பெருந்தலைவர்களைப் போன்று, பேரறிஞர் அண்ணாவைப் போன்று இப்படிப்பட்ட தலைவர்களெல்லாம் எடுத்துச்சொன்ன மாதிரி திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக்கொண்டு வருவோமேயானால் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்படக் கூடும்.

(பிற்பகல் 12-50)

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கூட கூறி னார்கள், ஜாதிக் கலவரங்கள், இனக் கலவரங்கள் இவ்வளவு காலம் ஆன பிறகும் கூட நடைபெறுகிறது என்று. நீண்ட பெரும் காலத்திற்கு முன்னால் ஔவையார் அவர்கள் சொன்னார்கள், 'ஜாதி இரண்டொழிய வேறு அல்ல' என்றும் 'பிறப்பொக்கும் எவ்வுயிருக்கும்' என்று வள்ளுவர் சொல்லி 2 ஆயிரம் ஆண்டுகள் ஆகின்றன, யார் கேட்டது. வள்ளுவரையே மதிக்கவில்லையே. சித்தனை எப்படி மதிப்பார்கள்? (சிரிப்பு)

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடும் நாட்களாக உள்ள ஜாதியைப் பற்றிச் சொன்னார்கள். ஔவையார் அவர்கள் பாடியதைப்பற்றி

எல்லாம் சொன்னார்கள். ஆனால் நம்முடைய பணி என்ன? அரசு என்ன செய்யவேண்டும். அது தான் முக்கியம் இங்கே. நீண்ட நாள் பிரச்சினை, . . .

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு சட்டம் கொண்டு வரும். சட்டம் எப்போதும் புறத்தை பொறுத்து தான் பாதிக்குமே தவிர, ஒரு உடம்பை, உடைமையை, வீட்டை, நிலத்தை, மற்றவைகளை பாதிக்கும்—மைன்டை என்ன செய்ய முடியும்? மனிதனுடைய மனதை ஒன்றும் செய்ய முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவன்தான் திருந்தவேண்டும். (குறுக்கீடு) சட்டம் விடாது. ஆகவேதான் பிடித்து உள்ளே போடுகிறோம். 6 மாதம் உள்ளே இருந்தால் திருந்துகிறானா என்று பார்க்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** அதை நேரத்தே செய்யவேண்டும்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி கைது செய்யும் போது நீங்கள் எல்லாம் கொஞ்சம் ஒத்துழைத்தால், எல்லோரும் ஒத்துழைத்தால் இப்படி சமூக விரோதிகள் யார் யார் என்று பார்த்து அவர்களை எல்லாம் கைது செய்து உள்ளே தள்ளுவதற்கு பொதுமக்களுடைய ஒத்துழைப்பு இருந்தால் ஜாதி கலவரங்கள் இடம் பெறாமல் இருக்கும். மனித சமுதாயம் ஒன்று என்று அவர்கள் சொன்ன மாதிரி இந்த நாடு விடுதலை பெற்று இவ்வளவு ஆண்டுகள் ஆகியும் 40 ஆண்டுகள் ஆகியும் நமக்கு இந்த உணர்வு இல்லாவிட்டால் எதிர்காலத்தில் பல கேடுகள் ஏற்படும்.

**திரு. கே. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உள்ள பூர்வமாக சொல்லுவதை நான் உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்ளுகிறேன். ஒப்புக்கொள்ளுகிறேன். ஒரே ஒரு விஷயத்தை மட்டும் அவரிடத்திலிருந்து கேட்டுக்கொள்ள விரும்புவது, மாநில அமைச்சர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் ஜாதிய மாநாட்டில் கலந்து கொள்ளுவதை, ஜாதிய அமைப்புகளில் அங்கம் பெறுவதை தடை செய்ய சட்டம் இயற்ற அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்கு சட்டம் தேவை இல்லை. அவரவர்கள் உணர்ந்து செய்ய வேண்டிய ஒன்று.



இதற்கு ஆக்கம் தரவேண்டியது இல்லை. ஆனால் பிற்படுத்தப் பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், பழங்குடி மக்கள் இருக்கிறார்களே, அவர்கள் தூக்கி விடப்பட வேண்டும். அவர்களை பொருளாதாரத்தில் தூக்கி விடுவதற்கு அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும் தரவேண்டும். ஜாதியை வளர்க்கக்கூடாது, ஜாதியத்தைப் பற்றிய பெருமையை பேசக்கூடாது. அப்படிப்பட்ட நிலைமைகளில் தான் நாம் ஊக்கம் தரவேண்டிய அவசியம் இருக்கிறது, சில பல நேரங்களில். பிற்படுத்தப்பட்டவர்களுக்கு கைக் கொடுக்காமல் பள்ளத்தில் விழுந்த பிற்படுத்தப்பட்டவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டு காலமாக, 2 ஆயிரம், 3 ஆயிரம் ஆண்டு காலமாக விழுந்து பட்டவர்களை எவ்வளவுக்கு எவ்வளவு கைக் கொடுத்து தூக்கி விடுகிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவுதான் கீழே இருக்கிறவர்கள் மேலே வரமுடியும். நாம் ரிசர்வேஷன் கொடுப்பதும், சலுகைகள் கொடுப்பதும் அதற்காகத்தான். அந்த மாதிரி செய்யலாமே தவிர ஜாதித்துவத்தை அதிகமாக வளர்க்கக்கூடாது. இது உணர்ந்து செய்ய வேண்டிய ஒன்று. இதற்கு சட்டம் கொண்டு வர முடியாது.

இந்த ஜேப்படி திருட்டைப் பொறுத்தவரையில் நான் குறிப் பிட்ட படி நடந்த வழக்குகள் என்று பார்ப்போமானால் 1984-ல் கோவையைப் பொறுத்தவரையில் 252 வழக்குகள் நடைபெற்ற திலே 206 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1985-ல் 208 வழக்குகள் நடைபெற்றன. அதில் 186 வழக்குகள் கண்டுபிடிக்கப் கப்பட்டன. 1986-ல் 139 வழக்குகள் நடந்தன. அதில் 101 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1987-ல் இந்த 2, 3 மாதத்தில் 37 வழக்குகள் நடந்தன. அதிலே 23 வழக்குகள் கண்டுபிடிக்கப் பட்டன.

குண்டர்கள் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் 1984-ல் 16 பேர், 1985-ல் 51 பேர், 1986-ல் 24 பேர்.

அதேபோல் சென்னையைப் பொறுத்தவரையில் 1984-ல் 336 வழக்குகள் நடந்தன. அதில் 273 வழக்குகள் கண்டுபிடிக்கப் பட்டன. குண்டர்கள் சட்டத்திலே 63 பேர் கைது செய்யப் பட்டு இருக்கிறார்கள். 1985-ல் நடந்த வழக்குகள் 265. அதில் கண்டுபிடிக்கப்பட்டன 204. குண்டர்கள் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்கள் 29 பேர். 1986-ல் நடந்த வழக்குகள் 313,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

அதில் கண்டுபிடிக்கப்பட்டது 246, குண்டர்கள் சட்டத்திலே கைது செய்யப்பட்டவர்கள் 37 பேர். 1987-ல் இதுவரையில் நடைபெற்ற வழக்குகள் 40, அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 7. இதை கொஞ்சம் இன்னும் தீவிரமாக நடத்த வேண்டும். இப்போது பஸ்களில் மற்றவைகளில் இது கொஞ்சம் அதிகமாகி இருக்கிறது என்ற குறிப்புகள் வந்திருக்கின்றன. இதுபற்றி காவல்துறையினருக்கும் சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்களின் கூற்றுகளுக்கு மதிப்பு அளித்து அது காவல் துறையால் கவனிக்கப்படும் என்பதையும் நான் இந்த வாய்ப்பில் எடுத்து கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் போன்றவைகள் என்பதில் கூட ஓரளவுக்கு நாளுக்கு நாள் அதனுடைய தன்மை களையும், கண்டுபிடிப்பதில் இருக்கிற தன்மைகளையும் நாம் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறோம். ஆனால் இதில் இன்னும் ஒன்றை நாம் கவனிக்கவேண்டும். சமூகவிரோதிகள், கொள்ளை அடிப்பவர்கள், திருடர்கள், இந்த ஜாதியத்தை தாண்டிவிட்டு அதன் மூலம் லாபம் பெற விரும்புகிறவர்கள், இவர்கள் மேல் எல்லாம் மிகவும் கடுமையாக காவல்துறையினர் வழக்கு தொடுத்து நீதி மன்றத்தில் கொண்டு போய் நிறுத்தினாலும் கூட, இதிலே நீதிமன்றத்திலே உரிய தண்டனை வழங்குகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும். சில உறுப்பினர்கள் கூட இங்கே குறிப்பிட்டுக் கூறினார்கள். நீதிமன்றத்திற்கு எப்போதும் தலை வணங்கத் தயாராக இருக்கிறோம். தலைவணங்குவோம். நீதிமன்றத்தினுடைய தீர்ப்பைத்தான் நாம் இறுதியாக ஏற்றுக் கொள்கிறோம். நீதிபதியினுடைய தீர்ப்புகளுக்குத் தலைவணங் கத் தயாராக இருக்கிறோம். ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் 'கோர்ட் ஆஃப் லா' என்று இருந்தாலும், சட்டப்படி இருப்பது தான் கோர்ட் ஆஃப் லா. ஆனால் அங்கே உட்கார்ந்து இருப்பவர்களுக்கு 'ஜஸ்டிஸ்' என்று தான் பெயர் கொடுக்கிறோம். கோர்ட்டிற்குப் பெயர் தான் லா கோர்ட், சட்டம் என்று சொல் கிறோமே தவிர, தீர்ப்பு அளிப்பவர்களுக்கு 'ஜஸ்டிஸ்' என்று தான் பெயர். அப்படி வழங்குகிறபோது, சமுதாயத்தையும் கருத்திலே வைத்துக்கொண்டு, அந்தத் தீர்ப்பை வழங்குகின்ற போது. கஷ்டப்பட்டு போலீசார் சமுதாயத்தில் கேடு விளைவிக் கின்ற சில கேஸ்களைக் கொண்டுபோனாலும், வெகு சுலபத்திலே —மாண்புமிகு ரமணி அவர்கள் சொன்னார்கள். கொலை செய்



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தார்கள் என்பதற்கு 7 பேர்களுக்கு தூக்கு தண்டனை விதிக்கப் பட்ட ஒன்று மேல கோர்ட்டிற்கு வந்து அந்த 7 பேரும் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று சொன்னார்கள். எங்கோ கடுகளவு, எள் அளவு, சட்டத்திலே ஓட்டை, இடுக்கு இருக்கிறது என்பதற்கு, சமுதாயத்தைக் கவனிக்காமல், சமுதாயத்தினுடைய நிலைமைகளை கவனிக்காமல், இப்படிப்பட்ட மோசடிக்காரர் களையும், சமுதாயத்தை கெடுப்பவர்களையும் களை போல் பிடுங்கவேண்டுமென்று வள்ளுவர் கூறியது போல் செய்யாமல், அப்படிப்பட்டவர்களுக்கு தூக்கு தண்டனையை ஒரு நீதிபதியே தருகிறபோது, மேலே இருக்கிறவர்கள் விடுதலை செய்துவிடு கிறார்கள் என்கிறபோது சமுதாயத்தில் சிலபல கேடுகள் ஏற்படுகின்றன.

நீதிபதிகளுக்கும், நீதிமன்றங்களுக்கும் தலை வணங்குகிறோம் என்றாலும்கூட, சமுதாய நீதி, பொருளாதார நீதி, அரசியல் நீதி, காலத்திற்கேற்றபடி அவர்களும் உணர்ந்து, அத்தகைய நீதியை வழங்குவார்களேயானால், இப்போது கூட, அமெரிக்க நீதிபதிகள் மகாநாட்டிலேயும் சரி, இங்கிலாந்திலே நடைபெற்ற நீதிபதிகள் மகாநாட்டிலேயும் சரி, உள்ளபடியே சட்டத்தை மட்டுமே அங்கே கவனிக்கக கூடாது. சமுதாயத்தி னுடைய அமைப்பு, சமுதாயத்தினுடைய சூழ்நிலை, அவர்கள் செய்த தன்மை, அவர்களால் சமுதாயத்திற்குக் கேடா அல்லது நல்லதா என்று பார்த்து தீர்ப்பு அளிக்கவேண்டி இதையும் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். வள்ளுவர் மிக அழகாகச் சொன்னார்கள். நீதி, சட்டத்தோடு அறமும் மிக்க என்று சேர்க்கப்படவேண்டுமென்று சொன்னார்கள். அறத் தோடு சேர்த்துத்தான் நீதி வழங்கவேண்டுமென்பதை அமெரிக்கா வினுடைய மிகச் சிறந்த முன்னாள் நீதிபதி அவர்கள் அதே கருத்தை மறுபடியும் வலியுறுத்தி இருக்கிறார்கள். அறமும் சேரவேண்டும். சமுதாய நீதியை அத்தோடு சேர்த்தால் தான் நல்லது. அதையும் அவர்கள் உணர்ந்து செய்தால்தான் மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற பல குற்றச்சாட்டுகளுக்கு இடமே இல்லாத அளவிற்குக் கூட ஆகிவிடக்கூடும்.

இங்கே பல வழக்குகளை எடுத்துச்சொல்ல எனக்கு நேரமில்லை என்றாலும் கூட, 24 மணி நேரத்தில் கூட, காவல்துறையைச் சார்ந்தவர்கள் மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்று சில பல வழக்குகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை. சிலபல வழக்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம், மிகத் திறமையாக கண்டுபிடிக்கின்ற அளவிற்கு அகில இந்திய காவல் துறையினுடைய அறிவியல் நுட்பம் அல்லது அறிவியல் தொழில் நுட்பம் ஆகியவற்றிலே தமிழகக் காவல் துறையினர் சிறந்த பரிசுகள், தங்கப் பதக்கங்கள், மற்றவைகளைத் தொடர்ந்து பெறுகின்ற வாய்ப்பினைத்தான் பெற்றிருக்கிறார்கள். இன்றைக்கும் வெளிநாட்டிலேயிருந்து வந்தவர்கள் கூட, The bes. Police is the T..mil N..du Police என்ற பெயரை, அவர்கள் சொன்னது மாதிரி, அந்தக் காலத் திலிருந்து பெற்று வருகிறோம். அது இன்னும் சிறப்பாக இருக்கவேண்டுமென்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்கவேண்டுமென்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். அந்த அளவிற்கு வருகின்றபோது இவற்றையெல்லாம் பயன்படுத்தி, நிருபர்கள் எல்லாம்கூட ஓரள விற்கு ஒத்துக்கொள்ளவேண்டும். கேசைக் கண்டுபிடிக்கும் போது தடயங்கள் எப்படி வந்தன என்பதைப் பத்திரிகையிலே போடாமல் இருந்தால் நல்லது நான் கூட காவல் துறையின ருக்குச் சொன்னேன். இப்படி இப்படி கண்டுபிடித்தார்கள் என்று போடக் கூடாது. தடயத்தின் மூலம் கண்டுபிடித்தார்கள் என்று மட்டும் போடுங்கள். கண்டுபிடிக்கப்பட்டார்கள் என்பதை மட்டும் போடுங்கள் என்று சொன்னேன். இப்படி இப்படி கண்டுபிடித்தார்கள் என்றவுடனேயே திருடன் எப்படி எப்படி என்று எடுத்துக் கொள்கிறான், அடுத்த முறை திருடுவதற்கு அப்படி அப்படி பார்த்துக் கொள்வதற்காக. ஆக அதன் மூலம் எடுக்கும்போது, கை ரேகை எடுக்கிறார்கள், கை ரேகை மூலம் காட்டிக் கொடுக்கப்பட்டது, எதையும் கண்டுபிடிக்காமல் இருந்ததை கை ரேகை மூலம் கண்டுபிடித்தார்கள், கை ரேகையை வைத்து இன்னார் தான் என்று கண்டு பிடித்தார்கள் என்றவுடனே, உறையை மாட்டிக் கொள்கிறான். அதன் பிறகு உறையை மாட்டிக் கொண்டு திருட ஆரம்பித்து விட்டார்கள், இப்போதெல்லாம். ஆக இதெல்லாம் அவர்களுக்கு 'க்ளு' ஆக வந்துவிட்டன. ஆக வழக்குகளை எல்லாம் போடுங்கள். ஆனால் தடயம் கண்டுபிடிக்கும் விதத்தை மட்டும் போடாமல் விட்டார்களேயானால், சமுதாயத்தினருக்கு நலம். நான் காவல்துறையினரிடம் கூடச் சொன்னேன்; இத்தகைய



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

...என்று சொல்லா ...யங்கள் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டன என்று ...ர்கள் என்று. தடயங்களின் மூலம் கண்டுபிடித்தோம் என்று மட்டும் பொதுவாகச் சொல்லுங்கள். பத்திரிகையிலும் பொது ...வாக வந்தால் நல்லது. ஆனால் தடயங்களுடைய முறைகளை வெளியிட்டால், அதற்கான வழிவகைகளை கண்டுபிடித்து விடுவார்கள். அதன் மூலமாக சில பல வழக்குமன்றத்திலே போய், வீணாகி விடுகின்றன. திருட்டு நடந்த 24 மணி நேரத்திற் குள்ளாக அவைகள் கண்டுபிடிக்கப்பட்டு, கொலையாளிகள் கண்டு பிடிக்கப்பட்டு, பொன் நகைகள் மற்றும் இலட்சக்கணக்கான ரூபாய்கள் கண்டுபிடிக்கப்பட்ட விவரங்கள் எல்லாம் நிறைய இருக் கின்றன. ஒவ்வொன்றையும் படிக்க எனக்கு நேரம் இல்லை.

(பிற்பகல் 1-00)

ரூ. 1,60,000 மதிப்பு உள்ள 11 டெக்குகள் மற்றும் 100 வீடியோக் கள், 39,000 ரூபாய் மதிப்பு உள்ள 3 வீ.சி. ரெக்கார்டுகள், 3,000 ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்கள், 40,000 ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்கள், 65,000 ரூபாய் பெறுமானம் உள்ள பொருள்கள், 3,00,000 ரூபாய் பெறுமானம் உள்ள தங்க நகைகள் இவைகளையெல்லாம் 24 மணி நேரத்திற்குள்ளாக கைப்பற்ற முடிந்தது. இப்படி பல வழக்குகள் கிட்டத்தட்ட 24 வழக்குகள் 24 மணி நேரத்திற்குள் முக்கியமான இடத்தை குறிப்பிட்டுச் சொல்ல எனக்கு நேரம் இல்லாததால் இவைகளையெல்லாம் விடுகின்றேன், அப்படிப்பட்ட வழக்குகள் எல்லாம் கூட காவல் துறையினால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நீண்ட நாட்க ளாக துப்பு துலங்காமல் இருந்து, ஆனால் அவை சரியாக வைத்திருந்து, ஒரு தடயம் கண்டுபிடிக்கப்பட்டதற்கு பிறகு, அந்த தடயத்தின் மூலமாக கண்டுபிடித்து, சில பல மாதங்கள் ஆனாலும், ஆண்டுகள் ஆனாலும், கண்டுபிடித்து, வழக்கு தொடுத்து, அப்படி தண்டனை கொடுக்கப்பட்டது கூட 15, 20 வழக்குகள் இருக்கின்றன. அதையும் கூட நாம் நன்றாக காண லாம். தடயம் கிடைத்து கண்டுபிடிக்கும் நிலையில் உள்ள சில முக்கியமான வழக்குகளும் இங்கே குறிப்பிடப்பட்டிருக் கின்றன. இவற்றிற்கெல்லாம் துப்பறியும் நாய்கள் கூட பயன்பட்டு வருகின்றன. நம்மிடத்தில் 23 நாய்கள் இருக்கின்றன. ...வற்றில் 22 நாய்கள் இப்படி பயன்பட்டு வருகின்றன. சென்னை, மதுரை, திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் வைத்திருக்கிறோம்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

வேறு பல முக்கியமான நகரங்களில் கூட நாம் வைத்திருக் கிறோம். அவைகள் நமக்கு எந்த அளவிற்கு உதவி செய்திருக் கின்றன என்றால், 628 வழக்குகளிலே 221 வழக்குகளுக்கு நாய் படைகள் நமக்கு உதவி செய்ததன் காரணமாக அந்த உண்மை யான குற்றவாளிகளை கண்டுபிடித்து மேற்கொண்டு விசாரணை செய்து அவர்கள் மீது தண்டனை அளிப்பதற்கு பேருதவியாக இருந்திருக்கிறது. இதை விரிவாக்க வேண்டும் என்ற எண்ணம் கூட மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கிறது. அதைப் பற்றி அவர்கள் சிந்திக்கவும் இருக்கிறார்கள்.

இந்த துப்பாக்கிச் சூடுகளைப் பற்றி சொன்னார்கள். ஆக கூடு மானவரையில் இந்த துப்பாக்கிச் சூடுகள் நடைபெறாமல் தவிர்க்க வேண்டும் என்பதுதான் எண்ணம். துப்பாக்கிச் சூடுகள் நடத்து வதால் அரசுக்கும் மகிழ்ச்சி இல்லை, காவல் துறையினருக்கும் மகிழ்ச்சி இல்லை, மக்களுக்கும் மகிழ்ச்சி இல்லை. கூடுமான வரையில் அது தவிர்க்கப்பட வேண்டும். கடைசி ரிசார்ட்டாகத் தான் அதை வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே கூடுமான வரையில் வேறு பல முறைகளை எல்லாம் கையாண்டு அல்லது கலவரமோ வேறு பல சூழ்நிலைகளோ ஏற்படும்போது காவல் துறையினருக்கே உள்ள அந்த முறைகளையெல்லாம் கையாண்டு பார்த்து முதலிலே அவர்களுக்கு எச்சரிக்கை விடுவது, தடியடி பிரயோகம் செய்வது, பிறகு பக்ஷாட் விடுவது அல்லது வான் நோக்கி சுடுவது, அதற்கு பிறகு சாதாரணமாக கால் நோக்கிச் சுடுவது, இப்படியெல்லாம் கையாண்டு கடைசியிலேதான் வேறு வழியில்லாமல் கட்டுக்கடங்காத சூழ்நிலை ஏற்பட்டு, உயிருக்கு ஆபத்து, உடைமைக்கு ஆபத்து, பொதுமக்களுடைய சொத்துக் களுக்கு ஆபத்து, அல்லது பொதுச்சொத்துக்களுக்கு ஆபத்து என்ற சூழ்நிலை ஏற்படும்போது துப்பாக்கிச் சூடு நடத்த வேண்டிய ஒரு அவசியம் ஏற்படுகிறது. அப்படி ஏற்பட்டதன் காரணமாக அது எவ்வளவுக்கெவ்வளவு குறைய வேண்டும், குறைக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் கூட 1986 ஆம் ஆண்டு 26 இடங்களிலே அந்த நிலைமை ஏற்பட்டது என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டினார்கள். அந்த வகையிலே நாம் காண்கின்றபோது அது எல்லா இடங்களிலும்கூட உண்டு. எவ்வளவு சாமர்த்தியம் இருந்தாலும் கூட, அதை கூடுமான



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வரையில் தடுத்தாலும் கூட, நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும், எதிரில் இருப்பவர்களும், சமுதாயத்தில் இருப்பவர் களும் நமக்கு ஒத்துழைக்க வேண்டும். சமுதாயத்தில் இருக் கின்றவர்கள் ஒத்துழைக்காவிட்டாலும் கூட எதிரிகள் இருக்க வேண்டும். நாம் காரை எவ்வளவு ஜாக்கிரதையாக ஓட்டிக் கொண்டு போனாலும், நம்முடைய டிரைவர் எவ்வளவு ஜாக்கிரதை யாக இருந்தாலும் எதிரிலே வருபவன் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ரோடிலே வரும் எருமை மாடும், கழுதையும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். மற்றவைகளும் ஜாக்கிரதை யாக இருக்க வேண்டும். நம்முடைய கையிலே முழுக்க இல்லை. ஆகவே இது சமுதாயத்தில் இருக்கின்றவர்களுடைய சூழ்நிலை யையும் பொறுத்தது. அந்த வகையிலே பார்த்தால் ஒன்றே ஒன்றை நான் குறிப்பிட்டுக் காட்டுகின்றேன். மேற்கு வங்கா ளத்தை ஆளுகின்ற ஜோதிபாசு அவர்கள் எனக்கு நெருங்கிய நண்பர்தான். திறமைசாலி. நீண்டகாலமாக ஆட்சி பீடத்திலே இருந்து ஆளுகின்றவர்தான். உள்ளபடியே கண்டிப்பாக ஆளு கின்ற தன்மையைப் பெற்றவர்தான். ஆகவே நல்ல அனுபவம் பெற்றவர்தான். சிறந்த முறையிலே ஆளுகின்ற தன்மையைப் பெற்றவர்தான். எதற்காக நான் சொல்கிறேன் என்றால், நான் ஒரு குற்றச்சாட்டாக சொல்லவரவில்லை, சிலபல சூழ் நிலைகளில் அதைத்தவிர வேறு வழியில்லை. எந்த ஆட்சியை எடுத்தாலும் தவிர்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது என்பதற்காகத்தான் அதை குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன். அவர்களுடைய சென்ற ஆண்டு போலீஸ் மானிய கோரிக்கை யின் போது உரையை உங்களுக்கு படித்துக் காண்பிக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அவரே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவருடைய உரையில் இங்கே சொல்கிறபோது, “The number of instances in which the Police used fire-arms during 1985 was 60 while in 1984 it was 105,” என்று சொல்லியிருக்கிறார். 1984-இலே 105 துப்பாக்கிச் சூடு நடத்தவேண்டிய அவசியம் வந்தது. திறமைசாலிதான். நன்றாக நிர்வகிக்கின்ற தன்மையுடையவர்தான். இருந்தாலும் வேறு வழியில்லாத அளவுக்கு சூழ்நிலைகள் ஏற்பட்டு விடுகின்றன. அதிலே கூட ஜார்க்காபூரிலே நடந்தது, ஒரு யுனிவர்சிட்டியிலே, ஒரு கோர்ட்டிலே இந்த மாதிரி ஃபயரிங் நடத்த வேண்டிய

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

அவசியம் வந்தது என்று சொல்லிவிட்டு, கடைசியிலே அவர் சொல்கிறபோது,

'I wish to reiterate the need to contain and difuse disruptive forces operating in the country'

ஆக, அது மட்டுமல்லாமல், நாடு முழுவதிலும் பரவி இருக்கிற பல்வேறு தன்மைகள், வேறு பல சூழ்நிலைகளின் மூலமாக ஒவ்வொரு மாநிலதத்தையும் கெடுக்கின்றன என்று சொல்லிவிட்டு கடைசியிலே சொல்கிறார் :—

" It is not an easy task. While it is necessary to maintain the high level of intelligence and efficiency of the Police Machinery, responsible support and co-operation from the various sections of the people and of political, social and religious leadership is essential to thwart the machinations of anti-national, anti-social disrup ive and fundamentalist forces."

என்று ஜோதிபாசு அனுபவத்தினுடைய அடிப்படையில் தெளிவு படச் சொல்லியிருக்கிறார்.

காவல்துறையினர் எவ்வளவு திறமையாக, எவ்வளவு இருந் தாலும்கூட, நாட்டிலே இருக்கிற அரசியல்வாதிகள், சமுதாய வாதிகள், மதத் தலைவர்கள், மற்றவர்களுடைய முழு ஒத்துழைப்பு இருந்து, ஆன்டி சோஷியல், ஆன்டி-நேஷனல்—தேச விரோத, சமூக விரோத சக்திகளை அடக்குவதற்கு அவர்கள் ஒத்துழைக் காவிட்டால் இப்படிப்பட்ட விளைவுகள் ஏற்படத்தான் செய்யும் என்பதை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலை நமக்கு மட்டுமல்ல; பெரிய, பெரிய நாடு களில் எல்லாம்கூட, இருக்கிறது. அமெரிக்காவிலே நிறைய இருக் கிறது. மிக, மிகக் கட்டுப்பாடான ரஷ்யாவிலேகூட, உள்ளபடியே கட்டுப்பாடு, டிசிப்ளின் இவைகளுக்கு எல்லாம் பெயர் போன மிகச் சிறந்த முறையிலே உருவாக்கி, கட்டுப்பாடு குலையாத அளவுக்கு நிர்வாகத்தை வைத்து முறைப்படுத்தி, வகைப்படுத்தி வருகின்ற ரஷ்யாவிலேகூட காவல்துறை மூலமாக நடத்துகின்ற முறைகளிலே வந்ததைப் பற்றி 24-4-1987 அன்று பத்திரிகை யிலே வந்த செய்தி—ரஷ்யாவிலே குற்றங்களின் நிலவரம் பற்றி சோவியத் உள்துறை மந்திரி அலெக்ஸி விளாஸோ பத்திரிகை யிலே தந்திருக்கிற செய்தியிலே சொல்லியிருக்கிறபோது சொல்லி யிருக்கிறார்கள்—" அந்நாட்டின் முக்கால்வாசிக் கொலைகள்



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வீட்டுக்குள்ளேயே நின்று விடுகின்றன, நிகழ்கின்றன. நண்பர்கள் கூடி, மிதமிஞ்சிக் குடிக்கும்போது வாக்குவாதம் ஏற்பட்டு, கத்திக் குத்திலேயும், கொலையிலேயும் முடிகின்றன."

குற்றம் செய்பவர்கள் எல்லோருமே குடிகாரர்கள். 1985-இல் மதுபான உபயோகத்தினை சர்க்கார் பெரிதும் கட்டுப்படுத்திய தால் கொலைகளின் எண்ணிக்கை 21.7 சதவிகிதம் குறைந்தது. ஆகவே, அந்த மதுபானம் அளவுக்கு மீறிப் போனதாலே, அந்தக் கொலைகளுக்கு அதுதான் காரணம் என்று கண்டுபிடித்ததனாலே அது ஒப்பனாக நடைபெறுவதை விட, ஒரு கட்டிடத்திற் குள்ளேயே, வீட்டுக்குள்ளேயே அதிகம் நடப்பதனாலே அதைத் தடுக்கவேண்டும் என்று கட்டுப்படுத்தினார்கள். அதனால் 21.7 சதவிகிதம் குறைந்தது என்று சொல்லி, அதனால் என்ன ஏற்பட்டது என்றால்—மாண்புமிகு சித்தன் அவர்கள் சொல்வது மாதிரி அவ்வளவு கட்டுப்பாடான நாடாக இருந்தாலும் அவர்களே சொல்கிறார்கள்—கள்ளச்சாராயம் காய்ச்சுவது பெரிதும் அதிகரித்து விட்டது. 1986 இல் 9 இலட்சம் கள்ளச்சாராய சாதனங்கள் பிடிக்கப்பட்டன. போலீஸ் துறையைச் சீர்திருத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

ஏன் என்றால், அங்கேயே அப்படியிருந்தால், இங்கே என்ன ஆகும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதை நான் ஆதரிக்கிறேன் என்று அர்த்தம் அல்ல. கஷ்டம் என்பதற்காகத் தான் நான் சொல்கிறேன். அப்படி ஒரு கடுமையான தன்மை வந்து, சமுதாயத்தை சீர்திருத்த, சட்டத்தால் போகும்போது, இந்தச் சமுதாயத்தில் இருப்பவர்களுடைய மனப்பான்மை எப்படிப் போகிறது? அப்படிப்பட்ட கட்டுப்பாடான, ஒரு டிசிப்ளின்ட் கன்ட்ரியிலேயே அப்படி வருகிறபோது, இங்கே சமுதாயத்தினுடைய ஒத்துழைப்பு இல்லாமல், சமுதாயத்திலுள்ள நல்லவர்கள், மற்றவர்களுடைய முழு ஒத்துழைப்பு இல்லாமல் இப்படிப்பட்ட காரியங்களை எல்லாம் நாம் திறமையாக, செம்மை யாகச் செய்ய முடியாது என்பதற்காகத் தான் இவற்றையெல்லாம் குறிப்பிடுகிறேன்.

ஆகவே, இதற்கு எல்லோருடைய ஒத்துழைப்பையும் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்யவேண்டும். அதேமாதிரி ஜோதிபாசு கூட இங்கே சொல்லியிருக்கிறார்—" தவறு செய்கிற

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

போலீஸ் அதிகாரிகள் மற்றவர்களை எல்லாம் அப்போதைக்கப் போது வேலையை விட்டு நீக்கி—

"Departmental proceedings were instituted against 590 Policemen of different ranks." இதுமாதிரி தவறு செய்தவர்கள்,

"During the period, 302 Policemen were punished which included 17 who were dismissed and 13 discharged from service,"

என்று அங்கும் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். போலீஸ் துறையிலே தவறிழைத்து, முறை தவறி நடந்தவர்கள்—இங்கும் தவறு இழைத்தவர்கள், மற்றவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள வகையிலேகூட, 1986 ஆம் ஆண்டு 6 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 1-10)

சம்பள இறக்கம் செய்யப்பட்டவர்கள் 20 பேர். தண்டனை பெற்றவர்கள் 7 பேர். தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்ட வர்கள் 56 பேர். ஆக மொத்தம் 89 பேருக்கு தண்டனை அளிக் கப்பட்டிருக்கிறது. லஞ்ச ஊழல் குற்றத்திற்காகக் கடந்த 3 ஆண்டுகளில் 3 துணைக் கண்காணிப்பாளர்கள் தண்டிக்கப்பட்டி ருக்கிறார்கள். நால்வர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டி ருக்கிறார்கள். இப்படி 1,300 பேர் எல்லாத் தரப்பினரும்— கான்ஸ்டேபிள்கள் வரை தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள், பணி இறக்கம் செய்யப்பட்டவர்கள், வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் என்று 1,300 பேர், 1,350 பேர், 1,300 பேர் என்று 4 அல்லது 5 ஆண்டுக்காலமாக உள்ள கணக்கை சென்ற ஆண்டேகூட நான் கொடுத்தேன். அந்த வகையில்தான் நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறோம். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லுகிற மாதிரி சில பல நேரங்களில் சில பல இடங்களில் அவர்கள் அத்துமீறுகிற போது நடவடிக்கை எடுக்கத்தான் வேண்டியிருக்கிறது. சில பல இடங்களில் மக்களுக்கு விரோதமாக நடக்கிறவர்கள் இருக்கிறார் கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதைப்போல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம் என்பதைத்தான் இது தெளிவாகக் காட்டுகிறது.



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

1982 ஆம் ஆண்டில் மட்டும் பணியிலிருந்து தள்ளப்பட்டவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள், பதவி இறக்கம் செய்யப்பட்ட வர்கள், தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள், ஊதியக் குறைப்பு செய்யப்பட்டவர்கள், ஊதிய உயர்வு தள்ளி வைக்கப் பட்டவர்கள், சென்ஷார்ஸ் கொடுக்கப்பட்டவர்கள், ரிப்ரிமேண்டு செய்யப்பட்டவர்கள், கருப்புப்புள்ளி வழங்கப்பட்டவர்கள், கட்டாய ஓய்வு தரப்பட்டவர்கள் என்று எல்லோருமாகச் சேர்ந்து தமிழகத்தில் மொத்தம் 3,608 பேர். 1983 ஆம் ஆண்டில் 3,420 பேர் எல்லா ரேங்க்குகளிலும் சேர்ந்து. 1984 ஆம் ஆண்டில் 3,396 பேர். 1985 ஆம் ஆண்டில் 3,816 பேர். 1986 ஆம் ஆண்டில் 3,500-க்கு மேல் என்ற அளவுக்குத்தான் இருக்கிறது. இப்படிப் பட்ட சூழ்நிலை வளருகிற நிலைமை இருப்பதால் இதில் இன்னும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறுவதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இப்படிப் பட்ட கோப்புகள் எது சென்றாலும், தவறு இழைக்கிறார்கள் அல்லது சமுதாயத்திற்கு கேடுவிளைவிக்கிறார்கள் என்று சொன்ன உடனே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதில் உன்னிப்பாக இருக்கிறார்கள்.

அதைப் போலவே குண்டுகள் வைப்பதைப்பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டுப் பேசினார்கள். குண்டுகள் வைக்கிற தன்மையைப் பொறுத்த வரையில் காவல் துறையினர்— மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்களும் மற்றவர்களும் குறிப்பிட்டுக் காட்டிய மாதிரி—விரைவாகக் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து வருகிறார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பது என்பது மிகச் சிரமமான காரியம். குண்டுவைத்து ரொம்ப நேரமான பிறகுதான் தெரிய வருகிறது. எனவே யார் வைத் தார்கள் என்று கண்டுபிடிப்பது சிரமமான காரியம். தடயங் களைக் கொண்டு கண்டுபிடிப்பது என்பதும் கஷ்டமான காரியம். அப்படிக் கண்டுபிடிக்கப்பட்டதுதான் மருதையாற்றுப் பாலத்தில் வைக்கப்பட்ட வெடிகுண்டு சம்பவம். அந்தப் பாலத்தில் குண்டு வைத்திருப்பதைக் கண்டுபிடித்து, யார் வைத்தார்கள் என்று கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. 15—3—1987 அன்று காலை 4-45 மணி அளவில் மருதையாற்றுப் பாலத்தில் குண்டு வெடித்து விபத்து ஏற்பட்டது. அதனால் 26 பயணிகள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

இறந்தனர். 150-க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். அதிலே கூட 4 பேர், தமிழரசன், ஜெகன்னாதன், மணிநாதன், பச்சைப்பிள்ளை மற்றும் இராமசாமி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். சிலர் இன்னும் தேடப்பட்டு வருகிறார்கள். அது புலன் விசாரணையில் உள்ளது. அவர்கள்மீது விரைவில் சார்ஜ் ஷீட் போடப்படுகிற நிலைமை வரும். இதுபோன்று, கிட்டத்தட்ட 15, 16 இடங்களில் வெடிகுண்டு வைத்தவர்களைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். சில இடங்களில் புலன் விசாரணை நடக்கிறது. சில இடங்களில் புலன் விசாரணை நடந்து முடிந்து குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்டிருக்கிறது. சில இடங்களில் வழக்கும் தொடரப்பட்டிருக்கிறது. அதையெல்லாம் மிகச் சீக்கிரமாகத்தான் கண்டுபிடித்திருக்கிறார்கள். சில இடங்களில் கண்டு பிடிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்து மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் இராஜபாளையம் சம்பவத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். அந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரையில் 18—4—1987 அன்று மாலை காமராஜர் மாவட்டத்தில் உள்ள இராஜபாளையத்தில் வாடகை சைக்கிள் கடையில் வாடகை சைக்கிள் எடுக்கும்போது ஏற்பட்ட வாய்த் தகராறு ஒன்றைத் தொடர்ந்து அந்த வட்டாரத்தில் சில அசம்பாவிதங்களும் சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகளும் ஏற்பட்டுவிட்டன. இச்சம்பவத்தையொட்டி இங்குமங்குமாக தோட்டங்களிலும், வயல் வெளிகளிலும் ஊருக்கு அப்பாற்பட்ட பகுதிகளிலுமாக 10 பேர் மொத்தமாகக் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இதில் பலர் காயமுற்று மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். காயமுற்றவர்களில் சிலர் மருத்துவச் சிகிச்சைக்குப் பிறகு வீடு திரும்பியிருக்கின்றனர். காவல் துறையினரின் தக்க நடவடிக்கையால் இந்த அசம்பாவிதம் மற்ற இடங்களில் பரவாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. மாநில காவல் துறைத் தலைவர் (சட்டம்—ஒழுங்கு) இராஜபாளையத்திற்கு விரைந்து சென்று 4 நாட்கள் அங்கே முகாமிட்டு பாதுகாப்பை ஏற்பாடு செய்தார்.

இந்த நிலைமை வந்த உடனே இதில் ஏற்பட்ட சங்கடம் என்னவென்றால் ஆரம்பத்தில் ஏற்பட்ட சில தகராறுகள்தான் இதற்கு மூல காரணம். இதன் காரணமாக 75 நாடார் இனத்தைச் சேர்ந்



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சேர்ந்தவர்களும்
நாடார்களும் 61 ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களும் கு. எண் 99, 100, 103, 101/87-ல் 23—4—1987 அன்று கைது செய்யப்பட்டு 15 நாட்கள் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் அங்கே உடனடியாக அந்த மாவட்டத்தைச் சேர்ந்த கண்காணிப்பாளர் மட்டுமல்லாமல், மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த உயர்தர அதிகாரிகள் முகாமிட்டுள்ளார்கள். இதைப் பொறுத்த வரையில் ஏற்பட்டுள்ள தகராறு உண்டாகிய சாதிக் கலவரம் என்று முழுவதுமாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் நாடார்களுக்கும், ஆதி திராவிடர்களுக்கும் இந்த தகராறு இருந்திருக்கிறது. உள்ள பழைய இராமநாதபுரம், காமராஜர் மாவட்டங்களில் பத்துப் பன்னிரெண்டு ஆண்டுக்கால வரலாற்றைப் பார்த்தால் நாடார்களும், ஆதி திராவிடர்களும் சுமூகமான சமூகம், மாச்சரியமான சமூகம் அல்ல. ஒருவரையொருவர் தாக்குகிறவர்கள் அல்ல. வேறு இரண்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அப்படி இருந்திருக்கிறார்கள். அவர்கள் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் மாச்சரியமானவர்கள். இவர்களைப் பொறுத்த வரையில் மாச்சரியமானவர்கள் அல்ல. காவல் துறையினர் ஊரைக் காப்பாற்றினார்கள். கலவரம் நடந்த இடத்திலே ரோந்து வந்தார்கள். இரண்டு செட், ஒரு பக்கம் நூறு பேர், இன்னொரு பக்கம் 200 பேர் என்று இரண்டு செட்டாக இருந்திருப்பார்களேயானால் அல்லது பத்துப் பேர் கிளம்பி கத்தி, கம்பு வைத்துக்கொண்டு போனால் தடுத்திருக்கலாம். ஆனால் பத்துக் கொலை, ஊருக்கு ஐந்தாறு மைல்களுக்கு அப்பால் ஒரு தோட்டத்தில் தனிப்பட்டவர். தனிப்பட்டவரை தனிப்பட்ட இடத்தில் தனிப்பட்ட முறையில் கொலை என்று நடக்கும்போது காவல் துறையினர் முழுமையாக கண்காணிக்க முடியவில்லை. அங்கே நடைபெற்ற கொலை ஊருக்கு வெளியே தனிப்பட்ட இடத்திலே தனிப்பட்ட விரோதம் காரணமாக நடந்திருக்கிறது. சில இடங்களில் மாச்சரியம் காரணமாக ஒருவரையொருவர் கொலை செய்தால், மற்றொருவர் 'உன்னை விடலாமா' என்று அந்த மாச்சரியத்தின் காரணமாக கொலை நடந்திருக்கிறது. இப்படி நடந்திருப்பது வருந்தத்தக்க நிகழ்ச்சிதான். பத்து பேர் கொலை நடந்திருக்கக் கூடாது. அவசியமான ஒரு காரணமும் இல்லாமல், பத்து பேர் கொலை ஏற்பட்டது வருந்தத்தக்க ஒன்றுதான். இதிலே

செல்லையா என்ற சிங்கம், 60 வயது ஆதி திராவிடர் கொலை
செய்யப்பட்டிருக்கிறார். மருதகாளை என்ற 56 வயது ஆதி
திராவிடர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ராமன் என்ற 60
வயது உடைய ஆதி திராவிடர், செட்டியார்புரத்தைச் சேர்ந்தவர்,
அவரும் கொலை செய்யப்பட்டிருக்கிறார். மற்றும் மாரியப்ப
நாடார் 56 வயது, குருசாமி நாடார் 45 வயது, இராமர் நாடார்
42 வயது, வள்ளிமுத்து நாடார் 40 வயது ஆகியவர்களும் கொலை
செய்யப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர கதிர்வேலு என்ற 25
வயது உடைய மறவர், பாலுசாமி என்ற 38 வயது உடைய ஆதி
திராவிடர் கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த இரண்டும்
தனிப்பட்ட விரோதத்தால் ஏற்பட்ட கொலை. இந்தக்
கொலைக்கும், அந்தக் கொலைக்கும் சம்பந்தம் இல்லை. இதை
யும் சேர்த்து பத்து கொலை என்று சொல்லுகிறார்கள். என்றா
லும் கூட போதுமான அளவிற்கு பந்தோபஸ்து செய்யப்பட்டிருக்
கிறது. 5 துணை கண்காணிப்பாளர்கள், 19 ஆய்வாளர்கள், 35
சார்பு-ஆய்வாளர்கள், 20 தலைமைக் காவலர்கள், மற்றும் 150
காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். 25 பிரிவு
ஆயுதப்படை சுற்றுக் காவல் பணி செய்து கட்டுப்படுத்த தயார்
நிலையில் உள்ளது.

காமராஜர் மாவட்ட ஆட்சித் தலைவர் 27—4—1987 அன்று
ஒரு சர்வ கட்சி கூட்டத்தை நடத்தினார். இராஜபாளையம்
சட்டமன்ற உறுப்பினர், நகர்மன்றத் தலைவர் உள்பட பல்வேறு
கட்சிப் பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அதைத் தொடர்ந்து
இரு இனத்தைச் சேர்ந்த பிரமுகர்கள் கொண்ட அமைதிக் குழுக்
கூட்டம் நடத்தப்பட்டது. இதிலே இந்தக் கலவரம் இந்த இரு
சாதியைச் சேர்ந்தவர்களால் ஏற்பட்டதல்ல, சமூக விரோதச்
சக்திகள் தூண்டுதல் பேரில் ஏற்பட்டது என்றும், இத்தகைய
சமூக விரோதிகளைக் கண்டுபிடித்து காவல் துறை நடவடிக்கை
எடுக்க போலீஸ் ஒத்துழைப்புத் தரவும் முடிவு செய்யப்பட்டது.
20—4—1987 அன்று தலைமைச் செயலகத்தில் இது பற்றி
செயலாளர், மாநில காவல் துறை இயக்குநர், காவல் துறைத்
தலைவர் (சட்டம், ஒழுங்கு), மற்றும் பொதுத் துறை செயலாளர்
ஆகியவர்கள் இராஜபாளையத்தில் நடந்த வன்முறைச் சம்பவம்
குறித்து ஆய்வு செய்தார்கள். இதில் ஈடுபட்டவர்களை
குண்டர்கள் சட்டத்தின் கீழ் சிலரைக் கைது செய்ய முயற்சி





நடைபெறுகிறது. விரைவிலே குண்டர்கள் சட்டத்திலே கைது
செய்யப்படுவார்கள் என்பதை இந்த வாய்ப்பிலே தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-20)

வெள்ளக்கோவில் சம்பவத்தைப் பற்றிச் சொன்னார்கள்.
வெள்ளக்கோவில் சம்பவத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள்
பலபேர் இங்கே குறிப்பிட்டார்கள். 20—4—1987 அன்று மாலை
பெரியார் மாவட்டம், வெள்ளக்கோவில் வீரக்குமார் திடலில்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, அதன் தலைவர்
டாக்டர் கலைஞர் அவர்கள் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுவதாக
ஏற்பாடு இருந்தது. அன்று காலை 5 மணிக்கு திராவிட
முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சண்முகம் என்பவர், கலைஞர்
பேசுவதாக இருந்த மேடைக்கு தீ வைத்துவிட்டனர் என்றும்
குழல் விளக்குகள் சேதம் அடைந்துவிட்டன என்றும் வெள்ளக்
கோவில் காவல் நிலையத்தில் புகார் ஒன்று கொடுத்தார். உள்ள
படியே இப்படிப்பட்ட சம்பவங்கள் நடப்பது ஒரு துரதிருஷ்ட
வசமான ஒன்றுதான். அங்கே நடந்திருக்க வேண்டியதில்லை.
உள்ளபடியே பல்வேறு இடங்களிலே, பல்வேறு நகரங்களிலே
டாக்டர் கலைஞர் அவர்கள் பல பொதுக் கூட்டங்களில் பேசிக்
கொண்டு வருகிறார். ஆனால், இப்படிப்பட்ட சம்பவங்கள் வேறு
எங்கேயும் நடைபெற்றதில்லை. ஆனால் வெள்ளக்கோவிலில்
மட்டும் நடைபெற்றது தேவையற்ற, தேவையில்லாத ஒரு
சம்பவம். அங்கே சிலர் ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற உடனே,
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த செயலாளர் கம்ப்
ளெயின்ட் கொடுத்த உடனே, அதில் அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த சில பேர்கள்
ஈடுபட்டிருக்கிறார்கள் என்ற உடனே, அந்தப் புகார்மீது வெள்ளக்
கோவில் காவல் நிலைய குற்ற எண் 166/87, இ.த.ச. பிரிவுகள்
147, 148, 324, 427, 435, 256-ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு,
விசாரணை மேற்கொண்டு, அந்த வழக்குகள் சம்பந்தமாக
சோமசுந்தரம் என்ற சோமு, நடராசன், ரங்கநாதன் ஆகிய 3
பேர்கள் உடனே கைது செய்யப்பட்டனர். வடிவேலு, மணியன்,
முத்துசாமி, சுப்பிரமணி ஆகிய இன்னும் 4 பேர்கள் 26—4—1987-ல்
இதுசம்பந்தமாக கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 8 மணிக்கு,

வெள்ளக்கோவில் எம்.ஜி.ஆர். மன்ற செயலாளர் கிருஷ்ணகுமார் வெள்ளக்கோவிலில் முத்தார் ரோடில் இருந்த எம்.ஜி.ஆர். மன்றக் கொடிக் கம்பத்திற்கு யாரோ தீ வைத்து விட்டார்கள் என்று ஒரு கம்ப்ளெயின்ட் கொடுத்தார். அதையொட்டி, ஒரு புகார் பதிவு செய்யப்பட்டு, அது விசாரணையில் இருந்து வருகிறது. அன்று மாலையே இரண்டு சாராரும் ஊர்வலம் துவக்க முயன்றார்கள். அதையொட்டித்தான் 144 போடப்பட்டது. இரண்டு சாராரும் கூட்டம் நடத்த வேண்டாமென்றும், வேறொரு நாள் கூட்டம் போடலாம் என்றும் சொல்லப்பட்டது.

குமாரபாளையத்தில் தங்கி இருந்த கலைஞரிடம் கலெக்டர், உயர் அதிகாரிகளை வைத்து இன்றைக்கு பதட்ட நிலை இருப்பதால் வேறொரு நாளைக்கு வைத்துக்கொள்ளலாம். வேறொரு நாளை நாங்களே ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லப்பட்டது. இரண்டு பேரும் கூட்டம் போடுவதன் காரணமாக அனாவசியமாக ஒரு சம்பவம் ஏற்படும் என்பதால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கூட்டத்தை நிறுத்திவிட்டார்கள். டாக்டர் கலைஞர் இடத்தில் எடுத்துச் சொன்னார்கள். இருந்தாலும், கூட்டம் ஏற்பாடு செய்துவிட்டதால், நான் கூட்டத்தை நடத்துவேன், சட்டப்படி நீங்கள் என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்யுங்கள் என்று சொல்லியபிறகு, குமார பாளையத்திலிருந்து வெள்ளக்கோவிலுக்கு டாக்டர் கலைஞர் போய், அங்கே கூட்டத்தில் கலந்து கொண்ட பிறகு நடவடிக்கை எடுத்தால் அசம்பாவிதம் அதிகமாகும் என்பதால், குமாரபாளையத்திலே இருந்து நகர்ந்த உடனே, 144 இருப்பதன் காரணமாக, தடை விதித்திருப்பதன் காரணமாக, கலந்துகொள்ள வேண்டாமென்று சொல்லி, கைது செய்து, அன்று இரவே அவர்களை விட்டு விட்டார்கள். கூட்டத்தை நடத்த முயற்சி செய்த 17 பேரும் கைது செய்யப்பட்டு, அவர்களும் இரவு 11 மணிக்கு விடுதலை செய்யப்பட்டார்கள். வேறொரு நாள் வைத்துக்கொள்ளலாம் என்று சொல்லப்பட்டது. வேறொரு நாள் வைத்துக்கொள்ளலாம் என்ற சூழ்நிலையிலே, இனிமேல் தனித்தனியாக வைத்துக் கொள்ள முடியுமே தவிர, ஒரு கட்சிக்குத்தான் அனுமதி தருவார்களே தவிர, ஒரே நாளில் ஒரே நேரத்தில் ஒரே சமயத்தில் இரண்டு பேரும் வைக்கும் சூழ்நிலை இராது என்று இரண்டு கட்சியினருக்கும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.





அடுத்து, கே. மோகன்தாஸ் விவகாரம் பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அவரை பதவி நீக்கம் செய்யவில்லை. அவருடைய சம்பளம், பணிப் பாதுகாப்பு, மற்றவைகளோடு வேறொரு பதவிக்கு அவர் மாற்றப் பட்டார். அதைப்போல டி.ஜி.பி.யாக இருந்த திரு. ராதா கிருஷ்ணன் அவர்களுக்குக்கூட பொசிஷன் இறக்கப்பட்டது என்றல்ல. அதற்கு சரிசமமாக இருக்கும் வேறொரு பதவிக்கு அனுப்பப்பட்டார். அப்படித்தான் இவரும் அனுப்பி வைக்கப் பட்டார். அதற்குப் பிறகு பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்தன. உயர்நீதி மன்றத்திற்கு அவருடைய மனைவி போனார்கள். உயர்நீதி மன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்தார்கள். உயர்நீதி மன்றத்தில் வாதாடப்பட்டது. அங்கே தள்ளப்பட்டது. மறு படியும் தீர்ப்பாயத்திற்கு அவர்கள் அப்பீல் செய்தார்கள். அதற்குப் பிறகு வேலையில் வந்து சேருகிறேன் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு தனக்கு விடுமுறை வேண்டுமென்று கேட்டார்கள். அதற்கு பிறகு மருத்துவர் குழுவினுடைய சம்மதம் வேண்டுமென்று சொல்லப்பட்டது. அதற்குப் பிறகு எனக்கு வாலன்டரி ரிடையர்மென்ட் தாருங்கள் என்று சொன்னார்கள். வாலன்டரி ரிடையர்மென்ட் தர வேண்டுமென்றால் அதற்கு சிலபல விதிமுறைகள் எல்லாம் இருக்கின்றன. 3 மாத கால அவகாசம் தர வேண்டும். ஆகவே இப்போது கொடுத்திருக்கும் விண்ணப்பத்தில் விதிமுறைகளுக்கெல்லாம் உட்பட்டு

இருப்பதன் காரணமாக, அவர்கள் 3 மாத அவகாச அடிப்படையில், அதாவது 16—7—1987 முதல் பணியிலிருந்து ஓய்வு பெறுவதற்கு வழியிருக்கிறது. விதிமுறைகள் எல்லாம் இடம் தருவதன் காரணமாக அவர் வாலன்டரி ஓய்வு பெறுகிறார்கள். அதாவது தன்னிச்சையாக ஓய்வு பெறுகிறார்கள். அதற்கான காலம் பணியாற்றிய காலம் எல்லாம் இடம் தருகிறது. விதிமுறைகள் இடம் தருகின்றன. அதை எல்லாம் ஆராய்ந்து பார்த்ததற்குப் பிறகு தனக்கு தன்னிச்சையாக ஓய்வு பெறுவதற்கு கேட்டுக்கொண்டார்கள். விதிமுறைகள் இடம் தருவதன் காரணமாக மாண்புமிகு முதல்வர் அவர்களும் ஏற்றுக்கொண்டார்கள். ஆளுநர் அவர்களும் அதை ஏற்றுக்கொண்டார்கள்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

இரண்டொரு நாட்களில், இன்றோ அல்லது நாளையோ அதற் கான ஆணை பிறப்பிக்கப்படும். அவருடைய அந்த விருப்பத் திற்கு ஏற்ப நடக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதை இப்போது நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

காவல்துறைத் தேர்வைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். 1984 சென்னை நகரிலே, மாவட்டங் களிலே தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை விவரம் சென்னை நகரிலே 1,616, மாவட்டங்களிலே 2,728, மொத்தம் 3,944. 1984-ல் கா.சி.கா. தமிழ்நாடு சிறப்பு காவல் அணிகளில் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவி நியமனம் செய்யப்பட்ட வர்கள் எண்ணிக்கை 542. 1985-ல் சென்னை நகரம், மாவட்டங் களில் தேர்ந்தெடுக்கப்பட்டு பணி நியமனம் செய்யப்பட்டவர் களுடைய எண்ணிக்கை சென்னை நகரம் 1,825, மாவட்டங்களில் நியமனம் செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 5,181, மொத்தம் 7,006. 1985 தனி சிறப்பு காவல் அணிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட வர்களின் எண்ணிக்கை 2,615. ஆக 1984—85-ல் காவலர்களாக நியமிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்கை 13,907. ஆக காவலர்களைப் பொறுத்து, சேர்க்கப்பட வேண்டுமென்று தீர்மா யித்து மேலும் 9 ஆயிரம் சேர்க்கவேண்டும் என்று சொல்லி அது 13 ஆயிரத்து சில்லரை சேர்க்கப்பட்டிருக்கின்றது.

இந்த சப்-இன்ஸ்பெக்டர்களைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே அதைப் பற்றி சொல்லும்போது காலத் தாழ்வு ஏற்படுகிறது என்று சொன்னார்கள். ஏன் சேர்க்கப் படவில்லை என்ற பிரச்சினையை இங்கே கிளப்பினார்கள்.

1984-ல் அக்டோபர் மாதத்தில் சப்-இன்ஸ்பெக்டர்கள், ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள், சிறப்புக் காவல் சப்-இன்ஸ்பெக்டர்கள் ஆகிய மூன்று பதவிகளுக்கு மொத்தமாக ஒரே தேர்வு தொடங்கியது. 1985-ல் செப்டம்பரில் எழுத்துத் தேர்வு நடைபெற்றது. எழுத்துத் தேர்வில் 7,916 பேர்கள் பங்கு பெற்றனர். அவர்களில் 5,600 பேர்கள் தேர்ச்சி பெற்றனர். அந்த 5,600 பேர்களை நேர் காணல் தேர்வுக்கு அனுப்பினார்கள். நேர் காணல் தேர்வு 17—9—1986-ல் தொடங்கி 2—2—1987-ல் முடிக்கப்பட்டது. இன்றைய நிலவரப்படி இந்த மூன்று பதவிகளுக்கு சுமார் ஆயிரம் பேர்களை தேர்வு செய்ய உத்தேசம் செய்ய உள்ளது. இப்படி 3 பிரிவினரையும் தேர்ந்தெடுத்து பட்டியல் தயாரித்து இன்றைக்கு



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

மருத்துவ பரிசோதனை பாக்கி இருக்கிறது. அதை விரை விலே நடத்தி அவர்களுக்குப் பயிற்சி தருவதற்கு அரசு ஆயத்த மாக இருக்கிறது. இன்னும் இது இரண்டொரு திங்களில் நடை பெற்றுவிடும் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்பு கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் பேசும் போது இந்த கிச்சிபாளையம் காவல் நிலையத்தில் லாக்-அப்-ல் தெய்வமணி மரணம் பற்றி குறிப்பிட்டார்கள். சேலம் மாவட்டத் தில் கிச்சிபாளையம் காவல் நிலையத்தில் திருட்டு வழக்கு சம்பந்தமாக கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு, தெய்வமணி என்ற கொழுந்து என்னும் பெண் லாக் அப்-ல் 15—3—1983 அன்று மரணம் அடைந்தது குறித்து அமைக்கப் பட்ட நீதி விசாரணைக் குழு குற்றப் பிரிவு புலன் ஆய்வு துறையை புலன் விசாரணை மேற்கொள்ளப்பணித்தது. அந்த குற்றப் பிரிவு புலன் ஆய்வுத் துறையினர் தமது அறிக்கையில் இரு சார்பு ஆய்வாளர் உட்பட 5 காவல் துறையினர் மீது நடவடிக்கை எடுக்க அரசுக்கு அவர்கள் பரிந்துரை செய்தனர். இந்த ஐந்து காவல் துறையினர் 15—3—1983 லிருந்து தற்காலிக பணிநீக்கம் செய்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். துறையினரால் முறைப் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர். இந்த நடவடிக்கை முடிவுற்று இன்றைக்கு அவர்களுடைய தண்டனை என்ன என்பது நீதிபதி கூறியிருக்கிறபடி வழங்கப்படும். இப்போது தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருக் கின்றனர்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் போலீஸ் லாக் அப்-லே நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறித்து அது தற்கொலை யல்ல, அந்தப் பெண் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக் கிறார். குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அந்தக் கமிஷன் ரிப்போர்ட் கொடுத்து எறத்தாழ 2 ஆண்டு காலத்திற்கு மேல் ஆகிறது. சஸ்பெண்ட் செய்வது என்பது ஒரு சாதாரண அன்றாடம் நடைபெறுகிற ஒரு நடவடிக்கை. எனவே நடவடிக்கை என்று சொன்னால் அவர் மீது குறிப்பிட்ட அந்த வழக்கிலே இந்த சாட்சி கவுறு நடைபெற்று இருக்கின்றன என்று சொல்லி இரண்டு ஆண்டுக்

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 5

காலம் ஆகி டிப்பார்ட்மெண்ட் ஆக்ஷன் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது என்பதை உங்கள் மூலமாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். துறை நடவடிக்கை என்று சொல்வது 'மியர் சஸ்பென்ஷன்' அதற்குமேல் அவர்கள் மீது இன்னும் சொல்லப்போனால் அந்தக் குற்றம் நிரூபிக்கப்பட்டு இருக்குமானால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசாங்கம் உத்தேசம் வைத்திருக்கிறதா என்று விளக்கினால் எதிர்காலத்திலே தவறு நடக்காமல் இருக்கும்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, கழுத்திலே இறுக்கப்பட்ட காயம் இருக்கிறது. தூக்குக் காயமா அல்லது கயிறு போட்டு இறுக்கியதால் ஏற்பட்ட காயமா என்கிற சந்தேகம் டாக்டருக்கே இருக்கிறது. அதனால்தான் நீதிபதிக்கு சந்தேகம் வந்து புலன் விசாரணை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். அவர்களுக்கு இன்ன தண்டனை கொடுக்க வேண்டுமென்றும் நீதிபதி சொல்லவில்லை. ஆகவே தான் புலன் விசாரணை செய்ய வேண்டியிருக்கிறது. அதுபோல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கிறது. புலன் விசாரணை நடந்ததற்குப் பிறகு சார்ஜ் சீட் கொடுத்த பிறகு தண்டனை கொடுக்க வேண்டும். சில பல வழக்குகளுக்கு இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டு, நான்கு ஆண்டு கூட ஆகக் கூடும். ஆனால் யாரையும் தப்பிக்க விட வேண்டுமென்ற அவசியம் இல்லை. ஆகவே, உள்ளபடியே குற்றச்சாட்டு என்று வருகின்றபோது இந்த முறைகள் எல்லாம் நடக்க வேண்டும். அவர்களைக் கோர்ட்டே தண்டிப்பது என்பது வேறு. விசாரித்து ட்ரையல் நடத்தி தண்டிப்பது என்பது வேறு. இங்கே ட்ரையல் நடக்கவே இல்லை. அவர்கள் ஒரு கண்டுபிடிப்பை, பைன்டிங்கைக் கொடுத்திருக்கிறார்கள். பைன்டிங்படி இப்படித்தான் நடக்க வேண்டும். அந்த பைன்டிங்கை வைத்துக்கொண்டு அதன்படி நடப்பதன் காரணமாகத்தான் அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். பைன்டிங்கை வைத்துக்கொண்டு விசாரணை செய்வது சரியல்ல என்பதால் தான் அவர்கள் சஸ்பென்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். துறை நடவடிக்கையும் நடைபெறுகிறது. புலன் விசாரணையின் அறிக்கை வந்ததற்குப் பிறகு அவர்களுக்கு சார்ஜ் சீட் கொடுத்ததற்குப் பிறகு கோர்ட்



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வழக்குக்குச் செல்ல வேண்டியிருக்கும். துறையே நடவடிக்கை எடுக்கிறதா அல்லது கோர்ட்டே நடவடிக்கை எடுக்கிறதா, அவர்களை அறவே பணி நீக்கம் செய்வதா என்பது எல்லாம் ரிப்போர்ட்டைப் பொறுத்து பின்னால் வரும். தேவையானால் அதுபற்றி முழு நடவடிக்கையும் முடிந்ததற்குப் பிறகு நான் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்.

அடுத்து, சந்தோஷ் என்கிற நடிகரிடமிருந்து தங்கச்சங்கிலியை பறித்தது பற்றி இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான் கான் குறிப்பிட்டார். 11—2—1987 அன்று இரவு 9 மணியளவில் திரைப்பட நடிகர் சந்தோஷ் அவர் நண்பர் சுரேஷ் குமாரும் கோடம்பாக்கத்தில் பேசிக்கொண்டிருக்கும்போது கிருஷ்ணன் மற்றும் ஆறுமுகம் என்கிற சோடா ஆறுமுகம் ஆகிய இருவரும் சந்தோஷின் கழுத்திலிருந்து சுமார் 21 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள 83 கிராம் தங்கச் சங்கிலியை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டனர். இதுகுறித்து கோடம்பாக்கம் காவல் நிலையத்தில் குற்றம் எண் 552/87, பிரிவு 379-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவாகி விசாரணை செய்யப்பட்டது. இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை காவல் துறையினர் கைது செய்து தங்கச் சங்கிலியை மீட்டனர். நீதிமன்றத்தில் கிருஷ்ணனுக்கு 10 வாரம் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. ஆறுமுகத்தின் மீது வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசும்போது * என்றும், வியாசர்பாடியில் எருமை மாடு திருடப்பட்டது என்றும் குறிப்பிட்டார்கள். வியாசார்பாடியைச் சேர்ந்த பாண்டியன் என்பவர் 31—11—1986 அன்று சர்மா நகர் காவல் நிலையத்தில் தனது எருமை மாடுகளைக் காணவில்லை என்று புகார் கொடுத்தார். காவல் துறையினர் விசாரணை செய்ததில் அவருடைய எருமைகளை மாநகராட்சியில் பணி புரியும் காவலர்கள் நம்பர் 1483 கொண்ட சுப்பிரமணியன் என்பவரும், 6323 நம்பர் கொண்ட ராஜசேகர் என்பவரும், காவல் உதவி ஆய்வாளர் சாமண்டி மற்றும் மாநகராட்சி காவலர்கள் 4 பேர் சேர்ந்து களவாடியது தெரிய வந்தது.

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

4—1987
136531

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

இதுகுறித்து சர்மா நகர் காவல் நிலையத்தில் குற்ற எண் 411/86, இ.த.ச. பிரிவு 329-ன் கீழ் மேற்கண்ட குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர். மேற்கண்ட குற்றவாளிகளில் காவல் துறையைச் சார்ந்த 3 பேரும் 11—12—1986 முதல் தற்காலிக பணி நீக்கம் செய்யப்பட்டனர். மாநகராட்சியைச் சார்ந்த மற்ற 4 குற்றவாளிகள் மீது அறிக்கை ஒன்று மாநகராட்சிக்கு அனுப்பப் பட்டுள்ளது. 3 காவல் துறையினர்மீது துறை ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகிறது.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேசும் போது 12 மூட்டை அரிசி கடத்தலைப் பற்றி இங்கே குறிப் பிட்டார். தர்மபுரி மாவட்டம் தலைமைக் காவலர் ராமலிங்கம், காவலர் அருள்ராஜ் என்பவர்கள் சேலம் மாவட்டத்தில் பந்தோபஸ்து பணியில் இருக்கும்போது டி.பி.எஸ். 5950 என்கிற காவல் துறை லாரியை கள்ளச்சாவி போட்டு ஓட்டிச் சென்று 6—6—1986 அன்று அதிகாலை அயோத்தியாபட்டணம் சந்தைக்குப் போயிருக்கிறார்கள். அங்கே போய்க்கொண்டிருந்த மாட்டு வண்டியை வழி மறித்து, வண்டி ஆளைத் தாக்கி, வண்டியிலிருந்த 13 மூட்டை அரிசியில் 3 மூட்டை அரிசியை எடுத்துச் சென்று விட்டனர். இதுசம்பந்தமாக அவர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு அன்றே தற்காலிக வேலை நீக்கமும் செய்யப் பட்டனர். அரிசி மூட்டைகள் மீட்கப்பட்டு, சொந்தக்காரர் களிடம் ஒப்படைக்கப்பட்டன. வேலை நீக்கத்தில் வைக்கப்பட்ட காவலர் அருள்ராஜ் மீது முன்பே ஒரு விசாரணை இருந்து வந்தது. அந்த விசாரணை முடிவில் 20—4—1987 அன்று அவர் நிரந்தரமாக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் பேசும்பொழுது கூடுதல் கண்காணிப்பாளர் திரு. பொன்னையாவைப்பற்றி குறிப் பிட்டார்கள். மதுவிலக்கு கூடுதல் கண்காணிப்பாளர் திரு. பி. பொன்னையாவின் மனைவியும், மகனும் தஞ்சாவூர் பராசக்தி ஏலச் சீட்டு மற்றும் நிதியகம் என ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி, ஏலச் சீட்டு நடத்தி, ஏலம் எடுத்தவர்களுக்குப் பணம் கொடுக்காமலும், விதிகளின்படி ஏலச் சீட்டு நடத்தாமல் தஞ்சாவூர் பொதுமக்களை ஏமாற்றியதாகப்



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

புகார் வந்தது. இது தொடர்பாக ஒரு வழக்கு பதிவு செய்யப் பட்டு, குற்றப் புலனாய்வுத் துறையால் ஆய்வு செய்யப்பட்டது. அதில் திரு. பொன்னையா தனது குடும்பத்தினர் ஏலச் சீட்டு நடத்த அரசு அலுவலர் நன்னடத்தை விதியின்கீழ் அனுமதி வாங்கவில்லை என்றும், இந்த விவகாரத்தில் திரு. பொன்னையா அதிக ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளது என்றும், இந்தக் குற்றத்தை மிக விரைவாக ஆராய வேண்டி யுள்ளது என்றும், திரு. பொன்னையா 31—7—1987 அன்று ஓய்வு பெற உள்ளார் என்றும், எனவே, அவரை உடனடியாகத் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்க காவல்துறை இயக்குநர் செயற்குறிப்பை அனுப்பியுள்ளார். அதை அரசு பரிசீலித்து இப்பொழுது அவர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீது மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் சுப்பராயன் அவர்கள் பேசும்பொழுது, வால்பாறையில் சுவைதா கொலை வழக்குபற்றி ஒரு குறிப்பைக் குறிப்பிட்டார்கள். 2—9—1986 அன்று வாட்டர் ஃபால்ஸ் எஸ்டேட்டில் பெண் கொலை செய்யப்பட்டுக் கிடப்பதாக மூடிஸ் காவல் நிலையத்தில் புகார் தரப்பட்டது. இந்த வழக்கை விசாரணை செய்யும்பொழுது வால்பாறையைச் சேர்ந்த மாரி முத்து, சண்முகம் ஆகிய இருவர் சுவைதா, வயது 17, தந்தையார் பெயர் ஹைதர் என்ற பெண்ணைக் கொலை செய்து அவள் அணிந் திருந்த நகைகளைத் திருடிவிட்டதாகத் தெரிய வந்தது. மேற் படி குற்றவாளிகள் 9—9—1986 அன்று கைது செய்யப்பட்டு அவர்கள் காவலுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். 28—11—1986 இல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இதே குற்ற வாளிகள் இதே போன்று, 1—9—1986 அன்று செல்வமணி, வயது 62 என்ற அம்மையாரைக் கொலை செய்து, ரூபாய் 1,600 பெறு மானமுள்ள நகைகளைத் திருடியுள்ளார் என்று புலன் விசாரணையில் தெரிய வந்தது. அந்த வழக்கிலும் குற்றப் பத்திரிகை 28—11—1986-இல் தாக்கல் செய்யப்பட்டு, இப்பொழுது வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் குறிப்பிடும்பொழுது கூளாத்தாள் என்கின்ற கறுப்பாத்தாள் கற்பழிப்பு, கொலை, நகை பறிப்பு மீதான குறிப்பைப்பற்றிப் பேசினார்கள்.

2—12—1986 அன்று தனது தங்கை கூவாத்தாள் என்கிற கறுப்பாத்தாள், வயது 26, கணவன் பெயர் அங்கப்ப கவுண்டன், கொலை செய்யப்பட்டதாகவும், அவளிடமிருந்து பத்தாயிரம் ரூபாய் மதிப்புள்ள தங்க நகைகளைக் காணவில்லை என்றும் சுப்பிரமணிய கவுண்டர் அளித்த புகாரின்மீது பெருமாநல்லூர் காவல் நிலையக் குற்ற எண். 185/85 இ.சா.சா. பிரிவு 302, 376, 379 இன் கீழ் வழக்கொன்று பதிவாகி விசாரணை செய்யப்பட்டது. விசாரணையில் தனது பக்கத்துத் தோட்டத்தைச் சேர்ந்த கறுப்பசாமியின்மீது சந்தேகம் இருப்பதாக மனுதார் கூறினார். இதற்கிடையில் கறுப்பசாமி மற்றும் குமார் நீதி மன்றத்தில் சரணடைந்தனர். மேற்படி இருவரையும் காவல் துறையினர் வழக்கு சம்பந்தமாக அடிக்கடி விசாரணை செய்து வருகின்றனர். இந்த வழக்கைத் துவக்க தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளது. மாநிலக் குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் இதுகுறித்து விசாரணை செய்து வருகின்றனர். புலன் விசாரணை முடிந்தவுடன் குற்றத் தாள் தாக்கல் செய்யப்படுமென்று குறிப்பு தரப்பட்டிருக்கிறது.

**திரு. கு. ரமணி:** தலைவரவர்களே, அவர் சொன்னதற்கும் நடந்திருக்கின்ற விஷயத்திற்கும் வித்தியாசமிருக்கிறது. ஏனென்றால் அவர்கள் துறையிலேயிருந்து அதுதான் கிடைத்திருக்கும். அது பழைய நிலைமை. அந்தச் சிறையிலிருந்தவர்களை, இந்தக் குற்றத்திற்குள்ளே கொண்டு வருவதற்குத் தடயங்கள் இல்லையென்று சொல்லி அவர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள். அதற்குப் பிறகு கோவை மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் போட்டு, அந்த ஊரே சேர்ந்து தீர்மானம் போட்டு அனுப்பி, பஞ்சாயத்தும் தீர்மானம் போட்டு அனுப்பியது, மறுபடியும் இன்வெஸ்டிகேட் பண்ணச் சொல்லி. அதுதான் பிரச்சினை. அப்படியிருக்கிறது. அவர்கள் சிறையிலே இல்லை. அவர்கள் விடுதலை செய்யப்பட்டுவிட்டார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் தலைவரவர்களே, அதுபற்றிய குறிப்பை அவர்களைச் சார்ந்தவர்களோ, மற்றவர்களோ ஒரு புகாராக எழுதி அரசுக்குத் தருவார்களேயானால், அரசின் மூலமாக உரிய அதிகாரிகளைக் கொண்டு, மறுபடியும் விசாரிக்கச் செய்து, உள்ளபடியே அவர்கள்



தான் குற்றவாளிகள் என்று சொல்வார்களேயானால் தக்க நடவடிக்கைகளை முறைப்படி நாம் எடுக்கச் சொல்லாம். ஏனென்றால் எந்தக் குற்றவாளிகளையும் நாம் விடுதலை செய்ய வேண்டிய அவசியமே இல்லை.

(பிற்பகல் 1-40)

**திரு. வி. தங்கவேலு:** தலைவரவர்களே, வால்பாறையில் சுவேதா என்ற 17, 18 வயது பெண் கற்பழிக்கப்பட்டு, தாழங்குடி எஸ்டேட்டில் புதைக்கப்பட்டாள். குற்றம் செய்த குற்றவாளிகளைப் பிடிப்பதற்குப் பதிலாக ஒவ்வொரு நபரிடமும் 5,000 ரூபாய் வாங்கிக்கொண்டு அந்தப் பெண் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக ஏதும் அறியாத ஒருவர்மீது பொய் வழக்குப் போட்டிருக்கிறார் அங்கே இருக்கிற இன்ஸ்பெக்டர். அவர் தொடர்ந்து இப்படிப்பட்ட பொய் வழக்குகளைப் போட்டுக் கொண்டிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினராகிய என்மீதுகூட பொய் வழக்குப் போட்டிருக்கிறார். என்னை அடித்த தாசில்தாரை விட்டுவிட்டு, நான் கொடுத்த தீண்டாமை புகாரை தூக்கி எறிந்துவிட்டு, என்மீது பொய்யான குற்றச்சாட்டைச் சொல்லி, பொய் வழக்குப் போட்டிருக்கிறார் அந்த இன்ஸ்பெக்டர் சுந்தரம். வால்பாறையில் இருந்துகொண்டு இன்ஸ்பெக்டர் சுந்தரம் இப்படிப்பட்ட பொய்யான வழக்குகளைப் போடுவதை தொடர்ந்து செய்து, அதை குலத்தொழிலாகவே செய்துகொண்டிருக்கிறார் என்பதை இந்த மன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (குறுக்கீடு) நான் புகார் எழுதிக் கொடுத்திருக்கிறேன்; இதுவரையில் பதில் வரவில்லை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதிலிருந்து இது விசாரிக்கப்பட வேண்டிய ஒன்று என்று மட்டும் தெரிகிறது. அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக இருப்பதால் அதை ஒரு புகாராக எழுதித் தருவார்களானால், மாண்புமிகு முதல்வர் அல்லது அரசின் சார்பாக உரிய நடவடிக்கைக்கு அனுப்பி, மேல்மட்ட அதிகாரிகளைக் கொண்டு விசாரணை செய்து, உண்மையைக் கண்டறிந்து, குற்றவாளிகள் யார் என்பதைக் கண்டறிந்து, அவர்கள் தக்க தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. நீதி நிலைநாட்டப்பட

வேண்டும்; சட்டம் ஒழுங்கு காப்பாற்றப்பட வேண்டும். உண்மைத் தன்மை யாருக்குப் போகவேண்டுமோ அவருக்குப் போக வேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்திருக்கிறாரா என்று தெரியவில்லை; புகாராக எழுதிக் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் மதுரை மாநகருக்கு காவல் துறை கமிஷனர் வேண்டும்; கமிஷனர் நிர்வாகம் தொடங்கப்பட வேண்டும் என்று கேட்டார்கள். மதுரை மாநகராட்சியான பிறகு கமிஷனர் போட வேண்டுமென்ற செயற்குறிப்பு போடப்பட்டது. சட்ட ரீதியான அனுமதி அதற்குத் தேவை. சட்ட ரீதியான அனுமதியைப் பெற்று, சென்னை மாநகரக் காவல் சட்டத்தையும் சேர்த்து, எல்லா வற்றுக்கும் சேர்த்து ஒரே சட்டமாகக் கொண்டுவந்து, சென்னை மாநகரில் இருப்பதைப்போன்று மதுரை, கோவை மாநகரங் களுக்கும் கமிஷனர் பதவி கொண்டுவரப்படும். அதற்கான நடவடிக்கை எடுக்க சட்ட முன்வடிவு விரைவில் பேரவையில் அறிமுகம் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணி பத்மினி கொலை வழக்குபற்றி திரு. சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். 23—1—1987-ல் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அதன்மீது முறைப்படி வழக்கு நடை பெறும்.

கம்பியூட்டர் பற்றியும் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசிடம் புதிய கம்பியூட்டரை வாங்க வேண்டுமென்று கேட்டிருக் கிறோம். 125 இலட்சம் ரூபாய் ஒதுக்கி, அதிலே 50 சதவீதத்தை மாநில அரசும், 50 சதவீதத்தை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசின் அனுமதியும், உதவியும் கிடைத்து விட்டால் விரைவில் வாங்குவதற்கான சூழ் நிலைகளை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

வேறு பல பிரச்சினைகள் பற்றி தனிப்பட்ட முறையிலும் தொகுதி பற்றியும் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துக் கூறியதை காவல் துறை அதிகாரிகளும் உள் துறையைச் சேர்ந்த வர்களும் குறித்து வைத்து, அதற்கான நடவடிக்கைகளை முறைப்படி எடுக்க முயல்வார்கள் என்பதைத் தெரிவித்துக்



கொண்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தக் காவல்துறை மானியக் கோரிக்கையை ஒட்டி சிலபல அறிவிப்புகளைச் செய்ய விழைகிறார்கள்; அவற்றை இப்போது அறிவிக்க விரும்புகிறேன்.

**அறிவிப்பு—1.**

பெருகிவரும் மக்கள் தொகை, மற்றும் குற்றங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், தமிழ்நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கினைப் பேணிக் காத்து குற்றங்களைக் கட்டுப்படுத்தவும், போக்குவரத் தினை ஒழுங்குபடுத்தி அதன் விதிகளை மீறுபவர்களைத் தண்டிக்கவும், புதிதாக காவல்/புறக்காவல் நிலையங்கள்/போக்கு வரத்துக் காவல் நிலையங்கள் மற்றும் புதியதாக காவல் வட்டம் மற்றும் உட்கோட்டங்கள் ஆகியவை ஏற்படுத்தப்படுகின்றன. இதன் அடிப்படையில் இந்த ஆண்டு கீழ்க்கண்டவாறு காவல் நிலையங்கள்/புறக்காவல் நிலையங்கள்/போக்குவரத்துக் காவல் நிலையங்கள்/காவல் வட்டம்/காவல் உட்கோட்டம் ஆகியவைகள் ஏற்படுத்தப்படும்.

**காவல் நிலையங்கள்.**

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் சுரண்டை; சிதம்பரனார் மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தூத்துக்குடி தெர்மல்நகர், ஆத்தூர், கட்டார்மடம்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குருந்தன் கோடு, வெள்ளிச்சந்தை, ஈத்தாமொழி ஆகிய மூன்று இடங்கள்.

காமராஜ் மாவட்டத்தில் மாத்தாங்கோயில்பட்டி, கும்மாப் பட்டி, சாத்தூர், தளவாய்புரம், காயில்பட்டி (சிவகாசி) ஆகிய ஐந்து இடங்கள்;

இராமநாதபுரம் மாவட்டத்தில் சிப்காட், மாரியூர், வாலி நோக்கம் சால்ட் காம்ப்ளக்ஸ், தனுஷ்கோடி ஆகிய மூன்று இடங்கள்;

அண்ணா மாவட்டத்தில் அப்பிளிகை, ஆயக்குடி (பழனி) ஆகிய இரண்டு இடங்கள்;

தர்மபுரி மாவட்டத்தில் அஞ்செட்டி, பாபிரெட்டிபாளையம் (அரூர் வட்டம்) ஆகிய இரண்டு இடங்கள்;

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

வடாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வேலூரைச் சேர்ந்த பென்ட்லேண்டு மருத்துவமனை, செய்யாரைச் சேர்ந்த பிரம்மதேசம், அம்பலூர் ஆகிய மூன்று இடங்கள் :

தென்னாற்காடு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆவணங்குடி, ரோசனை ஆகிய இரண்டு இடங்கள்;

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சிந்தாமணிப்பட்டி, புத்தாநத்தம், பெரம்பலூர் வட்டத்தைச் சேர்ந்த மருவத்தூர் ஆகிய மூன்று இடங்கள்;

மதுரை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் குமிளி என்ற இடம் ;

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் பாலூர் கிராமம், பூந்தமல்லிப் பகுதி வெள்ளவேடு கிராமம், வலசரவாக்கம், காவலாங்கரை கிராமம் ஆகிய நான்கு இடங்கள்; தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏரவன்சேரி, நாகப்பட்டினம் மாவட்டத் தலைமை மருத்துவமனை, திருவையாறு தாலுகா மருவூர் ஆகிய மூன்று இடங்கள்; சேலம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வீராணம் கிராமம், திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த மௌசி கிராமம் ஆகிய இரண்டு இடங்கள்; புதுக்கோட்டை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காமராஜர் நகரைச் சேர்ந்த கணேஷ் நகர் ஆகிய இடங்களில் காவல் நிலையங்கள். அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து புறக்காவல் நிலையங்கள். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் பகுதியில் பட்டீஸ்வரன்; காமராஜர் மாவட்டத்தைச் சேர்ந்த விருதுநகர் பகுதியில் உள்ள செங்குன்றபுரம், சாத்தூர் ஊராட்சி ஒன்றியம் ஆகிய இரண்டு இடங்கள்; கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த பள்ளியாடி; செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த மாடம்பாக்கத்திலுள்ள பாலாஜி நகர், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா வடக்குப்பட்டு கிராமத்திலுள்ள திருவேணி நகர், திருவள்ளூர் நகராட்சி பெரிய குப்பம், வில்லிவாக்கம் பகுதி சிட்கோ நகர் ஆகிய நான்கு இடங்கள்; கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த நாராயணவில்லா டாடாபாத்; திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சி தேசிய நெடுஞ்சாலை ஆகிய இடங்களில் புறக்காவல் நிலையங்கள் அமைக்கப்படும்.



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

அடுத்து போக்குவரத்துக் காவல் நிலையங்கள். வடாற்காடு மாவட்டம் திருவண்ணாமலை, தென்னாற்காடு மாவட்டம் விருத்தாச்சலம் நகா மணவாளநல்லூர் போன்ற இடங்களில் அமைக்கப்படும்.

அடுத்து புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்துவதைப் பொறுத்தவரையில் பின்வருமாறு அறிவிக்கிறேன் : செங்கற்பட்டு மாவட்டத்தில் தாம்பரம் கிழக்கு புறக் காவல் நிலையம் மற்றும் திருவேற்காடு புறக்காவல் நிலையம்; இராமநாதபுரம் மாவட்டத்தில் உத்திரகோசமங்கை, உச்சிப்புளி, ஆரவாயல்; கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆசாரிபள்ளம், கொள்ளிக்கோடு; மதுரை மாவட்டத்தில் உத்திரமங்கலம் புறக் காவல் நிலையம்; வடாற்காடு மாவட்டத்தில் விருகம்பட்டு புறக் காவல் நிலையம்; திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் சீதபற்பநல்லூர் ஆகிய இடங்களில் உள்ள புறக்காவல் நிலையங்கள் காவல் நிலையங்களாகத் தரம் உயர்த்தப்படும்.

அடுத்து காவல் வட்டம். சேலம் மாவட்டம் தாரமங்கலம்; தென்னாற்காடு மாவட்டம் கள்ளக்குறிச்சி.

அடுத்து காவல் உட்கோட்டம். தர்மபுரி மாவட்டம் அரூரில் அமைக்கப்படும். மதுரை மற்றும் ஆவடியில் உள்ள காவல் மருத்துவமனைகள் விரிவுபடுத்தப்படும். இவை எல்லாவற்றுக்கும் சேர்த்து தொடரா இனச் செலவாக ரூபாய் 200 இலட்சம் ஆகும்.

**அறிவிப்பு—2.**

தமிழ்நாட்டில் 1—1—1987-லிருந்து கள் மற்றும் சாராயம் தயாரித்தல், விற்பனை செய்தல், குடித்தல் முதலியவற்றை அரசு தடை செய்ததின் விளைவாக, மதுவிலக்கு கொள்கையினைத் தீவிரமாக அமல்படுத்த வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு, மதுவிலக்கு அமல் பிரிவினை பலப்படுத்த வேண்டியுள்ளது. எனவே இப்பிரிவில் கூடுதலாக கீழ்க்கண்ட பணியிடங்களை ஏற்படுத்தி மற்றும் அதற்குத் தேவையான வாகனங்களும் வாங்கப்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

**களப்பணியாளர்கள் :**

கண்காணிப்பாளர்கள் 5 பேர் ; துணைக் கண்காணிப்பாளர்கள் 15 பேர், ஆய்வாளர்கள் 19 பேர்; உதவி ஆய்வாளர்கள் 10 பேர் ; தலைமைக் காவலர் 15 பேர் ; காவலர் நிலை-1—219 பேர் ; காவலர் நிலை-2—601 பேர் ; ஓட்டுநர் 452 பேர் ;

(பிற்பகல் 1-50)

**அமைச்சுப் பணியாளர்கள் :**

1. நேர்முக உதவியாளர்கள்—5.
2. கண்காணிப்பாளர்கள்—5.
3. உதவியாளர்கள்—6.
4. இளநிலை உதவியாளர்கள்—7.
5. சுருக்கெழுத்து தட்டச்சர்கள்—6.
6. பதிவேடு எழுத்தர்கள்—6.
7. அலுவலக உதவியாளர்கள்—10.

**வாகனங்கள் :**

1. அம்பாசிடர் கார்கள்—5.
2. பிக்-அப் வேன்கள்—190.
3. ஜீப்—29.
4. மோட்டார் சைக்கிள்—2.

இவை தவிர 159 தொலைபேசிகளும், 35 வி.எச்.எப். செய்தி தொடர்பு கருவிகளும் மேலும் தேவையான மரச் சாமான்களும் வாங்கப்படும்.

இதற்காக ஆண்டொன்றிற்கு ஆகும் மொத்தச் செலவு ரூ. 4.47 கோடி ஆகும். தொடர் இனச் செலவு 1.76 கோடி, தொடரா இனம் 2.71 கோடி.

தமிழ்நாட்டில் வாடகைக் கட்டிடங்களில் இயங்கிவரும் காவல் நிலையங்களுக்குப் பதிலாக, சொந்தமாக கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படவேண்டும் என்பது இந்த அரசின் கொள்கையாகும்.



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதனைக் கருத்தில் கொண்டு, கீழ்க்கண்ட இடங்களில் உள்ள காவல் நிலையங்களுக்குச் சொந்தமாகக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்படும் :—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் அச்சன்புதூர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் பசுபதிபாளையம், துறையூர்.

காமராஜர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர், வத்திராயிருப்பு இராஜபாளையம் வடக்கு காவல் நிலையம்.

பெரியார் மாவட்டம், கடத்தூர்.

மதுரை மாவட்டம், மேலூர், உசிலம்பட்டி, வாடிப்பட்டி, சோழவந்தான்.

தென்னாற்காடு மாவட்டம், மணலூர்பேட்டை.

தஞ்சாவூர் கிழக்கு மாவட்டம், தலைஞாயிறு.

தஞ்சாவூர் மேற்கு மாவட்டம், திருப்பனந்தாள்.

சென்னை மாவட்டம், பெரியார் நகர்.

இச்செயற்குறிப்பிற்கு ஆகும் தொடரா இனச் செலவு ரூபாய் 1.50 கோடி ஆகும்.

தமிழ்நாடு காவல் துறையில் பணிபுரியும் அனைத்து காவல் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். இதனைக் கருத்தில் கொண்டு அரசு கீழ்க்கண்ட இடங்களில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கும் :—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்—
புளியங்குடி, வாசுதேவநல்லூர், சிவகிரி.

காமராஜர் மாவட்டம்—
சாத்தூர், சிவகாசி, இராஜபாளையம், பந்தல்குடி.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்—
துறையூர்.

மதுரை மாவட்டம்—
வாடிப்பட்டி, உசிலம்பட்டி, சோழவந்தான்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

பெரியார் மாவட்டம்—

கடத்தூர்.

தென்னாற்காடு மாவட்டம்—

மணலூர்பேட்டை.

தஞ்சாவூர் மாவட்டம்—

பாபநாசம், தலைஞாயிறு, திருவிடைமருதூர், திருப்பனந்தாள், திருநீலக்குடி, பந்தநல்லூர், நாச்சியார்கோவில்.

சிதம்பரனார், காமராஜர் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டங்களில் உள்ள செய்தித் தொடர்பு வசதிகள் விரிவுபடுத்தப்படும்.

இதற்காகும் தொடர் இனச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 14.28 இலட்சமும், தொடரா இனச் செலவு ரூ. 67.59 இலட்சமும் ஆகும்.

தமிழ்நாடு காவல் துறையில் சட்டம் ஒழுங்கினை நிலைநாட்டும் பணியில் காவல் செய்தித் தொடர்பு வசதி மிகவும் இன்றியமையாததாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் உள்ள 5, 7, 8 மற்றும் 9-வது அணிகளின் உபயோகத்திற்காக ரூபாய் 41.13 இலட்சம் செலவில் செய்தி தொடர்பு கருவிகள் வாங்கப்படும்.

இந்தியாவில் ஏறத்தாழ அனைத்து மாநிலத் தலைமையிடங்களிலும் காவல் துறைக்காக தனியாக ஒரு உணவகம் உள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டில் காவல் துறையினரின் உபயோகத்திற்காகச் சென்னையில் ஒரு உணவகம் ஏற்படுத்தப்படும் என்று சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் சென்னை மாநகர காவல் மருத்துவமனை வளாகத்தினுள் காவல் துறையினருக்கான உணவகம் ஒன்று ஏற்படுத்த ரூ. 35.60 இலட்சம் அனுமதிக்கப்படுகிறது.

தமிழ்நாடு காவல் துறையிலுள்ள காவல் வானொலிப் பிரிவின் உபயோகத்திற்காக, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் தகவல் தொடர்பு கட்டிடங்கள் கட்டப்படும்.



1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இதற்காகும் தொடரா இனச் செலவு ரூ. 20.14 இலட்சம் ஆகும்.

தமிழ்நாடு காவல்துறையிலுள்ள காவல் வானொலிப் பிரிவில் உள்ள விலை உயர்ந்த கருவிகளை கையாளுவதற்குப் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஒரு தொழிற் பயிற்சிப் பள்ளி ஏற்படுத்தப்படும்.

இதற்காகும் தொடர் இனச் செலவு ஆண்டொன்றுக்கு ரூ. 2.39 இலட்சமும், தொடரா இனச் செலவு ரூ. 15.00 இலட்சமும் ஆகும்.

தர்மபுரி மாவட்டத்திலுள்ள கிருஷ்ணகிரியிலுள்ள காவல் துறையில் பணியாற்றும் காவல் பணியாளர்களுக்கு குறைந்த அளவு குடியிருப்பு வசதிகள் உள்ளன. அவர்களுக்கு அதிக அளவில் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் ரூ. 15.18 இலட்சம் செலவில் புதிய குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ஒப்புதல் அளிக்கிறது.

போதைப் பொருள்கள் பயன்படுத்தப்படுவதை கண்காணிக்கவும் மற்றும் தடுக்கவும் அதைச் சட்ட விரோதமாக கடத்தப்படுவதைத் தடுக்கவும் மற்றும் அது சம்பந்தமான வழக்குகளை சரிவர கையாளுவதற்கும், குற்றப் புலனாய்வுத் துறையில் இயங்கிவரும் போதைப் பொருள்கள் நுண்ணறிவுப் பிரிவு பலப்படுத்தப்படும். இதற்காகக் கூடுதல் பணியாளர்கள் நியமனம் செய்யப்படுவர்.

காவல் ஆய்வாளர்—3.

காவல் உதவி ஆய்வாளர்—9.

தலைமைக் காவலர்—18.

இளநிலைக் காவலர்—54.

ஓட்டுநர் காவலர்—1.

அமைச்சுப் பணியாளர் :

கண்காணிப்பாளர்—1.

உதவியாளர்—1.

இளநிலை உதவியாளர்—1.

தட்டச்சர்—1.

அலுவலக உதவியாளர்—3.

இதற்காகும் தொடர் இனச் செலவு ரூ. 12.45 இலட்சமும் தொடரா இனச் செலவு ரூ. 0.67 இலட்சமும் ஆகும்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பணியில் ஈடுபட்டுள்ள காவலர்கள் இரவு நேரங்களில் ரோந்துப் பணி புரியும்போது குற்றவாளிகள் பற்றிய தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்கு வசதியாக, சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களோடு தொடர்பு கொள்வதற்கு ஒவ்வொரு காவல் நிலையத்திற்கும் இரண்டு வாக்கி-டாக்கி கருவிகள் வீதம் 50 காவல் நிலையங்களுக்குத் தேவையான கருவிகள் வழங்கப்படும். இதற்காக தொடரா இனச் செலவு ரூ. 10 லட்சம் ஆகும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏற்படவிருக்கும் குதிரைப் படை பிரிவில் உள்ள குதிரைகள் உபயோகத்திற்காக ரூபாய் ஒன்பது லட்சத்து 52 ஆயிரம் செலவில் குதிரை லாயங்கள் கட்டப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டதை யொட்டி இராமநாதபுரத்தில் மாதிரி வடிவமைப்பு—3-ஐ அடிப்படையாகக் கொண்ட காவல் நிலையம் கட்டப்படும். இதற்காக தொடரா இனச் செலவு ரூபாய் ஏழு லட்சத்து 32 ஆயிரம் ஆகும்.

தமிழ்நாடு காவல் துறையில் உள்ள அமைச்சுப் பணியாளர்களுக்கு பணிப் பளுவைக் குறைக்கும்பொருட்டு கூடுதலாக அமைச்சுப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுடைய உபயோகத்திற்காக ரூபாய் ஆறு லட்சம் மதிப்பீட்டுச் செலவில் மரச் சாமான்கள் வாங்கப்படும்.

இராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் உள்ள காவலர் குடியிருப்புகள் சேதமடைந்துள்ளன. இதனால் மழைக் காலங்களில் கட்டடங்களில் மேல்தளங்கள் வழியாக தண்ணீர் வீடுகளின் உள்ளே புகுவதற்கு ஏதுவாக இருக்கிறது. மேலும் வீட்டில் ஜன்னல் மற்றும் கதவுகள் சேதமடைந்த நிலையில் உள்ளன.

1987 மே 5] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

எனவே இந்தக் குடியிருப்புகளின் தேவைக்காக தனியாக ரூபாய் ஐந்து லட்சத்து ஐம்பது ஆயிரம் செலவில் பழுது பார்க்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு தடய அறிவியல் துறையில் உள்ள மயக்க மருந்துப் பிரிவு வலுப்படுத்தப்பட்டு அதன் வசதிகள் அதிகரிக்கப்படும். இதற்காக தொடரினச் செலவு 62 ஆயிரம் ரூபாய், தொடரா இனச் செலவு நான்கு லட்சத்து ஆறு ஆயிரம் ரூபாய் ஆகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படை நான்காவது அணியின் உபயோகத்திற்காக சமையல்கூடம் மற்றும் உணவுக்கூடம் கட்டுவதற்காக அனுமதி அளிக்கப்படுகிறது. இதற்காக தொடரா இனச் செலவு ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பது ஆயிரம் ஆகும்.

தமிழ்நாடு சிறப்புக் காவல் படையில் உள்ள 8 வது மற்றும் 9 வது அணியில் பணிபுரியும் காவல் பணியாளர்கள் உபயோகத்திற்காக ரூபாய் நான்கு லட்சத்து இருபத்திமூன்று ஆயிரம் செலவில் மடக்குக் கட்டில்கள் வாங்கப்படும்.

இயற்கைச் சீற்றம் மற்றும் கடும் மழையின்போது ஏற்படும் வெள்ளப்பெருக்கின்போது மேற்கொள்ளப்படும் மீட்புப் பணியின் போது குடிமைப் பாதுகாப்பு அலுவலகத்தின் உபயோகத்திற்காக ரூபாய் மூன்று லட்சத்து ஐம்பது ஆயிரம் ரூபாய் செலவில் 10 எப்.ஆர். இயந்திரப் படகுகள் வாங்கப்படும்.

தமிழ்நாடு குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவிற்குத் தேவையான வாகனங்கள், வி.எச்.எஸ். கருவிகள், தொலைப்பேசி கருவிகள் மற்றும் மரச்சாமான்கள் ஆகியவை ரூபாய் மூன்று லட்சத்து நாற்பத்து நான்கு ஆயிரம் செலவில் வாங்கப்படும்.

ஆகவே இதுபோன்று மொத்தம் 60 திட்டங்கள் வருகின்றன. மற்றவையெல்லாம் சிறிய சிறிய திட்டங்கள். இவைகள் எல்லாம் முறைப்படி அறிவிக்கப்படும். அதைப்போன்று தீயணைப்புத் துறை பற்றி 5, 6 திட்டங்கள் வருகின்றன. அவைகளும் முறைப்படி அறிவிக்கப்படும் என்று கூறி, இந்த மானியக் கோரிக்கைகளுக்கான வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன் :** தலைவர் அவர்களே, நான் பேசுகிற போது குறிப்பிட்டிருக்கிற இரண்டு முக்கியமான பிரச்சினைகள் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அரசுக்குத் தவறான தகவல் களைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை குறிப்பாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதிலே வால்பாறை பொறுத்தவரை யிலும் சுபேதா கொலை வழக்கில் சந்தேகிக்கப்பட்ட பீட்டர் என்கிற நபர் போலீஸ் நிலையத்தில் இன்னின்னார் விருந்து கொடுத்து கற்பழிக்கச் சொன்னதாக வாக்குமூலமே கொடுத்திருக் கிறார். ஆனால் அவர் விடுவிக்கப்பட்டு, வேறொரு நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவரை அந்தக் கொலையில் இணைத்திருக் கிறார்கள். ஆகவே இதுகுறித்து ஸ்பெஷல் என்குயரி போட்டு, புலன் விசாரணை செய்து நீதி விசாரணை நடத்த வேண்டு மென்று வலியுறுத்துகிறேன். இதுகுறித்து முழுமையாக கொலை யாளிகள் யார், பிணம் எப்படி அகற்றப்பட்டது என்பதை புலனாய்வுத் துறைக்கு சம்பந்தப்பட்ட ஊர் மக்களே புகார் கொடுத்திருக்கிறார்கள். அதை அரசு கவனிக்கவேண்டும்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையிலும் பரமசிவன் பாளையத்தில் பூவாத்தாளை கற்பழித்துக் கொன்று, கைப்பற்றப்பட்ட நகைகள் அவிநாசி தாலுகாவைச் சேர்ந்த கோதைபாளையம் என்ற கிராமத்தில் மொட்டையப்ப கவுண்டர் என்பவரிடம் அடகு வைக்கப்பட்டிருக்கின்றன என்று புகார் கொடுத்தும் கூட. கொல்லப்பட்டவருடைய நகைகள் அடகு வைக்கப்பட்டிருக்கிற இடத்திலிருந்து இன்று வரைக்கும் அதிகாரிகள்.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முடித்துவிடுங்கள்.

**திரு. கே. சுப்பராயன் :** இதுபற்றிய தகவலைச் சொல்லாமல், இதுபற்றிய விவரத்தையே சொல்லாமல் எப்படி முடிக்க முடியும்? தகவலே தவறாகச் சொல்லப்பட்டு இருக்கிறது. நகை கைப் பற்றப்படவில்லை. கொலை செய்தவர் வெளியே சுற்றிக்கொண் டிருக்கிறார். அவர்கள் கொன்றார்கள் என்பதற்கு, நேரடியாக கண்ணால் பார்த்த சாட்சி, கொல்லப்பட்டவருடைய சகோதரன் எழுத்து பூர்வமாகக் கொடுத்து இருக்கிறார். ஆகவே, இதுபற்றி தனித்த நீதி விசாரணை வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.





**திரு. கு. ரமணி :** தலைவர் அவர்களே, பல விஷயங்களுக்கு அமைச்சர் அவர்கள் விளக்கங்களைக் கொடுத்தார்கள். ஆனால் மிக முக்கியமான விஷயம் விடப்பட்டு விட்டது. பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைப் பற்றி, விவரங்களோடு, தேதி களோடு, குறிப்பிட்ட போலீஸ் நிலையங்களுடைய பெயர்களோடு நான் விவரங்களைச் சொன்னேன். அவர்கள் வரதட்சணைக் கொடுமையினால் கொலை செய்யப்பட்டது பற்றி எல்லாம் சொன்னேன். இந்த கேஸ்கள் எல்லாம் மேற்கொண்டு பரிசீலனை யில் இருக்கிறதா? என்ன செய்யப் போகிறார்கள்? என்பதைப் பற்றிச் சொல்லவில்லை. ஒவ்வொரு கேசைப் பற்றியும் உங்க ளால் சொல்ல முடியாது, அப்படிச் சொல்லவேண்டும் என்று நான் கேட்கவில்லை. இதற்கு என்ன புரசீஜர்? இதில் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? இந்த விவரங்கள் எல்லாம் அந்த இலாக்காவிற்குத் தெரியாதா? அதைக் கண்டு பிடிப்பார்களா? என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த வரதட்சணைக் கொடுமையால் ஏற்பட்ட இறப்புகள், மற்றவைகளைப் பற்றி என்னிடத்திலே குறிப்புகள் இருக்கின்றன. ஒரு புத்தகமே இருக்கிறது. இதிலே அவர்கள் சொன்ன குறிப்புகள் இருக்கிறதா? இல்லையா? என்பதைப் பற்றி முழுக்கப் படித்தால், இதற்கு ஒரு அரை மணி நேரம் ஆகும். ஆகவேதான் இதை நான் படிக்கவே இல்லை. ஆனால் அவர்கள் சொன்னவைகளைப் பற்றி இதிலே குறிப்புகள் இல்லாவிட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது. இதுபற்றி உண்மையான நடவடிக்கைகள், உண்மையான நிலைமைகள் என்ன என்பதைப்பற்றி காவல் துறையினர் குறித்து வைத்திருக் கிறார்கள். வரதட்சணைக் கொடுமைகளைப் பொறுத்த வரையில் ஒன்றை மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். யார் புகார் கொடுத்தாலும், உடனே நடவடிக்கை எடுக்கிற அளவிற்குத்தான் அண்மைக்காலங்களிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இட்ட கட்டளையினுடைய அடிப்படையிலே. உடனே அது சம்பந்தமானவர்கள் யார், யார் என்பதைக் கண்டு. கைது செய்து, 15 நாட்கள் ரிமாண்ட் வைப்பது போன்ற நடவடிக்கைகளை எடுக்கும்படியாக இருக்கிறது. குழு விவரக் குறிப்புகளில், எடுத்த நடவடிக்கைகள் பற்றி இருக்கிறது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போன்றவைகளும் இதிலே
இருக்கக்கூடும். இல்லாமலும் ஒன்றிரண்டு இருக்கக்கூடும்.
இதை முழுவதும் நான் படிக்கவில்லை. ஆனால் இதுபற்றிய
நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைமட்டும் நான் தெரிவித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள்
சொன்னதற்கு நான் உடனே இங்கே பதில் சொல்ல முடியாது.
அதிகாரிகளும் சொல்ல முடியாது. இதுபற்றி நான் சொன்ன
குறிப்புகள் கீழே இருந்துவந்த குறிப்புகள். அதிலே தவறு
இருக்கிறது, உண்மை அல்ல என்று சொல்கிறார். அதைப்பற்றி
எழுதிக் கொடுப்பார்களேயானால் அல்லது புகாராக தருவார்களே
யானால், மேல் மட்டத்திலிருந்து மறுபடியும் நாம் இதுபற்றி
உண்மை நிலைமையை ஆராய்ந்து, அதற்கான நடவடிக்கைகளை
எடுக்கலாம். ஏன் என்றால், மறைக்கவும் கூடும். இல்லை என்று
நான் சொல்ல வரவில்லை. மேலேயிருந்து தக்க விசாரணை
செய்கின்றபோதுதான் உண்மை புலப்படக்கூடும். எது உண்மை
என்று அவருக்குத் தெரிந்தாலும் அல்லது உரியவருக்குத் தெரிந்
தாலும், அதைப் பற்றி எழுதிக் கொடுத்தால், உள்துறை மூலமாக
தக்க நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

***திரு. கி. ராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள், ராஜபாளையத்தில் நடந்த
கலவரத்தைப் பற்றி விளக்கம் சொன்னார்கள். நான் கடந்த ஒரு
வாரமாக இதைப்பற்றி பேசவேண்டும் என்று உங்களுடைய
அனுமதியைக் கேட்டிருந்தாலும், எனக்கு அனுமதி கிடைக்க
வில்லை. ஆகவே, இந்த மாமன்றத்திற்கு விளக்கமான ஒரு
தகவலைத் தரக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. இருந்
தாலும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்னதின் அடிப்
படையில் நான் ஒருசில விவரங்களை மாத்திரம் சொல்லிக்
கொள்ள விரும்புகிறேன். "துப்பு துலக்குகிறோம்" என்ற
காரணத்தை வைத்துக் கொண்டு, ஏராளமாக குவிக்கப்பட்ட
போலீசார், திரு. அனந்தகிருஷ்ணன் நாடார், இராஜபாளையம்
முனிசிபல் கவுன்சிலர், பெருமையான குடும்பத்தைச் சேர்ந்தவர்,
காங்கிரஸ்காரர், எனக்கு உரிய நண்பர், அவரையும் கைது
செய்து இருக்கிறார்கள். மற்றும் ராஜபாளையம் நகர மன்றத்
தின் துணைத் தலைவர் திரு. முத்துசாமி, முன்னாள் எம்.எல்.ஏ.,
திரு. சின்னசாமி அவர்களுடைய சொந்தத் தம்பி, அவரும்
காங்கிரஸ்காரர் . . .



1987 மே 5]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** பேரவைத்தலைவர் அவர்
களே, வழக்கு விசாரணையில் இருக்கும்போது, கைது செய்யப்
பட்டது பற்றிச் சொல்லிக்கொண்டிருப்பது சரியல்ல. போலீசார்
கைது செய்யப்பட்டது விசாரணைக்காக இருக்கும். அதுபற்றி
விவாதிப்பதற்கு இந்த அவையிலே நேரமும் இல்லை, அதைப்
பற்றி விவாதிக்கவும் கூடாது.

**திரு. கி. ராமன் :** தகவலை மாத்திரம் சொல்லுகிறேன். இந்த
சம்பவத்தைக் காரணமாக வைத்துக்கொண்டு, சம்பந்தமில்லாத
அப்பாவி மக்களை எல்லாம் கைது செய்துள்ளார்கள். இது
உண்மையாகவே தேவைதானா? தேவையில்லை என்ற முடிவுக்கு
வந்தால், காவல்துறை அதிகாரிகளின் மீது அரசு நடவடிக்கை
எடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

***திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** பேரவைத் தலைவர் அவர்களே,
மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ராஜபாளையம் விவரத்தைச்
சொன்னார்கள். நான் தெரிந்து கொள்ள வேண்டியது எல்லாம்,
சென்ற 25 ஆம் தேதி அங்கே கொலை நடந்தது, 26 ஆம் தேதி
டி.ஜி.பி. ரவீந்திரன் அவர்களிடமும், ஐ.ஜி. ஸ்ரீபால் அவர்
களிடமும் நான் தகவல் தெரிந்துகொண்டது, டி.ஜி.பி. அவர்கள்
நல்ல பல பாதுகாப்புகளையெல்லாம் கொடுத்திருப்பதாகச்
சொன்னார்கள். ஐ.ஜி. அவர்கள் நேரிலே செல்ல இருப்பதாகவும்
சொன்னார்கள். ஐ.ஜி. அவர்கள் நேரடியாகச் சென்ற பிறகு
தான் நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்களே தவிர,
அங்குள்ள காவல்துறையினர் சரியான முறையிலே செயல்பட
வில்லை. கடையை மூடிவிட்டு இரவிலே வந்த இரும்புக்கடை
வியாபாரியை ரோட்டிலே தாக்கும்போது காவல்துறையினர்
வேடிக்கை பார்த்துக்கொண்டு ஓடியிருக்கிறார்கள். இதெல்லாம்
நடந்து இருக்கிறது. இன்னொரு செய்தி. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இது விவாதம் அல்ல.
மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுங்கள்;
நடவடிக்கை எடுப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு
அவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் நான் குறிப்பிட
விரும்புகிறேன். 72 பேர் நாடார் இனத்தைச் சேர்ந்தவர்களும்,

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 5

68 பேர் ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களும் பிரிவு 151-ன் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். விசாரணை நடக்கிறது. இவர்கள் அத்தனை பேர்களும் குற்றவாளிகள் என்றோ, அத்தனை பேர்கள் மீதும் வழக்கு தொடரப்படும் என்றோ எண்ணவேண்டாம். விசாரணை முடிந்ததற்குப் பிறகு பலபேர் விடுதலை செய்யப் படுவார்கள். அதற்குப் பிறகு யார் என்று போலீசாருக்குத் தெரிகிறதோ அவர்கள் மீது சார்ஜ்-ஷீட் போடுவார்களே தவிர அவ்வளவு பேர்கள் மீதும் போடுவார்கள் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். இதிலே பலபேர் நிரபராதிகள் என்று வந்தால் அவர்கள்மீது ஒன்றுமில்லாமல் தள்ளி விடுவார்கள். அதற்கான சூழ்நிலைகளை அங்கே உருவாக்கலாம், எடுத்துச் சொல்லலாம்; காவல்துறையினருக்கும் மற்றவர்களுக்கும் நீங்கள் விண்ணப்பம் செய்யச் சொல்லலாம்; அவர்களும் எடுத்துச் சொல்லலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்**போது வாக்கெடுப்பு.

**கோரிக்கை எண் 15—காவல்துறை.**

டாக்டர் தே. குமாரதாஸ், திருவாளர்கள் பி. கே. எம். முத்துராமலிங்கம், எஸ். ரத்தினராஜ் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன், திரும்பப் பெற்றுக்கொள்ளப் பெற்றனவாக கருதப்பெற்றன.

திருவாளர்கள் டி. ஆர். வேங்கடரமணன், கே. சுப்பராயன், கு. ரமணி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,17,87,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.



1987 மே 5]

**கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.**

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால், அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன், திரும்பப்பெற்றுக்கொள்ளப் பெற்றதாகக் கருதப் பெற்றது.

திருவாளர்கள் கோ. வீரய்யன், மு. இராசாங்கம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,79,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**2. அறிவிப்புகள்—தொடர்ச்சி.**

**(ஈ) திருமதி இந்திராகாந்தி கொலை முயற்சி வழக்கில் இரண்டு உறுப்பினர்களுக்கு தண்டனை அளிக்கப்பெற்றது குறித்த நீதிமன்றத் தகவல்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

The following message has been received from the Fifth Additional Sessions Judge, Madras :

"I have the honour to inform you that Thiru Pon. Muthuramalingam, Member of the Legislative Assembly and Thiru A. Rahman Khan, Member of the Legislative Assembly were tried in Sessions Case No. 11 of 1979 (against Mr. M. Karunanidhi and 134 others) at the Fifth Additional Sessions Judge's Court, Madras before me and they were found guilty of the charges :—

1. Section 302, read with 120-B I.P.C. (Criminal Conspiracy to commit murder of Mrs. Indira Gandhi)
2. Section 147, I.P.C. (Unlawful Assembly)
3. Section 325 read with 149, I.P.C. (Constructive liability for causing grievous hurt)

4. Section 324 read with 149, I.P.C.
(Constructive liability for causing simple hurt)

5. Section 435 read with 149, I.P.C.
(Constructive liability for causing damage by fire)

6. Section 427 read with 149, I.P.C.
(Constructive liability for causing damage)

On 30th April 1987, after a trial lasting for about 5½ years, I have found them guilty and sentenced them to imprisonment as follows :—

1. Under Section 302 read with 120-B I.P.C. and punishable under section 115 (Part-I) I.P.C.—Rigorous imprisonment for 2 years.
2. Under Section 147, I.P.C.—Rigorous imprisonment for 3 months.
3. Under Section 325 read with 149, I.P.C. (3 counts) Rigorous imprisonment for 2 years on each of the three counts.
4. Under Section 324 read with 149, I.P.C. Rigorous imprisonment for 6 months.
5. Under Section 435 read with 149, I.P.C. Rigorous imprisonment for 6 months.
6. Under Section 427 read with 149, I.P.C.—Rigorous imprisonment for 3 months on each of the 6 counts.

The above sentences are ordered to run concurrently.

On application by the said accused, the above sentences have been suspended under Section 389(3) Cr. P. C. till 30th June 1987 enabling them to file an appeal in the High Court, Madras.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (6—5—1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-09 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.



## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

95. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆணைக் குழுக்களை அமைப்பதற்கான காலவரையறையை நீட்டிப்பது குறித்து கல்வித் துறையின் 26—5—1986 ஆம் நாளிட்ட 705 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

96. அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் எஞ்சியுள்ள பிரிவுகள் நடைமுறைக்கு வரும் தேதியினை அறிவிப்பது குறித்து கல்வித் துறையின் 19—8—1986 ஆம் நாளிட்ட 1142 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

97. அழகப்பா பல்கலைக் கழகத்தின் ஆட்சிப் பேரவை, ஆட்சிக் குழு, கல்வி சார்ந்த அலுவல்கள் பற்றிய நிலைக் குழு மற்றும் ஏனைய அதிகாரிகள் தங்கள் பணிகளை 1—10—1986 முதல் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவது குறித்து கல்வித் துறையின் 27—9—1986 ஆம் நாளிட்ட 1517 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1985 ஆம் ஆண்டு அழகப்பா பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1985) 66 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

213. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஆறாவது அறிக்கை. (எட்டாவது சட்டமன்றப் பேரவை) (ஆங்கிலம்).

## இணைப்பு

(593 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 595-க்கான விடையைக் காண்க.)

### ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக்கி கல்வித் துறைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆளுகையில் இருந்து மாறவேண்டும் என்ற அடிப்படையில் ஆசிரியர்களுடைய நிர்வாகப் பணிகளைக் கவனிக்க மாநிலம் முழுவதும் 306 புதிய உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களை தோற்றுவித்து அவ்வலுவலகத்தின் மூலம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களது நலன்கள் கவனிக்கப்படுகிறது. ஆசிரியர்களை பிற பணிகள் எதற்கும் பயன் படுத்தக்கூடாது என்ற வகையில் தக்க ஆணைகளும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கு மாத ஊதியம் தடையின்றி அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தாமதம் ஏற்படாத வகையில், ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலருக்கும் "தன்வைப்புநிதி" என்ற தலைப்பில் புதிய கணக்கு ஒன்று துவக்கப்பட்டு அதில் தொடக்கத்தொகையாக ரூ. 9,91,00,000 அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களுக்கான தனி பணிவிதிகள் விரைவில் வெளியிடப்படும் நிலையில் உள்ளது.

2. ஒன்றிய ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஒன்றியமும், ஒரு தனி அலகாக கருதப்பட்டு, இவர்கள் மாறுதல் நியமனம், மற்றும் பதவி உயர்வு ஆகியவை கவனிக்கப்படுகிறது. பதவி உயர்வுதொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 15-ம் நாளன்று உள்ளவாறு பணி முன்உரிமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு பதவி உயர்வு, அளிப்பது முறைமைப் படுத்தப்பட்டுள்ளது.

3. மேலும் ஒன்றிய ஆசிரியர்கள் பணியில் உள்ளபோது இறக்க நேரிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு உடனுக்குடன் "குடும்ப நலத் திட்டத்தின் கீழ்" உதவித்தொகை வழங்கவும், குடும்பத்தில் உள்ள வாரிசுதாரர் ஒருவருக்கு வேலைவாய்ப்பும் அளிக்க தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்களின் நியமனம், மாறுதல் தொடர்பாக மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உள்ளிட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் கவனிக்கப்படுகிறது.



இவ்வாசிரியர்களின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள உதவிக் கல்வி அலுவலக நிர்வாகப் பணிகள் சரிவர நடைபெறுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவில் ஆய்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் "திடீர் ஆய்வு" செய்யப்பட்டு கவனிக்கப்படுகிறது. அரசு தற்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்க ஏதுவாக தனி இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

### நகராட்சி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள்.

இம்மாநிலத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரை 1—6—1986 முதல் அரசு ஊழியர்களாக்கி அரசு உத்தரவிட்டுள்ளது. (அரசாணை எண் 702, கல்வி, நாள் 23—5—1986) இவர்களை அரசு பணியில் சேர்த்துக்கொள்ள கடைபிடிக்கவேண்டிய முறைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது :—

1. கல்வித் துறை செயலாளர்—தலைவர்.
2. நிதித் துறை செயலாளர்—உறுப்பினர்.
3. நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை செயலாளர்—உறுப்பினர்.
4. நகராட்சி நிர்வாகங்கள் இயக்குநர்—உறுப்பினர்.
5. பள்ளிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்-செயலர்.

மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளின் மேல் அரசு ஆணை பிறப்பிக்கப்படும் என்பதால் அதுவரை நியமனம், மாறுதல், ஊதியம் வழங்குதல் போன்ற எல்லாப் பணிகளிலும், தற்போதுள்ள முறையே தொடர்ந்து கடைபிடிக்கலாம் என்று அரசு தெளிவுரை வழங்கியுள்ளது.

சென்னை-600 005.
13653

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot; Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.